SURESH' IAS ACADEMY

ARISE AWAKE ACHIEVE

# TNPSC

## GROUP-II / IIA MAINS
## 2023

## கட்டாயத்தமிழ்

## 01 - 08

## TEST BATCH QUESTIONS
## Answer Key



MAINS WRITTEN EXAM

SURESH' IAS ACADEMY ★ RESEARCH & DEVELOPMENT ★


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
| --- | --- | --- | --- | --- |
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 97555 52003 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52009 |

# கட்டாயத்தமிழ் தகுதித்தேர்வு

# TNPSC

## GROUP-II / IIA MAINS

## 2023



## பொருளடக்கம்

SURESH' IAS ACADEMY


| தேர்வு | பாடத்திட்டம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்<br>அ) மதச்சார்பற்ற தன்மையுள்ள இலக்கியம்<br>ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத்தன்மை<br>இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம் | 03 |
| 2. | திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்<br>ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமத்துவம், மனிதநேயம் முதலானவை<br>உ) அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு<br>ஊ) திருக்குறளில் தத்துவக் கோட்டுபாடுகள் | 18 |
| 3. | மொழிபெயர்த்தல் : தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல் | 41 |
| 4. | மொழிபெயர்த்தல் : ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல் | 48 |
| 5. | சுருக்கி வரைதல் | 55 |
| 6. | பொருள் உணர்திறன் & சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் | 62 |
| 7. | கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது) | 69 |
| 8. | தமிழ் மொழி அறிவு | 72 |

TEST 1
வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

**1. தனிமனிதனின் அன்றாட வாழ்வியலும், அதன் மீதான திருக்குறளின் தாக்கம் குறித்து விளக்குக.**

**முன்னுரை**

- இப்புவியில் வாழும் அனைத்து உயிரினங்களின் வாழ்க்கை முறைகளிலேயே மனிதனின் வாழ்வியல் முறைதான் சிறந்ததாக கருதப்படுகிறது.
- அப்படிப்பட்ட வாழ்க்கையை கண்ணியமிக்க முறையில் கடந்துவர ஒரு வழிகாட்டுதல் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.
- மனிதன் தன்னுடைய அன்றாட வாழ்வியலில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அனைத்தையும் திருக்குறள் ஒருங்கே கொண்டுள்ளது.
- மனிதனின் அன்றாட செயல்பாடுகள் அத்தனைக்கும் தொடர்பான கருத்துக்களை திருக்குறள் எடுத்துக்கூறுகின்றது.

**ஒழுக்கம்**

- மக்களுடைய மனதில் ஆட்சி புரியவும் அரசாட்சியை நிலை நிறுத்தவும். சரித்திரத்தில் நிலையாக இடம் பெற்றவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் ஒழுக்கம் அடிப்படையாக அமைந்திருப்பதை அறியலாம்.
- அப்படிப்பட்ட ஒழுக்கத்தை கடைபிடிப்பது குறித்து வள்ளுவர்,

> **"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும்"**

- நல்ல ஒழுக்கம் மிகுந்தவனாக ஒருவன் வாழ்ந்தானென்றால் அது சிறந்த குடும்பத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது. ஒழுக்கமின்மை தாழ்ந்த குடிப்பிறத்தலாகும் என்கிறார் வள்ளுவர்.
- ஒருவன் பேசும் ஒவ்வொரு சொல்லும் சொற்கள் தனக்கும் மற்றவர்க்கும் பயனில்லாதவையாக இருந்தால் அவன் எந்தவகையிலும் பயனற்ற ஒருவன் என்பதை இவ்வுலகிற்கு அவனது சொற்கள் தெரிவித்துவிடும் என்பதை

> **"நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
> பாரித்து உரைக்கும் உரை"**

- என்ற குறளின் மூலம் ஒழுக்கத்தின் இன்றியமையாமை குறித்து விளக்குகிறார்.

**பகுத்தறிவு நோக்கு**

- வள்ளுவர்தான் உலகில் தோன்றிய முதல் பகுத்தறிவாளர் அதற்கேற்ப பல கருத்துக்களை பகிர்ந்துள்ளார். அதன்படி

> **"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

- என்ற குறளின் வழியாக மற்றவர் வாய்வழியாகவோ செய்தியாகவோ எதனைக் கேட்டாலும் அதனை அப்படியே நம்பாமல் அதனை பகுத்து ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

**பாலின சமத்துவம்**

- ஆண் மேலாதிக்கம் இன்றளவும் ஆங்காங்கே தழைத்தோங்கும் காலத்தில் இதனை எதிர்க்கும் விதமாக வள்ளுவரால் படைக்கப்பட்ட குறள்கள் புரட்சிகரமானது குறிப்பாக

> **"சிறைகாக்கும் காப்பெவன் எவன்செய்யும் மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை"**

- இக்குறளின் மூலம் ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் தாழ்த்தப்படுவது பெருங்கொடுமை என்பதை உணர்த்துகிறார்
- இதன் மூலம் இவ்வுலக மகளிர் அனைவரும் ஆற்றலும் அறிவும் மிக்கவர்கள் என்று சமூகத்திற்கு அறிவுறுத்துகிறார்.

**சுயக்கட்டுப்பாடு**

- மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி தனிமனித கட்டுப்பாட்டுடன் கூடிய அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாகும். அதன்படி

> **"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற"**

- இக்குறட்பாவின் மூலம் மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது.
- அதுவே அறங்களின் முழுமை மற்றும் மனித வாழ்வின் நெறி என்கிறார்.

**நட்பு**

- மனித வாழ்வில் முக்கிய இடம் நட்புக்கும் நண்பர்களுக்கும் எப்பொழுதும் உண்டு.
- இதனை வள்ளுவர் இவ்வாறு விளக்குகிறார்.

> **"நிறைநீர நீர்வர் கேண்மை பிறைமதிப்
> பின்னீர பேதையர் நட்பு"**

- இக்குறளில் அறிவுடையோர்களுடன் கொள்ளும்நட்பு. பிறைமதி வளருவதைப்போல் வளர்ந்துகொண்டே போகும்
- ஆனால் அறிவில்லாதோருடன் கொள்ளும் நட்பு முழுமதி குறைவதைப்போல அன்றாடம் குறையும் தன்மை உடையது என்று கூறுகிறார்.
- மேலும் அழிவை தரக்கூடிய தீயவழிகளிலிருந்து தன் நண்பனை காத்து நல்வழிப்படுத்தி ஆபத்து காலங்களில் உற்றதுணையாக உடன் நிற்பதே உண்மையான நட்பு என்று

> **"அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
> அல்லல் உழைப்பதாம் நட்பு"**

- என்ற குறளின் மூலம் கூறுகிறார்.

**இல்லறம்**

- இல்வாழ்க்கையில் பரிமாறப்படும் அன்பையும் பண்பையும் விட இல்லற வாழ்வில் பிறர்க்கு செய்யும் அறமே சிறப்பு அவர்கள் பெறும் மக்களே சிறப்புக்குரியவர்கள் என்று

> **"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
> **மன்னுயிர்க் கெல்லாம் இனிது"**

- உலக நேயமே இல்லறத்தின் நோக்கம் என்பதை இது உணர்த்துகிறது. தன்னை ஒத்த உயிர்களின் தன்மையை அறிபவனே ஒப்புரவாளன்.
- சுற்றத்தோடு ஒழுகி வாழ்ந்து உயிர்துறத்தலே சிறந்த பண்பாக விளக்குகிறார்.
- வறியவர்க்கு உதவுதல் விருந்தினரை உபசரித்து அன்பு செய்தலை தலையாய விருந்தோம்பல் பண்பு என்று விருந்தோம்பலின் சிறப்பையும் இல்லறத்தில் ஒழுகும் முறையினையும் விளக்குகிறார்.

**துறவறம்**

- இல்லறம் துறந்து துறவறம் செல்வொர் துறக்க வேண்டிய பொறை, பொச்சாப்பு உள்ளிட்ட அம்சங்களை பற்றி இவ்வாறு விளக்குகிறார்.

> **"யாதனின் யாதனின் நீங்கினான் நோதல்**
> **அதனின் அதனின் இலன்"**

- தம் கருமம் செய்யும் தவத்தோர் அருளோடு புலால் உண்ணாது சினமற்றுப் பிறருக்குத் துன்பம் செய்யாதவராய் இருக்கவேண்டும்.
- துறவறம் மேற்கொள்ள வேண்டுமானால் எல்லாம் இருக்கும் போதே அவற்றை துறக்கவும் அப்படி அனைத்தையும் துறந்தபின்னர் வரும் இன்பமானது அளவில்லாதது என்று விளக்குகிறார்.
- இவற்றை பின்பற்றாதவருடைய துறவறம் இழிபண்பு என்று கீழ்கண்ட குறளின் மூலம் விளக்குகிறார்.

> **"தவம் மறைந்து அல்லவைசெய்தல் புதல்மறைந்து**
> **வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"**

- இவ்வரிகளின் மூலம் தவவேடத்திலிருந்து பெண்களை தம்வயப்படுத்துதல் புதரில் மறைந்துநின்று வேடன் பறவைகளை பிடிப்பது போன்றது என்று கூறுகிறார்.
- இதன்மூலம் திருக்குறள் நற்பண்புகளை மட்டுமல்லாது தீய பண்புகளையும் வெளிச்சம்போடுகிறது.

**முடிவுரை**

- திருக்குறள் கூறும் வாழ்வியல் கருத்துக்களின் அடிப்படையில் மனித வாழ்க்கைக்கு அதனுடைய தேவையினை அறியமுடிகிறது. இதனை அன்றே அறிந்ததால்தான்

கபிலர் :

> **"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட**
> **பனையளவு காட்டும் படித்தால்......"** என்றும்

பரணர் :

> **"வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார்**
> **உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து...."** என்றும்

- திருக்குறளை பெருமைப்படுத்திக் கூறியுள்ளனர்.
- வள்ளுவர் உணர்த்தும் வாழ்க்கை நெறிகளை கடைப்பிடிப்போர் எங்கு போனாலும் எங்கு வாழ்ந்தாலும் அறன் தவறிச் செல்லமாட்டார் என்பது திண்ணம்.

**2. வள்ளுவனின் வாயுறை வாழ்த்து எப்படி எக்காலத்திற்கும் பொருந்தியுள்ளது சான்றுடன் விளக்குக.**

**முன்னுரை**

- கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்குடி என்பது மூத்தோர் சொல்.
- ஆனால் திருக்குறள் என்னும் நூல் தோன்றியிராது இருந்தால் தமிழன் என்று ஒரு இனமும் தமிழ் என்ற ஒரு மொழியும் இந்த உலகத்தாருக்கு தெரியாமலேயே போயிருக்கும் என்று கி.ஆ.பெ.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.
- காலம் கடந்து அனைத்து வகையான மக்களுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை கொண்டுள்ள திருக்குறள் அதிசயமே.
- இரண்டு அடி வாங்கினால்தான் திருந்துவாய் என்றால் அதை வள்ளுவரிடம் வாங்கு என்று கூறும் அளவிற்கு எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய, நம்பகத்தன்மை வாய்ந்த ஒரு நூலாக திருக்குறள் விளங்குகிறது.
- அனைத்து காலச் சூழலுக்கும் இந்த உலகம் தடையின்றி இயங்குவதற்காக வழிமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் திருக்குறள் வழி அறிய முடிகிறது.

**அன்புடைமை**

- வரலாற்று பக்கங்களையும் அன்பை உயர்த்திப் பிடித்தவர்கள், காலம் கடந்து அனைவராலும் போற்றப்படுகின்றனர்.
- அன்னை தெரசா தொடங்கி அனைவரும் இன்றளவும் போற்றப்படுவது அன்புடைமைக்கான ஒரு சிறந்த சான்றாகும்.

> **"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு."**

- அன்பில்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கு மட்டும் உரியது என்று எண்ணுவர்.
- அன்புடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.
- மனதின் அன்பு நிறைந்தவர் வாழை மரத்தின் ஒவ்வொரு உறுப்பும் அடுத்தவர்க்கு உதவுவதுபோல தங்களது வாழ்க்கையை கட்டமைக்கின்றனர்.
- கருணையின் காரணமாகவே

"அவள் கருவுற்று இருந்தால் ஒரு குழந்தைக்குதான் தாயாகி இருப்பாள். ஆனால் கருணையுற்று இருந்ததால்தான் ஒவ்வொரு குழந்தைக்கும் தாயாகி இருக்கிறாள்" என்று அன்னை தெரசா இன்றளவும் நினைவு கூறப்படுவதை நாம் கண்ணெதிரே காண்கிறோம்.

**பண்புடைமை**

- வாழ்வின் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் ஒரு மனிதனின் சமூக செயல்பாட்டில் வெளிப்படும் அவனது பண்பே அவருக்கான மரியாதையை தீர்மானிக்கிறது.

> **"அன்புடைமை ஆன்ற குடிபிறத்தல் இவ்விரண்டும்**
> **பண்புடைமை என்னும் வழக்கு"**

- மிகப்பெரிய வெற்றியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தங்களது சாதனைகளைக்

கடந்து அவர்களின் குணநலன்களின் அடிப்படையிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

- எவ்வளவு உயரம் சென்றாலும் எவ்வித செருக்குமின்றி மக்களோடு ஒத்து வாழும் நபர்களை சான்றோர் என வள்ளுவர் விவரிக்கிறார்.

**கல்வி**

- வாழ்வின் அன்றாடத் தேவைகளைபூர்த்தி செய்யக்கூடிய மேலும் நமது மகிழ்ச்சிக்கு அடிப்படையாக விளங்கக்கூடிய பொன், பொருள் உள்ளிட்டவையே சிறந்த செல்வம் என்ற உலகத்தார் எண்ணுகையில் அதற்கு மாறாக யாராலும் அழிக்க முடியாத சிறந்த செல்வமாக வள்ளுவப் பெருந்தகை கல்வியை முன்னிறுத்துகிறார்.

> **"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்**
> **ந்துணையும் கல்லாத வாறு."**

- கற்றவனுக்கு இவ்வுலகில் உள்ள எந்த நாடும் தன்னாடு ஆகும். எந்த ஊரும் தன்னுடைய சொந்த ஊராகும்.
- இதனை அறிந்தும் சிலர் கல்வி கற்காமல் இருப்பது ஏன் என்று வள்ளுவர் கேள்வி எழுப்புகிறார்.
- இதையே, பழமொழி நானூறு உள்ளிட்ட அறநூல்கள் ஆற்றுணா வேண்டுவது அதாவது கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டா என்று வலியுறுத்துகிறார்.
- மேலும் கல்வி கற்றதோடு மட்டுமல்லாமல் அதற்கேற்ப சமூகச் செயல்பாட்டினை மேற்கொள்ளுமாறு கீழ்க்கண்ட குறள் மூலம் வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

> **"கற்க கசடற கற்பவை கற்றபின்**
> **நிற்க அதற்குத் தக."**

- இக்கருத்தையே முதுமொழிக் காஞ்சி நூல் "மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை" என்று கூறுகிறது.

**அறிவுடைமை**

- நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் சமூக நிகழ்வுகளில் நல்லவை மற்றும் அல்லவையை பகுத்து அறியக்கூடிய தன்மையினை பெற்றுள்ளனர்.
- இதில் அறிவுசெறிந்த மக்கள் அநீதிக்கு எதிராக எப்படி செயல்பட வேண்டும் என்று வள்ளுவம் வழிகாட்டுகிறது.

> **"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
> **அஞ்சல் அறிவார் தொழில்"**

- ஆலோசிக்க வேண்டியதை ஆலோசிப்பதுடன் அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் இருப்பது முட்டாள்தனம்.
- அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடைமையாகும்.
- இதனையே புதுக்கவிதை வாயிலாக "அச்சமில்லை அச்சமில்லை" என்ற வரிகள் வாயிலாக பாரதியார் வெளிப்படுத்துகிறார்.
- அறிவுத்திறன் படைத்தோர் பகுத்தறியும் தன்மை கொண்டு செயல்படும் பொழுது அவர்களை எதிர்க்கும் பகைவர்கள் யாரும் இல்லை என்று அறிவுத்திறனை உயர்த்திப் பிடிக்கிறார், திருவள்ளுவர்.

> **"அறிவு அற்றம் காக்கும்கருவி செறுவார்க்கும்**
> **உள்அழிக்கல் ஆகா அரண்"**

- புத்திசாலித்தனம்தான் துன்பம் வராமல் தடுத்து கொள்வதற்கு ஆயுதம்.
- நம் மனதுக்குள் இருக்கும் கல்வியை பகைவர்கள் எந்த ஆயுதம் கொண்டும் அழிக்க முடியாது என்று இக்குறள் கூறுகிறது.
- இதையே, வைப்புழி கோட்படா என்ற செய்யுள் வாயிலாக சமண முனிவர்கள் விவரிக்கின்றனர்.

**பொறையுடைமை**

- வேகமாக, இயங்கிவரும் உலக வாழ்க்கைச் சூழலுக்கு இடையே பொறுமையை ஒரு சிறந்த குணமாக வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

> **"மிகுதியான் மிக்கவை செய்தாரை தாம்தம்**
> **தகுதியான் வென்று விடல்"**

- பல ஆண்டுகள் மண்ணில் பொறுமையாக புதைந்து இருந்த கரித்துண்டானது வைரமாக மாறுகிறது.
- அதுபோல், உளியால் தரப்படும் வலியை தாங்கிய கற்கள் வணங்கக்கூடிய கடவுள் சிலையாக மாறுவது போல் நாம் அன்றாட வாழ்வில் பொறுமையை கடைபிடித்து வலிகளைத் தாங்கி உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று வள்ளுவம் போதிக்கிறது.

**முடிவுரை**

- பல நூற்றாண்டுகள் கடந்து, காலச் சூழலுக்கு ஏற்ப மனித வாழ்வியல் முறைகள் மாறிக்கொண்டே வருகிறது.
- இவை அனைத்தையும் கடந்து அனைவரும் வழிகாட்டக்கூடிய ஒரு பொது நூலாக திருக்குறள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
- இதனை அறிந்ததால்தான் உருசிய நாட்டின் கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கத்தில் உள்ள திருக்குறள் நூல் பாதுகாக்கப்படுகிறது. இதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு கடத்தக்கூடிய காலம் கடந்து நிலைத்து நிற்கக்கூடிய நூல் திருக்குறள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. முக்காலமும் கடந்து திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் ஏற்ற கருத்துக்களுடன் குன்றின் மேலிட்ட விளக்கு போல திகழ்கிறது.

**3. மாதானுபங்கியின் படைப்பு எவ்வகையில் மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியமாகத் திகழ்கிறது?**

**திருக்குறள் மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்**

**முன்னுரை**

- திருக்குறள் சமூகத்தைச் சார்ந்த அனைத்து வகையான மக்களுக்கும் ஏற்ற ஒன்றாக விளங்குகிறது.
- இதன் கருத்துக்கள் எந்த ஒரு தனிப்பட்ட கடவுளரையோ, நம்பிக்கையையோ உயர்த்திப் பிடிப்பதாக இல்லை.
- காற்று போல அனைவரின் பயன்பாட்டுக்கும் உரியதாக எளிதில் அணுகக்கூடிய தன்மை வாய்ந்ததாக விளங்குகிறது.
- திருக்குறள் பல்வேறு குறள்களின் வாயிலாக மதச்சார்பின்மையையும் மக்களின் ஒற்றுமையையும் வலியுறுத்துகிறது.
- அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**வள்ளுவரின் தனித்துவம்**

- திருக்குறளின் எந்த ஒரு பகுதியிலும் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று குறிப்பிடப்படவில்லை.

- 108 மொழிக்கு மேல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தாலும் அந்தந்த மொழிகளின் சிறந்த ஒன்றாக திருக்குறள் கருதப்படுகிறது.
- எந்த சூழ்நிலையிலும் யாவருக்கும் ஏற்ற ஒரு இலக்கியமாக திகழ்கிறது. கருத்தினை ஆழமாக நிலைநாட்ட மேற்கோள்களுக்கான ஒரு கருவூலமாக திருக்குறள் திகழ்கிறது.
- திருக்குறள் யாரையும் உயர்த்திப் பிடிக்கவில்லை என்பதைப் போலவே யாரையும் தாழ்த்தவும் இல்லை.
- சமத்துவ முறையில் வாழ்க்கையைப் பேண வழிவகை செய்கிறது.

**திருக்குறளில் சமத்துவம்**

- பொருளாதார நிலை வாழ்வியல் அமைப்பு போன்ற பல்வேறு விஷயங்களில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளில் இருந்தாலும் மற்ற ஏற்றத்தாழ்வுகளை மறுக்கிறார்.

> **“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்”**

- எனும் குறள் வாயிலாக பிறப்பால் நாம் அனைவரும் ஒன்றே. நாம் முன்னேறிச் செல்வதும், பின்னடைவை அடைவதும் நாம் செய்யும் செயல்களிலும், உழைப்பிலும்தான் உள்ளது என்று கூறி, சாதி, மத ஏற்றத்தாழ்வுகளை அடியோடு மறுக்கிறார்.

**திருக்குறளில் வழிபாடு**

- எந்தவொரு கடவுளையும் பின்பற்றவில்லை என்றாலும் யாரை வழிபட வேண்டும்? யாருடைய மார்க்கத்தை பின்பற்ற வேண்டும்? யார்மீது பற்று கொள்ள வேண்டும் என்பதையும் குறள் ரீதியாக விளக்குகிறார்.

> **“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
> **பற்றுக பற்று விடற்கு.”**

- இவ்வுலகில் உள்ள விருப்பு வெறுப்பு அத்தனையும் கடந்து ஆசைகளை துறந்தவனே சான்றோன் ஆவார். அவரைப் பின்பற்ற வேண்டும். அவர் வழி நடக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

> **“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
> **நற்றாள் தொழா அர் எனின்”**

- இக்குறட்பாவின் மூலம் தூய அறிவு, சிறந்த எண்ணங்களைக் கொண்ட மனிதர்களை கடவுளாக சித்தரிக்கிறார்.
- அவர்களை வணங்காதவர்கள் எத்தனை கற்றாலும் அதனால் பயனில்லை என்றுரைக்கிறார்.

**யார் கடவுள்?**

- மதச்சார்பற்ற தன்மையை முன்னிறுத்தும் கடவுள் நோக்கில் திருக்குறள் கடவுளே இல்லை என்று சித்தரிக்கவும் இல்லை.

> **“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
> **பகவன் முதற்றே உலகு”**

- என்ற குறட்பாவின் மூலம் அகரத்தை அடிப்படையாகக் கொண்ட எழுத்துக்கள் இருக்கும்.
- அதேபோல் கடவுளை இவ்வுலகம் அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்று குறிப்பிடுகிறார்.
- மேலும் கடவுள் என்று ஒருவர் இருப்பதாக உறுதிபடுத்துகிறார்.
- ஆனால் அவரை சந்திப்பதற்கு முக்கிய வழியாக ஒழுக்கத்தை முதன்மைப்படுத்துகிறார்.

> **“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற”**

- மனதளவில் தூய்மையாக இருப்பதே அறம், மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே ஆதலால் தூய்மையான எண்ணங்களை கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

**திருக்குறளில் கடவுள் நம்பிக்கை**

- மதச்சார்பற்ற இலக்கியமாக திருக்குறள் திகழ்ந்தாலும் கடவுளை உருவகம் செய்து நோக்கி பயணிப்பதற்கான முதல் தகுதியாக ஒழுக்கத்தை முன்னிறுத்துகிறார்.

> **“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
> **கெடுக உலகியற்றி யான்”**

- இந்த உலகில், இறைவனால் படைக்கப்பட்ட அனைவரும் ஒன்றுதான்.
- அவர்களுள் ஒருசிலர் இரந்து வாழும் நிலையில் இருந்தால், இறைவனும் இரப்பவரைப் போல் அலைந்து கெடுவான் என்றும், அனைவரும் சமத்துவமாக இருக்கும் இடத்தில்தான் கடவுள் வாழ்கிறார் என்று ஆன்மீகத்தின் வாயிலாக சமத்துவத்தை முதன்மைப்படுத்துகிறார்.

**சமயஞ்சாரா அறம்**

- பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை எனத் திருவள்ளுவர் கூறுவதைச் சமயஞ்சாரா அறக்கோட்பாடாகக் கருதலாம்.
- இதன் நுண்விளக்கத்தைச் சீத்தலைச் சாத்தனார், அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின், உண்டியும் உடையும் உறையுளும் அல்லது இல் என்கிறார்.
- உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்றும், உடம்பை வளர்த்தோம் உயிரை வளர்த்தோம் என்றும், உணவையும் உயிரையும் உலகையும் வாழ்வையும் பொருட்படுத்திச் சான்றோம் பேசியுள்ளனர்.
- பசிப்பிணி என்னும் ஒரு பாவி என்றும், கையது கொண்டு மெய்யது பொத்தி என்றும், அழிபசி வருத்தம் என்றும் அடிப்படைத் தேவைகள் நிறைவேறாததால் விளையும் துன்பங்களைப் புலப்படுத்தியுள்ளனர்.
- இவற்றுக்குக் கடவுள் மற்றும் சமயச் சிந்தனைகளைத் தாண்டிய தீர்வுகளை உலக வாழ்விலேயே தேட வேண்டும் எனச் சான்றோர் கருதினர்.
- சமூக அமைதிக்குச் சமயங்களால் பங்கம் வராமல் காத்து நல்லிணக்கத்துடன் மனிதர்கள் அனைவரும் ஒருங்குகூடி வாழும் இயல்பையே அவர்கள் வலியுறுத்தினர்.

**முற்போக்கு**

- புகழ்பெற்ற உயிரியல் அறிஞரான ஸ்டீபன் ஜே கௌட் “இயற்கையிடமிருந்து விடைகளை மறுப்பேதும் சொல்லாமல் அப்படியே ஏற்கமுடியாது என்றும், பகுத்தறிவின் மூலமே அறத்தை வரையறுக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.
- அறக்கோட்பாட்டாளர்கள் எடுக்கும் முடிவுகள் பொது நலன்களைக் கருதியதாக அமைய வேண்டும்.

- காரண காரிய அடிப்படையிலான நன்னெறிகளைக் காலத்திற்கு ஏற்ப மாற்றலாம்; புதுப்பிக்கலாம்.
- தீங்கு பயக்காத நன்னெறிகளையே தனிநபரும் சமூகமும் பின்பற்ற வேண்டும்.
- அறமும் பகுத்தறிவும் உள்ள பண்பட்ட சமூக அமைப்பை உருவாக்க வேண்டும்.
- இத்தகைய சமயஞ்சாரா அறக்கருத்துக்களைத் திருக்குறளினும் காண்கிறோம்.
- கடவுள் பற்றிக் கூறும்போது, எந்தச் சமயக் கடவுளையும் குறிப்பிடாமல், தூய அறிவுடையவன், மெய்யான ஒழுக்கநெறி உடையவன், எண்வகை குணமுடையவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் எனச் சாயப் பொறை பேசுகிறார், வள்ளுவர்.

**முடிவுரை**

- அனைத்து மக்களும், எவ்வித தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இலக்கியமாக திருக்குறள் திகழ்கிறது.
- தனிப்பட்ட முறையில் செய்திகள் வாயிலாக யாரையும் உயர்த்திப் பிடிக்காமல், சமத்துவத்தையும் தனிமனித வாழ்வியல் ஒழுக்கத்தையும் முன்னிறுத்துகிறது.
- அதனால்தான் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அடுத்த தலைமுறைக்கு கடத்தக்கூடிய உன்னத இலக்கியமாக திகழ்கிறது.
- வள்ளுவத்தில் குறள்கள் வாயிலாக செறிந்து கிடக்கும் மதச்சார்பின்மை கூறுகள், பொதுநெறி பண்புகள், அறம் கூறும் குறட்பாக்கள் ஆகியவற்றை கொண்டு மதம் கடந்து மனிதத்தை உயர்த்திப் பிடிக்கக்கூடிய இலக்கியமாக திருக்குறள் விளங்குகிறது.

**4. புவியில் உயர் பிறப்பால் கருதப்படும் மனிதர்களுக்கு பொய்யா மொழியை காட்டும் அற வழிகளை சான்றுடன் விளக்குக.**

**முன்னுரை**

- இறைவன் மனிதனுக்கு அளித்தது கீதை : மனிதனால் இறைவனுக்கு அளிக்கப்பட்டது திருவாசகம். மனிதனால் மனிதனுக்கு அளிக்கப்பட்டது திருக்குறள்.
- அந்த வகையில் வாயுறை வாழ்த்தின் வழியாக பல்வேறு பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றும் மக்களுக்கு பொதுவான அறநெறிகளை திருக்குறள் வலியுறுத்துகிறது.
- எந்தவிதமான பேதமும் இன்றி அனைத்து மொழியும் நாடுகளும் கடந்து அந்தந்த மொழிகளின் மொழியாக்கம் செய்யப்பட்டு, சிறந்த இலக்கியமாக திகழ்கிறது.
- அனைவராலும் கொண்டாடப்படும் திருக்குறள் ஆதலால் உலகப் பனுவல் என்னும் பொதுப் பெயர் கொண்ட போற்றப்படுகிறது.

**அறம்**

- மனிதன் தன் வாழ்வின் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகியவற்றுக்கான வரையறையே அறம் என்று பொதுவாக அறியப்படுகிறது.
- மக்களின் வாழ்வியல் தன்மைகளை பொறுத்து ஒவ்வொரு இடத்திற்கும் அறமானது வேறுபடுகிறது.
- ஆனால் திருக்குறள் மனித வாழ்வில் சிறந்த ஒரு நிலையை அடைய அனைவருக்கும் பொதுவான வழிகாட்டுதல்களை எடுத்து இயம்புகிறது.

**காலமறிதல்**

- வாழ்வின் அடுத்தகட்ட நகர்வை நோக்கி, அனைவரும் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.
- இந்த நகர்வு, பெரும்பாலும் முன்னேற்றமாக அமைய வேண்டும் என்பதையே அனைவரின் வேண்டுதலாக உள்ளது.
- அந்த இலக்கை அடைய அனைவரும் தங்களால் ஆன முயற்சியை செய்து வருகின்றனர்.
- எத்துணை முயற்சி செய்தாலும் கிட்டாத வெற்றியும் அடைய முடியாத இலக்கும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் எளிதில் அடைய முடியும் என்ற நம்பிக்கையிலேயே அதை நோக்கிய பயணத்தை இன்றளவிம் தொடர்கிறோம்.

> **"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
> **குத்தொக்க சீர்த்த இடத்து"**

- வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல அமைதியாக இருக்க வேண்டும். உரிய காலம் வாய்த்ததும், கொக்கைப் போல் விரைந்தும், செயலைச் செய்து முடிக்க வேண்டும்.
- வரலாற்றில் இதற்கு சான்றாக கட்டபொம்மன், வேலு நாச்சியார் உள்ளிட்ட ஆட்சியாளர்களை கூறலாம்.
- போர் சூழல் காரணமாக ஆட்சியை இழந்தபோதிலும் எதிரி வலுவிழக்கும் உரிய தருணத்திற்காக காத்திருந்து மீண்டும் நாட்டைக் கைப்பற்றும் நடவடிக்கையே இதற்கான சிறந்த உதாரணமாகும்.

**இன்னா செய்யாமை**

- ஒருவர் நமக்கு எவ்வகையான தீங்கினை செய்தாலும் அவர்களிடம் கோபத்தை வெளிப்படுத்தாது உரிய காலம் வரை காத்திருந்து நம் தகுதியை உயர்த்திக்கொண்டு அவர்களை வெல்ல வேண்டும்.
- இதனை வள்ளுவர்,

> **"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
> **நன்னயம் செய்து விடல்"**

- வரலாற்றில் சுதந்திரத்திற்கு முன்பு ஒருமுறை காந்தி, இந்தியர் என்பதற்காக முதல் வகுப்பில் பயணம் செய்ய மறுக்கப்பட்டார்.
- மேலும் சிறைவாசத்தின்பொழுது ஆங்கிலேயர்களால் தாக்கப்பட்டார்.
- அவர் ஆடைமீது படிந்திருந்த ஆங்கிலேயர் ஒருவரின் காலணி அளவைக் கொண்டு அவருக்காக மேலும் ஒரு காலணி செய்து பரிசளித்தார்.
- இதைப் பெற்ற ஆங்கிலேய அதிகாரி அவர் செயலுக்காக வருத்தம் அடைந்தார்.
- இச்செயல்பாட்டை இக்குறளுக்கான சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

**தெரிந்து செயல்வகை**

- ஒரு செயலைச் செய்வதற்கு முன்பே பலமுறை யோசிக்கலாம். ஆனால் அதை செய்யத் தொடங்கியபின்பு யோசிக்கக்கூடாது.

- இதனை மிகப்பெரிய குற்றமாக திருவள்ளுவர் தெரிவிக்கிறார்.

> **"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
> **எண்ணுவம் என்பது இழுக்கு."**

- போர்க்களத்தில் யானை மீது அமர்ந்திருந்து போர் புரியும் ஒரு வீரன் தான் வாள்வீசும் யுக்தி உள்ளிட்டவற்றில் தெளிவான நடைமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.
- ஒருவேளை அவன் அச்சப்பட்டாலோ அல்லது தன்னுடைய பாதையில் பின்வாங்கினாலோ அவனுடைய அந்த பயம் அவனைச் சுமந்து நிற்கும் யானையால் உணரப்படும்.
- இது போர் வெற்றியை தடைபடுத்தும் அல்லது பின்னடைவை ஏற்படுத்தும்.
- இதையே வள்ளுவர் எந்தச் செயலையும் செய்யத் துவங்கியதற்கு பின்பு யோசிப்பது பெரும் குற்றம் என்று முதுமொழி வாயிலாக கூறுகிறார்.

**பெரியாரைத் துணைக்கோடல்**

- ஒவ்வொரு தனிமனிதருக்கும் ஏதாவது ஒரு வகையில் நண்பர்கள் உள்ளனர்.
- அப்படி நாம் அமைத்துக் கொண்ட நட்புவட்டம் நம்மைவிட அறிவிலும் வயதிலும் மூத்தோர்களாக இருக்க வேண்டும் என்று நான்முகனார் தெரிவிக்கிறார்.

> **"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
> **கெடுப்பார் இலானும் கெடும்"**

- குற்றம் கண்ட இடத்து இடித்து திருத்தும் பெரியாரின் பாதுகாப்பை தேடிக்கொள்ளாத அரசன் தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் இல்லை என்றாலும் தானே கெட்டழிவார் என்று பெருநாவலார் வலியுறுத்துகிறார்.
- இதனால்தான் ஆற்றல் வாய்ந்த அறிவுசெறிந்த மன்னர்கள்கூட தங்களது அவையில் அமைச்சர்களையும் புலவர்களையும் மேலும் பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்களையும் பணியமர்த்தி அவர்களது ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டுள்ளனர்.
- கற்காலம் முதல் தற்காலம் வரை ஒவ்வொரு தனிமனிதரும் தனக்கான ஒரு குருவை ஏற்று அவர் மார்க்கத்தை பின்தொடர்கின்றனர்.
- பெரும் பேறுபெற்ற விவேகானந்தர் பலரால் பின்பற்றப்பட்டாலும் அவர் இராமகிருஷ்ண பரமஹம்சரை குருவாக ஏற்று அவர் வழி நடந்தார்.
- இதன் மூலம் மூத்தோர் சொல்வன்மையும் அவர்களுடைய வழிகாட்டுதலையும் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியத்துவம் என்று உத்தரவேதம் தெரிவிக்கிறது.

**செய்ந்நன்றி அறிதல்**

- மனிதர்களுள் மிகச்சிறந்த குணமாக கருதப்படுவது நன்றி மறவாமை ஆகும்.

> **"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்ந்நன்றி கொண்ட மகற்கு"**

- தனக்கு ஒருவர் மறைமுகமாக உதவி செய்திருந்தாலும் அவருக்கு நன்றி செலுத்தும் வழக்கத்தினை தமிழ்ச்சமூகம் தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கு இலக்கியங்கள் மற்றும் கலைவடிவங்கள் வாயிலாக கற்றுத்தருகின்றன.
- போரில் இறந்த வீரனுக்கு நன்றி செலுத்தும் விதமாக மூதாதையர் காலத்தில் நடுகற்கள் உருவாக்கப்பட்டு இன்றளவும் அவர்கள் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றனர்.
- இதுவே நன்றி செலுத்துதலுக்கான சிறந்த உதாரணமாகும்.
- நன்றி செலுத்துதல் என்பது சக மனிதர்களுக்கு என்பதைக் கடந்து உயிரற்ற அஃறிணை பொருட்களுக்கும் என்று நம்முடைய மூதாதையர் போதிக்கின்றனர்.
- இன்றளவும் தொழில்ரீதியாக அதற்கு பயன்படுத்தப்படும் கருவிகளை வழங்குவதும் உழவர்கள் சூரிய பகவானை வணங்கும் விதமான பண்டிகைகளும் இதற்கான சிறந்த உதாரணமாகும்.

**ஒப்புரவறிதல்**

- தாம் தேவைக்கு அதிகமான செல்வம் நம்மிடம் சேரும் எனில் அது அடுத்தவர்க்கு உதவுவதற்காகத்தான் என்று வள்ளுவம் தெரிவிக்கிறது.

> **"தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
> **வேளாண்மை செய்தல் பொருட்டு"**

- மேற்கண்ட குறளின் மூலம் ஒப்புரவறியும் குணம் மிகுந்த சான்றோர்கள் பாடுபட்டு தாங்கள் சம்பாதித்த செல்வமெல்லாம் உதவிபெறத் தகுந்தவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான் இறைவன் நமக்கு கொடுத்திருக்கிறான் என்று எண்ணுவார்கள்.

**முடிவுரை**

- நீதித் திருக்குறளை "நெஞ்சாரத் தம் வாழ்வில் ஓதித் தொழுது எழுக ஓர்ந்து" என்ற கவிமணியின் கூற்றுக்கு இணங்க தினமும் படித்து அறிந்து பின்பற்றப்பட வேண்டிய பல அறக்கருத்துக்களை மனித வாழ்விற்கு திருக்குறள் கூறுகிறது.
- இதனை தவறாது வாழ்வில் பின்பற்றுபவர்கள் மனப்பேரின்பம் அடைந்து சிறந்த வாழ்வை எதிர்கொள்வர் என்பதே திண்ணம்.

**5. உயிர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு எதுவும் இல்லை என்று சமத்துவத்தை வள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார்?**

**முன்னுரை**

- உலகில் மதம், சாதி மற்றும் வாழ்வியல் முறை ஆகியவற்றின் அடிப்படையிலும் பொருளாதார ரீதியாகவும் மக்கள் பலதரப்பட்ட படிநிலைகளில் வாழ்ந்து வருகின்றனர்.
- அவர்களின் நிலைக்கு ஏற்ப சமுதாயத்தில் மதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக ஏற்படும் ஏற்றத்தாழ்வானது சமூகத்தில் சமநிலையின்மையை உருவாக்குகிறது.
- இச்செயற்கை நிலையை திருவள்ளுவர் முழுவதுமாக மறுக்கிறார்.
- மேலும் பல்வேறு கருத்துக்களை கூறும் திருக்குறள் மூலம் ஏற்றத்தாழ்வினை களைந்து, சமத்துவத்தை நிலைநாட்டுகிறார்.

**திருக்குறள் வழி சமூகம்**

- திருவள்ளுவர் புவியில் உள்ள அனைத்து உயிரினங்களும் பிறப்பால் ஒன்றுதான் என்று கீழ்க்கண்ட குறள் வாயிலாக வலியுறுத்துகிறார்.

> **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"**

- நாம் செய்கின்ற செயல்கள் நம்முடைய தூய எண்ணங்களால் வெளிப்படுகின்றனர்.
- ஆகையால் சமூகத்தில் ஒரு மனிதனின் முன்னேற்றமும் பின்னடைவும் அவன் செய்யும் செயல்களால்தான் அளவிடப்படுகிறது என்று நான்முகனார் எடுத்துரைக்கிறார்.

**நடுவுநிலைமை**

- சமத்துவத்தைப் பேணுவதற்கு நடுவுநிலைமை மிக முக்கிய கருவியாக விளங்குகிறது.
- நடுவுநிலை தன்மையுடன்விளங்குபவர்கள் ஒரு சமத்துவமான சமுதாயம் அமைவதற்கு வழிவகை செய்வதாக திருக்குறள் கூறுகிறது.

> **"சமன்செய்த சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அணி"**

- தான் சமமாக இருந்த தன்னிடம் வைக்கப்படும் பொருட்களின் எடையை துலாப்போல் சரியாக காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதை சான்றோருக்கு அழகாகும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**பொறையுடைமை**

- வள்ளுவன் வாக்கின் வழியாக அனைவரையும் சமமாக கருதுவதற்கு பூமியை சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

> **"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை"**

- பூமி தம்மைத் தோண்டுபவரையும், தன்னைப் பேணிக் காப்பவரையும் சமமாக எண்ணி இருவரையும் தாங்குகிறது.
- இருவருக்கும் இடையில் எவ்வித பாரபட்சமும் காண்பிப்பது இல்லை.
- அனைவருக்கும் பெய்யும் மழை போல அனைவரையும் தாங்கும் பூமி போல அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான சமுதாயம் உருவாகும்படி செயல்பட வேண்டும்.

**கண்ணோட்டம்**

- சமூகப் படிநிலைகளில் பொருளாதாரத்தின் அடிப்படையில் மக்கள் பல்வேறு வகையில் வேறுபட்டுள்ளனர்.
- வறுமையுற்றோருக்கு உதவி புரிந்து சமத்துவமான சமுதாயம் அமைய செல்வம் படைத்தவர்கள் வழிவகை செய்திடல் வேண்டும்.
- ஒரு சமூகத்தின் நிலை அறிந்து, அதைப் பேணிக் காப்பதற்கான கண்ணோட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவை என்பதை கீழ்க்கண்ட குறள் வாயிலாக வாயுறை வாழ்த்து தெரிவிக்கிறது.

> **"பண்என்னாம் பாடற் கியைபின்றேல்: கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்"**

- பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் என்ன பயன்? அதுபோலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்? ஆதலால் இச்சமூகத்தை கருணை பார்வை கொண்டு பார்க்க வேண்டும் என்று திருக்குறள் தெரிவிக்கிறது.

**எள்ளாமை**

- ஒருவரின் பொருளாதார நிலையே அவரின் புறத்தோற்றத்தை நிர்ணயிக்கிறது.
- அதனை வைத்து, எந்தச் சூழ்நிலையிலும் எள்ளி நகையாட கூடாது.
- சமூகத்தின் அனைவரும் சமமானவர்கள்தான். இந்த சமூகம் இயங்குவதற்கு ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியமானது ஆகும்.
- தனி ஒரு மனிதனின் இன்றியமையாத தன்மையை கீழ்க்கண்ட குறள் வாயிலாக செந்நாப்போதார் தெரிவிக்கிறார்.

> **"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து"**

- ஒரு பெரிய தேர் ஓடுவதற்கு அச்சாணியின் பங்கு மிக முக்கியமாகும். அது போல சமூகத்தில் ஒரு மனிதன் எந்த நிலையில் இருந்தாலும் அவருடைய பங்களிப்பு சமூகச் செயல்பாட்டுக்கு மிக முக்கியமாகும்.

**சமூக ஒற்றுமை**

- செல்வமானது பெருந்தகுதி உடையவனிடம் சேருதல், பிணித்தீர்க்கும் மருந்தாகி பயன்தர தவறாத மருந்து மரம் போல எப்போதும் பயன்படும்.
- இக்கருத்தை சமூகத்தில் நிலைப்பாட்டுடன் அடுத்து வரும் குறள் வாயிலாக வாயுறை வாழ்த்து வலியுறுத்துகிறது.

> **"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்"**

- இந்த குறளின் திருவள்ளுவர் சமூக ஒற்றுமையையும், சுயமாக இல்லாத சமூக உருவாக்குவதைப் பற்றி கூறுகிறார்.
- ஒரு கிராமத்தில் உள்ள நீர்த்தேக்க தொட்டியானது பாகுபாடின்றி அனைவருக்கும் எவ்வாறு உதவுகிறதோ அதுபோல ஒருவரிடம் இருக்கும் அளவுக்கு அதிகமான செல்வம் எவ்வித பாகுபாடின்றி அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

- சங்ககாலம் முதல் அனைத்து அற இலக்கியங்களும் சமத்துவமான சமுதாயம் என்கிற கோட்பாட்டை வலியுறுத்தி வருகின்றனர்.
- இதற்கான செயல்பாடாக அடுத்தவருக்கு உதவுதல், பகிர்ந்துண்ணுதல், அன்புடைமை உள்ளிட்ட சிறந்த கருத்துக்கள் அடுத்த தலைமுறைக்கு இலக்கியங்கள் வாயிலாக கடத்தப்பட்டு வருகின்றனர்.
- எனினும், எந்தஒரு கடவுளரையோ கொள்கையையோ உயர்த்திப் பிடிக்காத திருக்குறளில் கூறப்படும் கருத்துக்குத்தான் அனைவராலும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- கல்வி நிலையங்கள், கட்டுரை மற்றும் சமூகப் பேச்சுக்கள் வாயிலாக தொடர்ந்து மேற்கோள் காட்டப்பட்டு அதன் கருத்துகள் அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுகின்றன.

**6. திருக்குறள் வழிநின்று வாழ்வியல் அறத்தினை விளக்குக.**

**முன்னுரை**

- திருக்குறள் நீதி நல் மட்டுமன்று. அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல்.
- வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடுஎன்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

**பொருண்மைச் சிறப்பு**

- சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும், மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது.
- வள்ளுவம் தமிழனுக்குரியது என்னும் நிலையைகட கடந்த உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி வள்ளுவன் தன்னை உலகனுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் புகழ்ந்துரைத்தார்.
- வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார், எல்லாப் பொருளும் இதன் பால் உள என்று தெளிந்துரைத்துள்ளார்.
- இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட் சிறப்பை உணர்த்துவன.

**வாழ்வியல் பதிவு**

- வள்ளுவன் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது.
- வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்றுவிடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது.
- இதனை சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது என்றும் அறிஞர் கருத்தினால் அறியலாம்.
- வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன.
- மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் – வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் என்னும் முத்தமிழ் அறிஞரின் கருத்தும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**முதன்மைப் பயன்**

- உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து, நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழிகாட்டுகிறது.
- எதிலும் விரைவும் ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மைத் தெளிவுபெறும் வள்ளுவர் வாக்கு ஊன்றுகோலாய் இருக்கிறது.

**பன்முகப்பார்வை**

- தன் மனிதநிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள், எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.
- தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த மரபுத்தளைகளை உடைத்து, மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனிமனிதத் தூய்மையை உருவாக்க வள்ளுவர் முயன்றுள்ளார்.

**மரபுகளைத் தவிர்த்தல்**

- மது அருந்துதலும் புலால் உண்ணுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலையை மாற்றி மனித மனத்தினை, வாழ்வின் பயனைத் தடம் மாற்றும் தவறுகள் என வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
- இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஃஷந்தி மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும் மகிழந்து இனிது உறைமதி பெரும எனவும் சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே பெரியகட் பெறினே யாம்பாடத் தான் மகிழ்ந்தது உண்ணும் மன்னே என்றும் கள்ளுண்டுகளித்தலையும், கள்ளுண்ணல் பெருமித வாழ்வாக இருந்த மரபுகளையும் பின்பற்றக்கூடிய ஒழுக்கமாய்க் காட்டும் வழக்கினை மாற்றி அதனைச் சமுதாய தீமையாக உரைத்தவர் வள்ளுவர்.
- உண்ணறக் கள்ளை என்றும் அது ஈன்றாள் முகத்தேயும் இன்னாதது எனவும் நஞ்சுண்டார் கள் உண்பவர் என்றெல்லாம் மது அருந்துதலின் தீமையை உணர்த்தித் தனிமனித வாழ்வு சிறக்கும் நெறியைக் காட்டியுள்ளார் வள்ளுவர் எனலாம்.
- புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுநர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.
- தெய்வப்புலவர் வள்ளுவர், புலால் மறுத்தல் என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

> **"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
> **எல்லா உயிரும் தொழும்"**

- என்னும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது.
- இன்றைய தமிழக அரசு உயிர்க்கொலை, உயிர்ப்பலி கூடாது எனச் சட்டம் கொண்டு வந்துள்ள நிகழ்காலச் சூழலில் வள்ளுவரின் வாழ்வியல் நெறி வெற்றி பெற்றுள்ளதாகவே கருதலாம்.

- அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனிமனித வாழ்க்கையை வள்ளுவர் பண்படுத்தியுள்ளார்.

**அறநெறிப்பட்ட வாழ்க்கை**

- மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும்.
- மனித மனங்களை விரிவுபடுத்தி, அறவழியப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகவும் உள்ளது.
- மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமை மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

> **"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற"**

- என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது.
- அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார்.
- அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல் என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர்.
- மனந்தூய்மை, ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

**வாய்மை**

- திருக்குறள் அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது.
- இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினையும் திறம்படக் காட்டுகிறது.
- வாய்மை என்பதே தலையாய அறம் என்கிறது வள்ளுவம்.
- பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் மலர்ச்சியை உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம்.
- அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

> **"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
> **செய்யாமை செய்யாமை நன்று"**

- என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

**மும்மை அறம்**

- மனிதர்களின்வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.
  1. ஆன்மீக அறம்
  2. ஈதல் அறம்
  3. காதல் அறம்
- கடவுளை அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை என்றும் கருதுகோள் நிலையில் வைத்த மனித ஒருமைக்கும் சமுதாய அமைதிக்கும் வள்ளுவர் குறள் வழிக் குரல் கொடுத்துள்ளார்.
- முதற் குறட்பாவில் உலகு என நினைவூட்டி உலகளாவிய நேயத்தை மறைமுகமாக உணர்த்தியுள்ளார்.
- கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு, அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை தந்துள்ளது.
- இதனை, வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் ஆணும் அல்ல, பெண்ணுமல்ல.
- வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள், கோட்டைகள் இல்லை.
- வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்கும் இல்லை. அது பேரறிவு, தூய்மையான அறிவு, குணங்களின் திருவுறு, இன்பத்தின் திருவுரு, அறத்தின் அடையாளம் என்னும் அறிஞர் கருத்தும் இதனைத் தெளிவுபடுத்தும்.

**ஈதலறம்**

- மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை.
- பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால், மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுகிறான்.
- போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும்.
- ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும்.
- வள்ளுவர் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர்.

> **"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல**
> **ஊதியம் இல்லை உயிர்க்கு"**

- கொடுத்துப் புகழடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது.

**காதலறம்**

- காமத்துப்பால் அறவழியப்பட்ட காதலுறவுகளை எடுத்துரைத்துள்ளது.
- காதலையும், ஆண், பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார்.
- காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு நிலை ஆகியவற்றை இனிமை பயக்கப் பாடி, அன்பெனும் நெறிக்குள், மனங்களின் சங்கமத்திற்குள் மாசுபடாத வாழ்வியல் படிநிலையை வடித்துத் தந்துள்ளார்.
- களவையும் கற்பையும் வகைப்படுத்தி மனிதம் அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் தந்துள்ளார்.
- பிறன்மனை நயத்தலையும் பரத்தையர் உறவையும் பெருங்குற்றமாகச் சொல்லி அன்புடைய காமத்தைச் சமுதாய அறமாகத் தந்துள்ளார்.

**ஆண், பெண் சமனியம்**

- ஆண் – பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது.
- ஆண் – பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது.
- ஆண் மேலாதிக்க காலத்தில், அதற்கெதிரான. துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது பெண்களின் உரிமைக்காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார்.

- பெண் ஆணுக்கு இணையானவள் ஆற்றல் மிக்கவள் என்பதை

> **"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**
> **நிறைகாக்கும் காப்பே தலை"**

- என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம்.
- இத்தகைய வள்ளுவரின் வழிகாட்டல்தான் பிற்காலத்தில் பாவலன் பாரதியை வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் என்று பாட வைத்தது எனலாம்.

**சமுதாயக் கொடுமைகள்**

- சாதி மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் சமுதாயக் கொடுமைகள்.
- இதனை மாற்ற வள்ளுவரின் குறட்பாக்கள் முனைந்துள்ளன.
- பிறப்பால் இனம் பிரித்த வருணாசிரம முறையை வள்ளுவம் எதிர்க்கிறது.
- பிறப்பால் அனைவரும் ஒன்றே என ஓங்கி ஒலிக்கிறது.

> **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்"**

- என்னும் குறட்பா வள்ளுவரை ஒரு சமுதாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகிறது.

**பகுத்தறிவு நோக்கு**

- வள்ளுவரைத் தமிழ்கூறும் உலகில் தோன்றிய முதல் பகுத்தறிவாளர் எனக் கூறலாம்.
- எந்தவொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி, உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை

> **"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு",**
> **"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

- என்னும் குறட்பாக்கள் இதற்குச் சான்றாகும்.

**மானுடத்தின் மலர்ச்சி**

- வள்ளுவரின் நெம்புகோல் அடிகள் மானுடத்தின் மலர்ச்சி எனலாம்.
- மரபுகளைத் தகர்த்து புதுமையை நிலை நிறுத்தவது வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது.

**முடிவுரை**

> **"அந்தணர் என்போர் அறவோர்**
> **அன்பின் வழியது உயிர்நிலை**
> **மனநலம் மன்னுயிர்க்குக் காக்கம்**
> **அறத்தால் வருவதே இன்பம்"**

- என்றெல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்க்கையை மலர்ச்சியடையச் செய்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம்.

**7. பொய்யாமொழி என்றறியப்படும் திருக்குறள் மானுடத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தினை விவரி?**

**மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்**

**முன்னுரை**

- மானுடம் என்ற சொல் ஒட்டுமொத்த மனித இனத்தையும் குறிப்பதாக தான் அமையும்.
- மனிதர் தாம் மனித பண்புகளை வரையறுப்பது கடினம்.
- ஒவ்வொரு இனக்குழு மக்களின் வாழ்வும் வெவ்வேறு வகையிலான பண்புகள், கோட்பாடுகள், வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வாழ்வதுடன் தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் சொல்லி செல்லவும் முயல்கின்றனர்.
- எவை எவ்வாறாக இருந்தபோதும் பொது தலைமையிலான வாழ்வை வைத்து மதிப்பிடும் போது பிறருக்குத் தீங்கு செய்யாது இருப்பதுவும் அன்புகாட்டி நெறிப்படுத்துவதும் மனிதரின் முதன்மையான இடத்தைப் பெறுகின்றனர்.
- இந்த அடிப்படையில் அற இலக்கிய கருத்தாக்கங்களோடு தோன்றிய திருக்குறள் மானுட சமூக வெளியில் பெரிய அளவிலான பாதிப்பைச் செய்துள்ளன.
- அவைகளை இலக்கிய தாக்கம், சமூகத் தாக்கம், அறிஞர்களின் தாக்கம், அரசியல் தாக்கம், இயக்கம் சார்பான தாக்கமெனப் பல்வேறு தாக்கங்களால் புதிய பரிமாணத்தையும் அடைந்து கொண்டே உள்ளது.

**மனித வாழ்வின் மீதான பிரதிபலிப்புகள்**

- கலை வடிவிலான இலக்கியங்களோ, கவிதையோ, கட்டுரையோ ஏதாவது ஒரு விதத்தில் மனித வாழ்வின் மீது தாக்கங்களை ஏற்படுத்தி செல்கின்றன.
- ஆனால் அத்தாக்கத்தின் வீரியம் அவரவர் தனித்தன்மையை பொருத்தது.
- உதாரணமாக காந்திஜி அரிச்சந்திரன் நாடகத்தை பார்த்தவுடன் இனி பொய் கூறுவதில்லை என்ற முடிவுடன் எடுத்தார்.
- இதன் மூலம் பண்டைய கால இலக்கியங்கள் தனிமனிதனின் வாழ்வியல் மீத பல்வேறு வகையிலான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- அந்த வகையில் மனித வாழ்வியல் மீது திருக்குறள் கருத்தியல் வாயிலாக ஆட்சி செலுத்துகிறது.

**வீரம்**

- அனைவரிடத்தும் அன்பு செலுத்த சொல்லிக்கொடுத்த அதே திருக்குறள்தான் படைமாட்சி எனும் அதிகாரம் மூலம் போர்புரியும் முறையை போதிக்கிறது.
- வீரம் என்பது தாக்குவதும் வீழ்த்துவதும் மட்டுமன்று அதனிலும் சில வழிமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் திருக்குறள் வழங்குகிறது.

> **"கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்**
> **மெய்வேல் பறியா நகும்"**

- இக்குறள் மூலம் தன் மார்பின் மீது வேல் பாய்ந்தபோதும் தன்னை கொல்ல வந்த யானையின் மீது கைவேலை எறிந்து பின்பு மார்பில் பாய்ந்த வேலை பிடுங்கி பெருமை கொண்டான்.
- இவ்வாறான கருத்துக்கள் மூலம் படையின் தன்மை வீரனின் திறம் வீரனின் சிறப்பு ஆகியவற்றை விவரிக்கிறார்.
- உலக மக்களிடத்தே காணப்படும் வீரத்திற்கும் தமிழர் வீரத்திற்கும் வேறுபாடுகள் உண்டு.
- தம்மில் வலிமை குறைந்த யாரையும் தாக்குவதில்லை.
- தன்னைவிட வலிமை மிகுந்தவரிடத்திலேயே போர் புரிந்தனர்.
- இதனை திருவள்ளுவர்,

> **"கான முயலெய்த அம்பினில் யானை**
> **பிழைத்தவேல் ஏந்தல் இனிது"**

கீழ்க்கண்ட குறள் வாயிலாக முயலைக் கொன்று வெற்றிபெறுவதைவிட யானையை குறித்து தோல்வி பெறுவதுதான் பெரிது என்று கூறுகிறார்.

**நட்புணர்வு**

- குடும்பம் உட்பட எத்தகைய சொந்தங்களும் தானாக அமைவது ஆனால் நட்பு ஒன்றுதான்.
- பழக்கவழக்கங்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாமே அமைப்பது.
- அவ்வாறு நாம் தேடிக்கொள்ளும் நட்பு சிறப்பாக அமைத்திடுவதற்கான வழிமுறையை திருக்குறள் கற்றுத்தருகிறது.

> **"புணர்ச்சி பழுகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
> **நட்பாங் கிழமை தரும்"**

- ஒருவனை நண்பனாக கொள்வதற்கு அவர் எப்போது உடனிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல.
- அவர்களது எண்ணம் ஒத்திருந்தால் போதுமானது.
- நாம் அணிந்திருக்கும் ஆடை அவிழ்ந்து நெகிழ்ந்து விழும்போது நமை அறியாமல் நம் கைகள் அதனை தாங்கிப் பிடிக்கும் அதுபோல நம் நண்பனுக்கு ஒரு பிரச்சினை நிகழும்போது தானாக முன்வந்து உதவுவதே சிறந்த நட்புக்கான இலக்கணமாகும்.
- இதனை வள்ளுவர்,

> **"உடுக்கை இழுந்தவன் கைபோல ஆங்கே**
> **இடுக்கண் களைவதாம் நட்பு"**

- என்று நட்பின் இலக்கணத்தை எடுத்துரைக்கிறார்.

**இல்லறப்பண்பு**

- இல்லற வாழ்வில் பெறவேண்டிய பல்வேறு பேறுகள் இருந்தாலும் அவற்றுள் சிறந்ததாக மக்கட்பேறு என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

> **"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
> **மக்கட்பேறு அல்ல பிற"**

- மக்களைப்பெற்ற அவர்களை நன்மக்களாய் இவ்வுலகிற்கு வளர்த்தளிப்பதே ஒரு தம்பதிக்கான சிறந்த பேறு என்று வள்ளுவர் இல்லறக்கடமையை வரையறுக்கிறார்.

**கற்புடைமை**

- சங்க கால மக்களின் இல்லறம் நல்லறமாக நடந்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது.
- பெண்கள் தற்காத்துத்தற் கொண்டாள் பேணி. சொற்காத்துச் சோர்வு இல்லாதவர்களாகக் கற்புக் கடம்பூண்டு இருந்தமை அறிய முடிகிறது.
- திருவள்ளுவர்,

> **"தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யும் மழை"** என்று கூறுகிறார்.

- காலத்தில் பெய்து காக்கும் மழைக்குச் சமமானவர்களாகக் கற்புடைய பெண்டிர் மதித்து வணங்கப்பட்டனர்.
- ஆண்கள் போர் முதலியவற்றால் இறந்து படுதலின், ஆண் இனம் குறைந்தே இருந்தமையால் ஒரு ஆண் இரண்டு அல்லது மூன்று பெண்களை மணந்து வாழ்ந்தமை அறிய முடிகிறது.

**விருந்தோம்பல்**

- விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்பது பொருள் உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை விருந்து என்றனர் தமிழர்.
- அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

> **"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
> **நல்விருந்து வானத் தவர்கு"**

என்கிறார் திருவள்ளுவர்.

- அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல், ஆகிய அறங்களைத் தான் செய்யாது விட்டேன் என்று கண்ணகி வருந்திக் கூறுவதை சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.
- விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுவர்,

> **"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
> **மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"**

- என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமை அறிய முடிகிறது.

**ஈகை**

- கொடையிலிருந்து வேறுபட்டது ஈகை. திருவள்ளுவர் ஈகைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

> **"வறியார்க்குஒன்று ஈவதேஈகை மற்று எல்லாம்**
> **குறியெதிர்ப்பை நீரது உடைத்து"**

- என்னும் குறளில் பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகையாகும்; பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது என்கிறார்.
- சங்க காலத்தில் அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். தம்மைப் பாடி வரும் புலவர்களுக்கும் மற்றவருக்கும் பொன்னையும் பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியங்களால் உணர முடிகிறது.
- பாரி, ஓரி, காரி, போகன் போன்றோர் கடையேழு வள்ளல்கள் என்று போற்றப்பட்டனர். பாரி முல்லைக்குத் தேரையும் பேகன் மயிலுக்குப் போர்வையையும் அளித்து அழியாப் புகழ் பெற்றனர்.
- ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னர்களின் கொடைத் தன்மையைக் கூறுவனவாக இருத்தலைக் காண்கிறோம். கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலமும் மன்னர்களின் கொடைத்தன்மை அறிய முடிகிறது.

**முடிவுரை**

- வளர்ந்து வரும் தொழில்நுட்பம் மாறிவரும் கால சூழ்நிலைக்கேற்ப மனித வாழ்வியல் முறை மாறிவருகிறது.
- ஆனாலும் இந்த மாற்றங்களைக் கடந்து அனைத்து காலத்திற்கும் ஏற்ற வகையில் திருக்குறள் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுகிறது.
- தற்போது தாக்கல் செய்யப்படும் நிதிநிலை அறிக்கை உள்ளிட்ட அனைத்திலும் திருக்குறள் மேற்கோள் காட்டப்படுவதே இதற்கான சிறந்த சான்றாகும்.

- வாழ்க்கை பாதையில் கடந்துவரும் பயணங்களில் நமக்கு வழிகாட்டும் பதாகையாக திருக்குறள் விளங்குகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**8. வள்ளுவனின் வாயுறை வாழ்த்து கூறும் சிறந்த வாழ்வை எதிர்கொள்வதற்கான சமூகக் கட்டமைப்பினை சான்றுடன் விளக்குக.**

**முன்னுரை**

- புவியில் வாழும் அனைத்து உயிர்களிலும் சிறந்த உயிராக மனிதனே கருதப்படுகிறான்.
- அப்படியான மனித வாழ்க்கைக்கு வழிகாட்டும் கருத்துக்கள் செறிந்த ஒரு கருவூலமாகத் திருக்குறள் திகழ்கிறது.
- திருக்குறளில் பனை மற்றும் மூங்கில் என்ற இரு மரங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.
- இம்மரங்களின் தன்மைகளுக்கு ஏற்றாற்போல் பனை போன்ற உயர்ந்த மற்றும் மூங்கில் போன்று விட்டுக்கொடுத்து ஒரு சிறந்த வாழ்வை எதிர்கொள்வதற்கான வழிகளை திருக்குறள் காட்டுகிறது.

**அன்றாட வாழ்வியலில் திருக்குறள்**

- மனிதனின் அன்றாட செயல்பாடுகள் அத்தனையும் வாழ்வியல் கூறுகளாக திருக்குறளில் கூறப்பட்டுள்ளது.
- அன்பு, நட்புணர்வு, கொடை, ஈகை, ஊக்கமுடைமை உள்ளிட்ட அத்தியாவசிய மனித இயல்புகள் எந்தச் சூழ்நிலையிலும் அனைவருக்கும் ஏற்ற வகையில் வள்ளுவரால் வழங்கப்பட்டுள்ளது.
- அவற்றைப் பற்றி விரிவாகச் சான்றுடன் காண்போம்.

**அன்பு**

- மனித வாழ்வின் அடிப்படையாக அனைவரையும் ஈர்க்கக்கூடிய முக்கிய குணநலனாக அன்பை வள்ளுவம் முன்னிறுத்துகிறது.
- இதனை

> "**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
> **என்போடு இயைந்த தொடர்பு**" என்று குறிப்பிடுகிறார்.

- உடம்போடு உயிர் எப்போதும் இயைந்திருப்பது போல வாழ்க்கை நெறியோடு அன்பு எப்போதும் இயைந்திருக்கும்.
- அன்பை வெளிப்படுத்தியவர்களே வரலாற்றில் அனைவராலும் போற்றப்படுகின்றனர்.

**ஊக்கம்**

- தனிமனித வரலாற்றில் ஒருவனின் வெற்றியை விட அதற்காக அவர் மேற்கொண்ட தொடர் முயற்சியே பெரிதும் போற்றப்படுகிறது.

> "**உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
> **தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**"

- மேற்கண்ட குறளின் மூலம் இலக்கை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.
- நெப்போலியன் முதல் எடிசன் வரை அனைவரும் தங்களது கண்டுபிடிப்புகளுக்காகவும் தங்களது வெற்றிக்காகவும் மேற்கொண்ட முயற்சியே தற்கால தலைமுறையினரால் போற்றப்படுகிறது.

**நட்புணர்வு**

- வாழ்வின் சிறப்பான நிலையை ஒருவர் எய்திட நட்பு மிக முக்கியப் பங்காற்றுகிறது.
- நட்பின் பெருமையை வள்ளுவர்,

> "**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
> **ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**"

- என்னும் குறள் மூலம் நட்பிற்கு சிறந்த நிலை எதுவென்றால் எப்போதும் வேறுபாடுதல் இல்லாமல் இயலும்போதெல்லாம் உதவி செய்து தாங்குதலே நட்பு என்று விவரிக்கிறார்.
- இதைத்தான் சமண முனிவர்கள், நெருங்கி இருந்தும் உதவாத நண்பர்களை நாயின் கால் விரல்களாகவும், தொலைவில் இருந்து உரிய நேரத்தில் உதவும் நண்பர்களை வாய்க்காலுக்கு இணையாகவும் குறிப்பிட்டு நட்பின் சிறப்பை தெளிவுபடுத்துகின்றனர்.

> "**உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்**
> **பெற்றியார்ப் பேணிக் கொளல்**"

- தமக்கு வந்துள்ள துன்பத்தைப் போக்கி இனிமேலும் துன்பம் வராதவாறு முன்னதாகவே காக்கும் தன்மை உடையவரை நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்.
- நீண்டகால வாழ்வினை எதிர்கொள்வதற்கான நெல்லிக்கனி அதியமானுக்கு கிடைத்தும் அதனை தமிழ்கூறும் நல்லுலகிற்கு மன்னர்களைவிட புலவர்களே அவசியம் என்று கருதி அதனை ஔவையாருக்கு வழங்கிய அதியமானை சிறந்த உதாரணமாக கொல்லலாம்.

**ஈகை**

- வறியவர் என்று இவ்வுலகில் எவரும் இல்லை அப்படி இருந்தால் அதற்கு அனைவரும் வெட்கப்பட வேண்டும் என்று கீழ்க்கண்ட குறளின் மூலம் ஈகையின் இன்றியமையாத நிலையை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

> "**இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
> **குலன்உடையான் கண்ணே உள.**"

- இரந்து வாழ்பவர் தான் வறியவன் என்று வெளிப்படுத்தும் முன்னரே அவரது தேவையை அறிந்து உதவி புரிந்திட வேண்டுமென்று வள்ளுவர் கூறுகிறார்.
- இதனையே பிற்காலத்தில் தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் கூறுகிறார்.
- அடுத்தவருக்கு உதவுவதே இல்லறம் உட்பட அனைத்து வாழ்வியல் கூறுகளின் அடிப்படையாக அனைத்து அற இலக்கியங்களும் கூறுகின்றனர்.

SURESH

- இதனையே வள்ளுவர்,

> "புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிவே
> ஒப்புரவின் நல்ல பிற"

- தேவலோகத்திலும், பூலோகத்திலும் பிறருக்கு உதவு செய்யும் குணத்தை விட மேலானது வேறொன்றுமில்லை என்று திருக்குறள் வலியுறுத்துகிறது.
- அடுத்தவருக்கு உதவி புரிவதை வாழ்வின் ஒரு அங்கமாக தமிழ் மக்கள் பின்பற்றி வந்ததை வரலாற்று ரீதியாக அறிய முடிகிறது.

**முடிவுரை**

- அற இலக்கியங்கள் தனி ஒருவருக்கு வாழ்வியல் மீது பெருமளவில் தாக்கத்தினை ஏற்படுத்தி ஒரு சமூக கட்டமைப்பை வரையறுத்துள்ளது.
- இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே என்ற பாரதிதாசனின் கூற்றுக்கு இணங்க அனைத்து அற இலக்கியங்களையும் கடந்து வளமான சமுதாயம் அமைவதற்கான சிறந்த வழிகாட்டியாக திருக்குறள் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**௯. ஒழுக்கமே மனித வாழ்வியலின் அடிப்படையாகவும், அதன் இன்றியமையா தன்மையையும் வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?**

**முன்னுரை**

- ஒழுக்கம் உயிரினம் மேலானது என்பது ஆன்றோர் வாக்காகும்.
- ஒரு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் நன்நடத்தைகளில் சேர்க்கையே ஒழுக்கம் ஆகும்.
- மேலும் நல்ல நெறிகளைப் பின்பற்றி நடத்தல் ஒழுக்கம் எனப்படும்.
- ஒழுக்கத்தை தமிழர்கள் சிறப்பு வாய்ந்த ஒரு பண்பாட்டுக் கூறாகக் கொண்டிருந்தனர்.
- நாம் வாழ்வில் பின்பற்றப்படுகின்ற நல்ல நெறியே ஒழுக்கமாகும்.
- நல்ல பண்புகள் உள்ளவன் நல்ல ஒழுக்கம் உடையவன் என்று குறிப்பிடுகிறான். இக்கட்டுரையில் ஒழுக்கம் பற்றி காண்போம்.

**ஒழுக்கம் பற்றி திருவள்ளுவரின் கூற்று**

- நீதிநெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் முன்னோர்கள் இயற்றிய நீதி நூல்கள் பல நீதிக் கருத்துக்களை நமக்கு எடுத்துரைப்பதாக உள்ளன.
- அந்த வகையில் திருக்குறள் உலக அளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை பறைசாற்றும் ஒப்பில்லாத நூலாகப் போற்றப்படுகின்றது.
- திருவள்ளுவர் ஒழுக்கம் உடைமை என்னும் அதிகாரத்தை உருவாக்கி அதில் பல ஒழுக்க நெறிகளை எடுத்துரைத்துள்ளார்.
- ஒருவன் வாழ்வில் மேன்மை அடையவேண்டுமெனில் ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.
- இதனை,

> "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
> என்றும் இடும்பை தரும்"

- எனும் குறளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

**ஒழுக்கம் உயர்வு தரும்**

- ஒழுக்கத்தினால் எயர்வை அடைவர், ஒழுக்கம் இல்லாதவர் வேண்டாத பழியை அடைவர்.
- இதனை,

> "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி"

- என்று திருக்குறள் கூறுகிறது.
- ஒழுக்கம் ஒருவருடைய பண்பட்ட வாழ்விற்கும், புகழுக்கும் காரணமாக அமைந்து சமுதாயத்திற்கு பெருமையையும் புகழையும் சேர்க்கும்.
- ஒழுக்கத்தால் கிடைக்கும் மேன்மை இவை எல்லாவற்றையும் விட உயர்வானது.
- ஒழுக்கநெறி நிற்பவர்கள் என்றைக்கும் உயர்நிலையை அடைவார்கள் என்பது நியதி.

**ஒழுக்கக் கல்வி**

- பள்ளிப்பருவத்தில் அறம் சார்ந்த ஒழுக்கம் நெறிகளை போதித்து வழிகாட்டுவது நீதிநூல்களாகும்.
- அவற்றிற்கு வழி நடத்துபவனாக ஆசிரியர் திகழ்கின்றார்.

**ஒழுக்கக் கல்வி**

- பள்ளிப்பருவத்தில் அறம் சார்ந்த ஒழுக்கம் நெறிகளை போதித்து வழிகாட்டுவது நீதிநூல்களாகும்.
- அவற்றிற்கு வழி நடத்துபவனாக ஆசிரியர் திகழ்கின்றார்.
- வாழ்க்கை பாதையில் வழுக்கி விழாமல் தாங்கிப் பிடிக்கும் ஊன்றுகோல் நீதி நூல்களே.
- பள்ளிப் பருவத்தில் தவறிவிழாது முன்னேறிவிட்டால் அந்த வெற்றியே வாழ்நாள் முழுவதும் பயணிக்கும் வல்லமையைத் தரும்.
- மாணவப் பருவத்திலேயே ஒழுக்கத்தையும் கல்வியையும் இரு கண்களாக கடைப்பிடித்து வாழ்க்கை கல்வியைப் பயின்று சிறப்புற்று ஒழுக்கத்தோடு காலந்தோறும் பயணிக்க வேண்டும்.
- ஒருவரை மேன்மையோடு கூடிய வாழ்வில் தழைக்கச் செய்யும் பண்பு ஒழுக்கமாகும்.
- வாழ்வில் ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ்வதே தலைசிறந்த நெறியாகும்.

**ஒழுக்க சீர்கேடால் ஏற்படும் விளைவுகள்**

- ஒழுக்கமின்மையானது ஒருவரை தீய வழியில் செலுத்தி சமூகத்தில் இழிநிலைக்கு இட்டுச்செல்லும்.
- மகா பாதகச் செயல்களில் ஈடுபடுதல், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், தகாத உறவு போன்ற செயற்பாடுகள் ஒழுக்க சீர்கேட்ட செயல்பாடுகளாகின்றன.
- இதனால் சமுதாயத்தில் நன்மதிப்பை இழக்க வேண்டிவரும் சட்டப்படி தண்டனைகளையும் அனுபவிக்க நேரிடலாம்.

**வாழ்வின் சிறப்பு**

- மிகச்சிறந்த அறிவியலாளர்களும் கண்டு பிடிப்பாளர்களும் தங்களது சாதனைகளைக் கடந்து ஒழுக்கம் என்னும் பண்பினை முன்னிறுத்தியே கொண்டாடப்படுகின்றனர்.

- அதற்கேற்ப வள்ளுவரும் ஒழுக்கப் பண்பினை உயிரினும் மேலானது என்று குறிப்பிடுகிறார்.

> **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும்"**

- மாறிவரும் காலச் சூழலுக்கு ஏற்ப ஒழுக்கத்தை காத்து உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் என்பது சிரமமிக்கதாக உள்ளது.
- இதைக் கடந்து வள்ளுவத்தின் வழிகாட்டுதல்படி வாழ்க்கை நடத்துபவர்களை அறிவில் சிறந்தவர்களாக வள்ளுவர் வரையறுக்கிறார்.

> **"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
> **தேரினும் அ∴தே துணை"**

- எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணையாகும்.
- ஒழுக்கத்தை காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது அதனை விரும்பிக் காத்தல் வேண்டும்.

**நிலையான செல்வம்**

- பொன், பொருள் கடந்து கல்வியையே சிறந்த செல்வமாக வள்ளுவம் சித்தரிக்கிறது.
- ஆனால் கீழ்க்கண்ட குறளின் மூலம் கல்வியைவிட ஒழுக்கத்தை உயர்த்திப் பிடிக்கிறது.

> **"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
> **பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"**

- ஒருவன் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக் கொள்ள இயலும்.
- ஆனால் ஒழுக்கம் குறைந்தால் அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்து போகும்.

**முடிவுரை**

- நம் முன்னோர்கள் ஒழுக்க நெறிகளுக்கு மிகவும் முக்கியமாக கொடுத்தனர்.
- ஒழுக்கத்துமன் வாழ்வதனேயே உயர்வாக எண்ணி ஒழுக்கசீலர்களாக வாழ்ந்தனர்.
- இதனால்தான் அவர்கள் பல ஒழுக்கநெறிக் கருத்துக்களை முன்மொழிந்துள்ளனர்.
- எனவே, நாமும் ஒழுக்கமுடையவர்களாக வாழ்ந்து வாழ்வில் வளம் பெறுவோமாக.

**10. அனைத்திற்கும் முதன்மையான அறப்பண்பினை வள்ளுவர் வழிநின்று சான்றுடன் விளக்குக.**

**முன்னுரை**

- சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களை பதினெண் – கீழ்க்கணக்கு நூல்கள் என்கிறோம்.
- இவ்விலக்கியங்கள் இருண்ட காலத்தில் நிலவிய சூழ்நிலையை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது.
- இத்தகைய இலக்கியங்களை நீதி இலக்கியங்கள் என்கிறோம்.
- நீதி நூல்களில் ஒன்றான திருக்குறளில் வள்ளுவர் கூறிய அறங்களை ஆராயவும் நோக்கில் இக்கட்டுரை அமைய உள்ளது.

**அறம் விளக்கம்**

- அறம் என்ற சொல்லை இரண்டாகப் பிரிக்கலாம்.
- அவை தனிமனித அறம், சமூக அறம் என்பதாகும்.
- அறம் என்பது விருந்தோம்பல், கொடை, மற்றவர்க்கு உதவுதல், பிறருக்கு ஊறு விளைவிக்காமல் இருத்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை கூறலாம்.
- சமுதாயத்தை முன்னிறுத்தம் வகையில் அமைந்துள்ள அற செயல்பாடுகள் அனைத்தும் சமூக அறம் எனலாம்.
- அவ்வகையில் திருக்குறள் காட்டும் தனிமனித, சமூக அரங்கில் பின்வருமாறு காணலாம்.

**சமூக அறம்**

- இல்லறவியலில் ஒரு அதிகாரமாக நிகழக் கூடியது ஒழுக்கம் உடைமை ஆகும்.
- ஒழுக்கமுடைமை அதிகாரம் மானுட சமூக மேம்பாடு அடைவதற்கு உண்டான வழிகளைக் கூறும் விதமாக அமைந்துள்ளது.

> **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும்"**

- என்ற குறட்பாவில் ஒருவருக்கு உயிரை விட மேலானது ஒன்றும் இல்லை எனலாம்.
- பத்தவே உயிரானது இன்பத் துன்பங்களை மாறிமாறி அனுபவிக்கிறது.
- உயிரைவிட மேலானபொருள் ஒன்று உண்டெனில் ஒழுக்கத்தை கூறலாம்.
- ஒழுக்கம் என்பது மானுட பிறப்பதற்கே உரிய ஒன்றிய நலம் ஒழுக்கத்தைக் கடைபிடிக்கும் ஒருவன் மேம்பாடு அடைகிறான்.

> **"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
> **இழிந்த பிறப்பாய் விடும்"**

- ஒருவன் உயர்ந்த குடியில் பிறப்பதால் அவன் சிறந்த பண்பு உடையவன் என்றும் தாழ்ந்த குடியில் பிறந்த ஒருவனை தீய பண்புகள் என்று கூறமுடியாது.
- ஒருவன் எப்படியிருப்பினும் அவன் ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் அவன் உயர்ந்தவன் ஆகவே கருதப்படுகிறான்.

**அன்புடைமை**

- சமுதாயம் முன்னேற வேண்டுமானால், மனிதனிடம் உள்ள தீய குணங்களை நீக்கி பிற உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும்.
- அன்புதான் மனிதனை மனிதனாக்குகிறது. அன்பு வழியைப் பின்பற்றினல் நாம் எத்தகைய துன்பத்தையும் வென்றிடலாம்.
- அத்தகைய அன்பில்லாத ஒருவனை வள்ளுவர் எலும்புக்கூட்டின் மீது போல் பொருத்தப்பட்ட வேற்று உடம்பு என்கிறார்.

> **"அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு**
> **என்தோல் போர்த்தியது உடம்பு"**

**இல்வாழ்க்கை**

- மனித வாழ்வில் முதலில் பின்பற்றத் தக்கது இல்லற நெறி ஆகும்.

> **"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்"**

- இவ்வுலகில் நல்ல முறையில் இல்வாழ்க்கையில் ஈடுபடுபவன் தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கு ஒப்பாகக் கருதப்படுவாள் என்பதை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது.

**விருந்தோம்பல்**

- திருக்குறளில் விருந்தோம்பல் பற்றி கூறுவதற்கு வள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை படித்துள்ளார்.
- அதிகாரத்தின் மூலம் விருந்து பற்றியும் விருந்து அளிக்கக்கூடிய மக்களின் பண்புகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றார.

> **"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"**

- என்ற குறளின் மூலம் இல்வாழ்க்கையில் ஈடுபடக் கூடியவர்கள் பொருளை சேமித்து மட்டுமல்லாமல், விருந்தினர்களுக்கு விருந்து அளிக்கும் வேண்டும் என்ற பதிவினை மக்களுக்கு எடுத்தியம்புகிறார்.
- வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் உபசரித்து அவர்களுக்கு விருந்தளிக்க வேண்டும்.
- விருந்து அளிக்கும்போது நம் முகம் சிறிதேனும் வாடி இருந்தால் விருந்தினர்களின் முகமும் வாடும் என்பதை

> **"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து"**

- என்ற குறளின் வழி வள்ளுவர் அனிச்சமலர் ஆனால் அது எப்படினு வருவதுடன் வாடிவிடும்.
- அதுபோல் நம் முகத்தில் சிறிது மாற்றம் ஏற்படும் வரும் விருந்தினரின் முகமும் வாடும் என்ற கருத்தினை எடுத்துரைக்கின்றார்.

**உயிர் கொல்லாமை**

- எந்த ஒரு உயிரையும் கொலை செய்யாது புலால் உண்ணாது வாழ்பவர்களை இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்று கூறுகிறார், வள்ளுவர்.

> **"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்"**

- என்ற குறள் புலால் மறுத்தலை வலியுறுத்துகிறது.
- நெய் முதலிய பொருள்களை வேள்வியில் செய்யும் யாகத்தால் விளையக்கூடிய நம்மைவிட அதிகமான நன்மை, ஒரு உயிரை கொள்ளாது இருப்பதின் மூலம் விளைகிறது என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

**ஆசையை விடுதல்**

- மனித வாழ்வை அடிப்படையானது ஆசை எனலாம்.
- தனிமனித பேராசைதான் நாட்டில் தலைவிரித்தாடும் அனைத்து பிரச்சனைகளுக்கும் காரணம் எனலாம்.
- லஞ்சம், ஊழல் போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் எனலாம்.
- எல்லாவற்றையும் தானே அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை தான் ஒருவனை அழிவு பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

  அவா இல்லாவருக்கு இல்லாரும் துன்பம் அஃதுண்டேல் தவாஅது மேன்மேல் வரும்.

- என்ற குறள் பேராசை பட்டோருக்கு தொடர் கதையாகும் என்ற எச்சரிக்கையை விடுத்தது போல அமைகின்றது.

**கல்வி**

> **"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"**

- கல்வி இன்றயை வாழ்விற்கு அவசியமான ஒன்றாகும்.
- ஆதலால், அனைவரும் கல்வி கற்க வேண்டும்.
- கற்கும் நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்.
- அவ்வாறு கற்ற பிறகு அதனை தன் வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**வாய்மை**

- எப்போதும், எந்த இடத்தும் உண்மையே பேச வேண்டும்.
- நாம் பேசக்கூடிய சொற்கள் மற்றவர்களுக்கு தீங்கு தரக்கூடியதாக இருக்கக்கூடாது.
- எப்போதும் தீமை இல்லாத சொற்களை சொல்ல வேண்டும்.

> **"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்"**

- ஒருவன் தன் நெஞ்சு பொய் சொல்லக்கூடாது. அப்படி அறிந்தும் பொய் சொன்னான் என்றால் தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

**செய்நன்றி மறவாமை**

- மற்ற உயிர்களிடம் இருந்து மனிதனை தனிமைப்படுத்திக் காட்டுவது அவனுடைய ஆறாவது அறிவுதான்.
- அவர் இவனது நல்ல தீய விஷயங்களைப் பகுத்து அறிந்து கொள்வதற்கு தான் இறைவனால் படைக்கப்பட்டது.
- மனிதன் போற்ற வேண்டிய செயல்பாடுகளின் ஒன்று நன்றி மறவாமை ஆகும்.
- ஏனெனில் எவ்வகை பாவம் செய்து ஒழுகும் அதிலிருந்து மீள்வதற்கு வழி உண்டு.
- ஆனால் செய்நன்றி மறந்த அவனுக்கு அதிலிருந்து மீள்வதற்கு எந்த வழியும் இல்லை எனலாம்.

> **"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது"**

- என்ற குறட்பாவில் நம் துன்பப்படும் காலத்தில் நமக்கு உதவி செய்தவர்களை உடலில் உயிர் உள்ளவும் மறுத்தல் கூடாது என்பதை இக்கருத்துக்கள் உணர்த்துகின்றன.
- ஆனால் இன்று உயிர் கொடுத்து, ஒரு கொடுத்து, உணவு ஊட்டி வளர்த்து ஆளாக்கி பெற்றோரை பாரமாகக் கருதும் அவல நிலை பெருகிவருகிறது.
- செய்நன்றி மறந்த நிலையை தான் இன்றயை முதியோர் இல்லங்கள் நினைவூட்டுகின்றன.
- இன்றைய சூழலில் மனிதர்களிடம் வளர வேண்டிய பண்புகளில் இதுவும் ஒன்றாகும்.

**முடிவுரை**

- சமூகத்தில் அறப்பண்பு வளர வேண்டும். உயிர் கொலை செய்யாமை, நன்றி மறவாமை, விருந்தோம்பல் பண்பு, வாய்மை, கல்வி, இல்வாழ்க்கை, அன்புடைமை, ஒழுக்கமுடைமை முதலிய பண்புகளை கடைப்பிடிப்பதன் மூல் நம் வாழ்வு சிறந்து விளங்கும் என்பதை வள்ளுவரின் வாக்கு மூலம் உணர முடிகிறது.
- இச்சமூகம் சிறப்பாக அமைவதற்கு உண்டான வழிமுறைகளை உணர்த்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

SURESH

TEST 2
வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

**1. ஒரு நாட்டின் முக்கிய கூறுகளில் ஒன்றான பொருளாதாரத்தைப் பற்றி பொருளுறை கூறும் கருத்தினை விளக்குக.**

**முன்னுரை**

- திருக்குறள், பொருள், பொருளியல், அறம், மனித வாழ்வு ஆய்வு அறிமுகம் மனித வாழ்வோட்டத்தில் பொருள் இன்றியமையாததும் தவிர்க்க முடியாததுமான ஒன்றாகும்.
- வாழ்க்கையைப் பொருளுள்ளதாக மாற்றுவது பொருளே ஆகும்.
- ஒவ்வொரு தனி மனிதனையும் வலுப்படுத்தி மனத்தில் வலுவாக நம்பிக்கை கொள்ள வைப்பது பொருள் ஆகும்.
- திருக்குறள் உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளது.
- குறிப்பாக மனிதன் பொருளீட்டி எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.
- திருக்குறளில் பொருளின் தன்மையும் பொருளீட்டும் முறைகளும் அவற்றைத் திட்டமிட்டுச் செலவு செய்யும் முறைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- திருக்குறளில் பொருளியல் கருத்துக்கள் பெரும்பாலும் பொருட்பாலில் இடம் பெறுகின்றன.
- இக்கருத்துக்கள் இருபத்தோர் அதிகாரங்களில் பரவிக் கிடக்கின்றன. பொருளீட்டல் தொடர்பான முன்னையோர்கள் சிந்தனைகள் தற்கால சமூகத்திற்கு இன்றியமையாதவை.
- இன்றைய சமுதாயம் பொருளினாலும் பொருளீட்டல் முறைகளினாலும் மனிதநேயம் இழந்த நிலையில் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்ட மக்கள் கூட்டத்தை கொண்டிருக்கின்றது.
- பொருள் மனிதனுக்கு தேவையான ஒன்றே.
- இருப்பினும் அதனை ஈட்டுவதற்கு பிரயோகிப்பதற்கும் நியமங்கள் உள்ளன.
- அத்தகைய நியமங்களை இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக்கூறும் இலக்கியமாக திருக்குறள் உள்ளது.
- திருக்குறள் காட்டிய வழியில் பொருளை ஈட்டி, அதனைப் பாதுகாத்து, வரவறிந்து செலவு செய்து, நாட்டையும் வீட்டையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும்.
- குறளின் பொருளியல் சிந்தனை எக்காலத்திற்கும் பொருந்தும் பொருளியல் சட்டமாக அமைந்திருக்கின்றது.

**வள்ளுவரும் பொருளாதாரமும்**

- திருவள்ளுவர் பொருளின் தன்மை, பொருளீட்டும் முறை, பொருளை செலவு செய்யும் முறை, அனைத்து தரப்பினருக்கும் பொருளின் அவசியம், பொருளின் பயன் என்பன தொடர்பாக கூறியுள்ளார்.
- திருவள்ளுவரின் பொருளியல் தொடர்பான சிந்தனைகள் மேற்கத்திய பொருளியற் சிந்தனையாளர்களுடன் ஒன்றிச் செல்கின்றதையும் அவதானிக்க முடிகின்றது.
- வள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற பண்டைய கிரேக்க சிந்தனையாளர்களின் கருத்துகளோடும் ஆதம் ஸ்மித் போன்ற நவீன காலப் பொருளாதார அறிஞர்களின் ஒப்பிட்டு நோக்கக்கூடியது.
- முன்னாளில் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் பொருளியல் அடிப்படையில் வகுப்பு வேற்றமை ஓங்கியிருந்தது, பூசல்களும் நிறைந்திருந்தன.
- ஆதம் ஸ்மித்து பொருளியல் அடிமைத் தளையினின்றும் மக்களை விடுவிக்கப் பாடுபட்டார் பொருவாரியான, மக்களின் உழைப்பையும் தொழிலார்வத்தையும் தூண்டித் தழைக்கச் செய்தார்.
- அதன் மூலம் தொழிற் புரட்சிக்கு அடிகோலினார்.
- வள்ளுவரும் மக்களிடையே வேற்றுமை எழுதலை நீக்க முனைந்தார் பொருளியல் விடுதலையைப் போதனை செய்தார்.
- தொழிலுலகில் சாதியும், வகுப்பும் ஒருவனைக் கட்டுப்படுத்தா என்றார்.
- விரும்பிய தொழிலை மேற்கொள்ள வழிவகுத்தார்.
- பிறப்பால் மக்கள் அனைவரும் ஒரு நிகரே என்ற கொள்கையை வள்ளுவரைப் போன்றே ஆதம் ஸ்மித்தும் வற்புறுத்தினார்.
- கல்வியாலும் சூழ்நிலையாலுமே வேற்றுமை மக்களிடையே விளையுமென இருவரும் கூறினர்.
- அரசியலும் பொருளியலும் இசைந்து செல்ல வேண்டும்.
- அது மக்களுக்கும் அரசுக்கும் நல்லுறவை நிலைநாட்டும் அறம், பேணி, நலம் வளர்க்கும் என்பன இருவரின் கருத்தும் இருவருமே அறம், வழுவாப் பொருளியலை விரும்பினர்.
- ஆதம் ஸ்மித்து அறச் சிந்தனைக் கோட்பாடுகள் என்ற நூலில் அறத்தை அடித்தளமாக அமைத்தார்.

- அதன் மீதே, தேசங்களின் செல்வம் என்ற பொருளியல் மாளிகையை எழுப்பினார்.

**பொருளின் இயல்பு**

- பொருள் மனிதனுக்கு மதிப்பைத் தருகின்றது.
- சமுதாயத்தில் பொருள் படைத்த மனிதர்களையே மதிக்கின்றனர்.
- பொருள் இல்லாதவர்களை யாரும் மதிப்பது இல்லை.
- பொருள் சேர்ந்தாரை உயர்வடைச் செய்கின்றது.
- ஒன்றுமே இல்லாத மனிதர்களையும் ஒரு பொருட்டாக மதிக்கின்ற அளவிற்கு உயர்த்தும் தன்மை கொண்டதாக விளங்குகின்றது.
- பொருளின் இத்தகைய தன்மையினை,

> **"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
> **பொருளல்லது இல்லை பொருள்"**

- என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.
- பொருள் இருப்பவனையே இவ்வுலகம் மதிக்கும்.
- பொருள்வளம் இல்லாதவனை, அவன் நல்ல பண்புள்ளவனாக இருந்தாலும் அவனை அனைவரும் இழிவாக நடத்துவர்.
- அதனால் பொருளின் அருமை அறிந்து அனைவரும் நல்வழியில் பொருளீட்ட வேண்டும் என்பதை

> **"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
> **எல்லாரும் செய்வர் சிறப்பு"**

- எனவே, மனிதனை சமுதாயத்தில் அந்தஸ்த்தும், கௌரவமும் உள்ள ஒருவனாக மாற்றும் ஒன்றே பொருள் என பொருளின் இயல்பினை வரையறுக்கின்றார் வள்ளுவர்.

**பொருளீட்டும் முறை**

- நேர்மையான வழிகளின்றி தீயவழிகளில் ஒருபோதும் செல்வத்தைச் சேர்த்தல் கூடாது.
- அதனைக் கட்டாயம் நீக்கிவிட வேண்டும் என்பது பொருளீட்டலில் திருக்குறள் கூறும் முதன்மையான கருத்து.
- அறம், பொருள், இன்பம் என்னும் விழுமியங்களின் வரிசை முறையில் திருவள்ளுவர் பொருளுக்குத் தந்திருக்கம் இடம் கவனிக்கத்தக்கது.
- பொருள் இருந்தால் மட்டுமே ஒருவர் அறம் செய்ய முடியும் இன்பம் நுகரவும் கூடும்.
- எனவே, பொருளுக்குத் திருவள்ளுவர் நடு இடத்தினையும் அறத்திற்கும் இன்பத்திற்கும் இடைப்பட்ட மைய இடத்தினையும் அளித்துள்ளனர்.
- கருணையுடனும், அன்புடனும் நேர்வழியில் பொருளைச் சேர்த்தல் வேண்டும்.
- அவ்வாறு வரக்கூடிய செல்வம் மேலும் மேலும் வளரும் கருணைக்கும், அன்புக்கும் எதிராக இரக்கமின்றிப் பிறரை வருத்திச் சேர்க்கும் செல்வம் நிலைக்காது அழிந்துவிடும்.
- அதோடு மட்டுமல்லாமல் அது வளர்வதைப் போன்று வளர்ந்து இல்லாமலாகிவிடும்.
- பெருங்கேட்டினைக் கொணர்ந்துவிடும் தன்மை கொண்டது.
- அதனால் அறவழியில் வராத பொருளை விரும்பாது.
- அப்பொருளால் தீமையே வரும் என்று எண்ணி அதனை வேண்டாம் என்று ஒதுக்கிவிட வேண்டும்.
- இத்தகைய பொருளீட்டும் முறையினை,

> **"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
> **புல்லார் புரள விடல்"**

- என்ற குறள் வழி வள்ளுவர் எடுத்தியம்புகிறார்.
- அன்பின் வழியாலும், ஒரு மனிதன் சேர்த்து வைக்காத பொருளானது அம்மனிதனுக்கும் அவன் வழித்தோன்றலுக்கும் தீராத துன்பத்தைத் தரும்.

**முடிவுரை**

- நாம் தேடிய செல்வத்தைப் பிறருக்கு ஈத்துவக்க வேண்டும்.
- ஈத்துவக்கும் இன்பமே வாழ்வின் பெரும் பேரின்பமாகும் என்கிறார் வள்ளுவர்.
- அறவழியில் தேடிச் சேர்த்த பொருள், அனைவருக்கும் பரவலாக்கப்பட வேண்டும்.
- பொருள் ஓரிடத்தில் குவிவதால் மட்டும் பலன் ஏற்படுவதில்லை.
- தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் எனப் பொருளை அனைவரிடத்திலும் சென்று சேரும் வகையில் பரவலாக்க வேண்டும்.
- முறையாக நாம் சேர்த்துவைத்த பொருள் யாவும் நம்மைச் சார்ந்தவர்க்கும் நம்மைச் சார்ந்த சமுதாயத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்பதை

> **"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு"**

- என்று திருக்குறள் தெளிவுறுத்துகிறது.

**2. திருவள்ளுவப் பயன் கூறும் மனித வாழ்விற்கு பயன்தரும் தத்துவக் கோட்பாடுகளை சான்றுடன் விளக்குக.**

**திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்**

**முன்னுரை**

- உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது.

- எதிலும் விரைவும் ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மைத் தெளிவுபெறவும் வள்ளுவர் வாக்கு ஊன்றுகோலாய் இருக்கிறது.

**பன்முகப்பார்வை**

- தனி மனித நிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள் எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.
- தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த மரபுத்தளைகளை உடைத்து, மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனிமனிதத் தூய்மையை உருவாக்க வள்ளுவர் முயன்றுள்ளார்.

**மரபுகளைத் தகர்த்தல்**

- மது அருந்துதலும் புலால் உண்ணுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலையை மாற்றி மனித மனத்தினை வாழ்வின் பயனைத் தடம் மாற்றும் தவறுகள் என வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
- திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல்.
- இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல.
- இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் புரட்சி நூல் வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்த இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

**பொருண்மைச் சிறப்பு**

- சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது.
- வள்ளுவம் 'தமிழனுக்குரியது' என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனப் புகழ்ந்துரைத்தார்.
- வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் எல்லாப் பொருளும் இதன் பால் உள என்று தெளிந்துரைத்துள்ளார்.
- இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட் சிறப்பை உணர்த்துவன.

**வாழ்வியல் பதிவு**

- வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது.
- வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது.
- வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது.
- இதனை சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது என்னும் அறிஞர் கருத்தினால் அறியலாம்.
- வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை வழிமுறைகளைத் தருவன.
- மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் வாழ்க்கை வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் ஆகும்.
- புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது.
- இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுநர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.
- தெய்வப் புலவர் வள்ளுவர், 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

> **"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
> **எல்லா உயிரும் தொழும்"**

- என்னும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது.
- இன்றைய தமிழக அரசு உயிர்க்கொலை, உயிர்ப்பலி கூடாது எனச் சட்டம் கொண்டு வந்துள்ள நிகழ்காலச் சூழலில் வள்ளுவரின் வாழ்வியல் நெறி வெற்றி பெற்றுள்ளதாகவே கருதலாம்.
- அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனி மனித வாழ்க்கையை வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

**அறநெறிப்பட்ட வாழ்க்கை**

- மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும்.
- மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகவும் உள்ளது.
- மனமாசின்றி வாழும் சிறப்புடையது.
- அதுவே அறங்களில் முழுமை மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

> **"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற"**

- என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது.
- அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார்.
- அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல் என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர்.
- மனத்தூய்மை, ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

**வாய்மை**

- திருக்குறள், அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது.
- இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினையும் திறம்படக் காட்டுகிறது.
- 'வாய்மை என்பதே தலையாய அறம்' என்கிறது வள்ளுவம்.
- பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம்.
- அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

> **"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
> **செய்யாமை செய்யாமை நன்று"**

- என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

**மும்மை அறம்**

- மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.
    1. ஆன்மீக அறம்,
    2. ஈதல் அறம்,
    3. காதல் அறம்

**ஆன்மீக அறம்**

- கடவுளை 'அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை' என்றும் கருதுகோள் நிலையில் வைத்து மனித ஒருமைக்கும் சமுதாய அமைதிக்கும் வள்ளுவர் குறள் வழிக் குரல் கொடுத்துள்ளார்.
- முதற்குறட்பாவில் 'உலகு' என நினைவூட்டி உலகளாவிய நேயத்தை மறைமுகமாக உணர்த்தியுள்ளார்.
- கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை தந்துள்ளது.
- இதனை வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் அது ஆணும் அல்ல. பெண்ணுமல்ல.
- வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள், கோட்டைகள் இல்லை.
- வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்கும் இல்லை, வழக்கும் இல்லை.
- அது பேரறிவு, தூய்மையான அறிவு, குணங்களின் திருவுரு, இன்பத்தின் திருவுரு, அன்பின் திருவுரு, அறத்தின் அடையாளம்.

**ஈதலறம்**

- மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை.
- பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுவான்.
- போட்டியும் பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும் ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும் வள்ளுவர் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர்.

> **"ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்ல**
> **ஊதியம் இல்லை உயிர்க்கு"**

- கொடுத்து புகழடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது.

**காதலறம்**

- காமத்துப்பால் அறவழிப்பட்ட காதலுறவுகளை எடுத்துரைத்துள்ளது.
- காதலையும், ஆண் – பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார்.
- காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு ஆகியவற்றை இனிமை பயக்கப்பாடி, அன்பெனும் நெறிக்குள், மனங்களின் சங்கமத்திற்குள் மாசுபடாத வாழ்வியல் படிநிலையை வடித்துத் தந்துள்ளார்.
- களவையும் கற்பையும் வகைப்படுத்தி 'மனிதம்' அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் தந்துள்ளார்.

**ஆண், பெண் சமனியம்**

- ஆண் – பெண் உறவுநிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது.
- ஆண் – பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது.
- ஆண் மேலாதிக்க காலத்தில், அதற்கெதிரான, துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது.
- பெண்களின் உரிமைக்காகவும் உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார்.

- பெண் ஆணுக்கு இணையானவள் ஆற்றல் மிக்கவள் என்பதை

> **"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**
> **நிறைகாக்கும் காப்பே தலை"**

- என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம்.
- இத்தகைய வள்ளுவரின் வழிகாட்டல்தான் பிற்காலத்தில் பாவலன் பாரதியை 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்று பாடவைத்து எனலாம்.

**சமுதாயக் கொடுமைகள்**

- சாதி, மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் சமுதாயக் கொடுமைகள் இதனை மாற்ற வள்ளவரின் குறட்பாக்கள் முனைந்துள்ளன.
- பிறப்பால் இனம் பிரித்த வருணாசிரம முறையை வள்ளுவம் எதிர்க்கிறது.
- பிறப்பால் அனைவரும் ஒன்றே என ஓங்கி ஒலிக்கிறது.

> **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்"**

- என்னும் குறட்பா வள்ளுவரை ஒரு சமுதாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகிறது.

**பகுத்தறிவு நோக்கு**

- வள்ளுவரைத் தமிழ்கூறும் உலகில் தோன்றிய முதல் பகுத்தறிவாளர் எனக் கூறலாம்.
- எந்தவொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை

> **"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு,**
> **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

- என்னும் குறட்பாக்கள் இதனைச் சான்றாகும்.

**மானுடத்தின் மலர்ச்சி**

- வள்ளுவரின் நெம்புகோல் அடிகள் மானுடத்தின் மலர்ச்சி எனலாம்.
- மரபுகளைத் தகர்த்துப் புதுமையை நிலை நிறுத்துவது வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது.

> **"அன்பின் வழியது உயிர்நிலை**
> **மனநலம் மன்னுயிர்க்குக் காக்கும்**
> **அறத்தால் வருவதே இன்பம்"**

- என்றெல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்க்கையை மலர்ச்சியடையச் செய்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம்.

**முடிவுரை**

- அறிஞர்கள் பலராலும் திருக்குறள் என்பது பெறற்கரிய பெரும்பேராக கருதப்படுகிறது.
- அனைத்து வகையான மனித வாழ்வியல் அறத்தை போதிக்க மேற்கொள்கள் செறிந்த ஒரு படைப்பாக திருக்குறள் நிகழ்கிறது.
- சூழல்களுக்கு ஏற்ப செயலாற்ற தேவையான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.
- மனித வாழ்வியல் செயல்பாட்டுக்கான புகலிடமாக திருக்குறள் விளங்குகிறது.
- நூற்றாண்டுகள் கடந்து அனைத்து காலக்கட்டத்திற்கும் ஏற்ற வகையிலான திருக்குறள் மனித இனம் இருக்கும்வரை மொழி இருக்கும்வரை காலத்தை விஞ்சி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

**3. பொது வாழ்விற்கு அடிப்படை தேவையான அரசியல் கருத்துக்களை பொதுமறை வழிநின்று விளக்குக.**

**திருக்குறள் கூறும் அரசியல்**

**முன்னுரை**

- அரசியல் (Politics) என்பதற்கு ஆட்சி, அதிகாரம் பற்றிய கோட்பாடுகளும் நடைமுறைகளும் என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.
- அரசியல் என்பதனுள், அரசு, அரசாட்சி, அரசை ஆளும் அரசன், நாடு, நாட்டில் வாழும் மக்கள், மக்களின் வாழ்க்கைத்தரம் போன்ற உட்கூறுகள் பொதிந்திருக்கின்றன.
- நீதி இலக்கியங்களுள் திருக்குறள் அரசியல் பற்றி பேசும்பொழுது, மொழி, இனம், மதம், நாடு போன்றவற்றைச் சாராமல் உலகப்பொதுமையாய் எல்லோருக்கும் பொருந்துவனவாய் பேசுகிறது.
- அரசு என்பதன் பொருளை அறியமுற்படும்பொழுது பல்வேறு கருத்துக்களும் அகராதிகள் தரும் விளக்கங்களும் அரசியல் குறித்த அடிப்படையை உணருவதற்கு அவசியமாகின்றன.

**அரசியல் பொருண்மை**

- அரசியல் என்பதற்கு "நாடு" ஒன்றினை ஆட்சிபுரிந்திடும் முறை, ஆட்சிபுரிவது பற்றிய பல்வேறு கட்சிகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் எனவும், அரசாங்கம் என்பதற்கு நாடு ஒன்றினை நிர்வகிப்பதற்காக அதற்கென்றே அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட ஒரு அமைப்பு (Government)" எனவும், அரசியல் சட்டம் என்பதற்கு அரசாங்கத்தின் அதிகாரம் கடமைகள் ஆகியவற்றோடு குடிமக்களுடைய உரிமைகள் போன்றவற்றையும் வரையறை செய்யும் "அடிப்படைச் சட்டம்" எனவும் நர்மதாவின் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.
- அரசு என்ற சொல்லுக்கு அரசன், இராச்சியம், அரசாட்சி என்ற பொருள்கள் (தமிழ்-தமிழ் அகர முதலி) வழங்கப்படுகின்றன.

- அரசன் என்பது "நாடாள்வான்" (அரசு) எனும் "தலைமையையும்", இராச்சியம் என்பது ஆளப்படும் பகுதி என்ற "இடத்தை" (நிலைத்தையும், அரசாட்சி என்து "அரசு நிருவாகம்" என்ற (தலைமையின்) கருவியையும் குறிப்பன என பேராசிரியர் இராஜமுத்திருளாண்டி குறிப்பிடுகிறார்.
- பல சமூகங்கள் அல்லது வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியானது மைய அமைப்புடைய அரசாங்கத்தின் மூலம் வரிவிதித்தல், படைத்திறன் கொண்டிருத்தல், சட்டங்களை இயற்றி அவற்றின்படி அனைவரையும் நடக்கச் செய்தல், குற்றமிழைப்போருக்கு நீதித்துறை மூலம் தண்டனை விதித்தல் முதலான பணிகளைக் கொண்டது ஒரு முற்றுரிமை வாய்ந்தது அரசு என அரசின் பணிகளை பக்தவத்சலபாரதி விளக்குகிறார்.

**திருக்குறள் கூறும் அரசியல் நெறிகள்**

- திருக்குறளில் சொல்லப்பட்ட அரசியல் அறநெறிகள் அக்காலத்தேவை கருதி சொல்லப்பட்டாலும் எக்காலத்துக்கும் எந்நாட்டு அரசியல் அணுகுமுறைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கி, அரசு செயல்படவேண்டிய முறைகளின் நுட்பங்களை எடுத்தியம்புகிறது.
- படை, குடி, கூழ், நட்பு, அமைச்சு, அரண் ஆகிய உறுப்புக்களை உடையதாக திருக்குறள் அரசியலை விவரிக்கிறது.
- அரசியல் அதிகாரங்களில் அரசனின் இயல்புகள், மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகள், அவன் ஆற்றவேண்டிய கடமைகள், நாட்டின் சிறப்பு, நாட்டில் வாழும் மக்களின் சிறப்பு போன்ற செய்திகளை, இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத்துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றம் தழால், பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம் ஒற்றாடல், ஊக்கம் உடைமை, மடியின்மை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை ஆகிய இருபத்தைந்து அதிகாரங்களில் திருக்குறள் அரசியல் பற்றியும் ஆட்சிமுறை பற்றியும் உரைக்கிறது.

**அரசியல்வாதியின் தன்மை**

- ஒரு நாட்டை வழிநடத்தும் ஆட்சியாளர்கள் அந்நாட்டின் கடைநிலை குடிமகன்களை பாதிக்காத அளவிற்கு திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- அவர்களின் செயல்பாடு குறித்த விளக்கத்தை கீழ்க்கண்ட குறள் வாயிலாக வள்ளுவம் வலியுறுத்துகிறது.

> **"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
> **ஆராய்வான் செய்க வினை"**

- ஒரு நாட்டின் பொருள்வரும் வழிகளை பெருகச் செய்து அதன் மூலம் வளத்தை பெருக்கி எதிர்கால இடையூறுகளை களையும் வல்லவனே ஆட்சி செலுத்த வேண்டும் என்று அரசியல்வாதிகளின் தன்மையினை வலியுறுத்துகிறார்.

**வள்ளுவர் வழி அரசியல் துறைகள்**

- ஒரு துறையை ஒதுக்கீடு செய்வதற்கான அமைச்சரை அடையாளம் காண்பதற்கான செயல்முறைகள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றை கீழ்க்கண்ட குறள் விவரிக்கிறது.

> **"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**
> **அதற்குரிய னாகச் செயல்"**

- ஒருவன் ஒரு தொழிலை செய்வதற்கு உரியவனாக இருப்பதை ஆராய்ந்த பிறகு அவனைத் அத்தொழிலுக்கு உரியவனாகும்படி உயர்த்த வேண்டும்.
- இவ்வழியில் ஒதுக்கப்படும் துறைகள் சிறந்த திட்டங்களின் மூலம் நாடு வல்லரசு பாதையில் பயணிக்க வழிவகுக்கும்

**அரசியல் பொறுப்பு**

- ஒரு நாட்டின் போர் பிரகடனத்தின்போது எதிரி நாட்டு மன்னன் எத்தனை வலியவனாக இருந்தாலும் மன்னரின் ஆணைக்கிணங்க போரில் ஈடுபடுகின்றனர்.
- இதன்மூலம் மன்னரின் கட்டளையை எந்தவிதமான எதிர்ப்புமின்றி பின்பற்றும் குடிமக்கள் உள்ளனர் என்று புலனாய்கிறது.
- அப்படிப்பட்ட மக்களை வழிநடத்தும் மன்னனின் பொறுப்பை கீழ்க்கண்ட குறள் விவரிக்கிறது.

> **"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
> **கோல்நோக்கி வாழுங் குடி"**

- உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன.
- அதுபோல், குடிகள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.
- மன்னர் பயன்படுத்தும் செங்கோலின் மேன்மைத்தன்மையை வள்ளுவர் குறள் வழி அறியலாம்.

> **"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
> **நின்றது மன்னவன் கோல்"**

- அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று இந்த உலகத்தையே காப்பது ஒரு அரசனுடைய செங்கோல் என்றே வேதங்களுக்கு இணையான அரசனின் செங்கோலை உயர்த்திப் பிடிக்கிறது வள்ளுவம்.

**அரச நீதி**

- உலகில் வாழும் சக உயிர்க்கு துன்பம் விளைவிப்பதை அற இலக்கியங்கள் உட்பட அத்தனை இலக்கியங்களும் எதிர்க்கிறது.

- ஆனால், வள்ளுவம் இதற்கு விலக்கு அளிக்கிறது.
- ஒரு கொடிய தண்டனை புரிந்தவரை தண்டிக்கும் அதிகாரம் பெற்ற மன்னனுக்கு இவ்வறம் பொருந்தாது.
- இதனை,

> **"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்"**

- கொடியவர் சிலரை கொலை தண்டனையால் அரசன் தண்டித்தால் அது பயிரைக் காப்பாற்ற களையை நீக்குவதற்கான செயலுக்கு இணையாகும்.

**முடிவுரை**

- தனிமனிதனின் வருவாயில் நேர்வழியில் மேற்கொள்ளப்படும் என்று வலியுறுத்தும் அற இலக்கியங்களைக் கடந்து அந்த வருவாயை எவ்வாறு செலவிட வேண்டும், எவ்வாறு சேமிக்க வேண்டும் என்று வள்ளுவம் வழிகாட்டுகிறது.
- பொருளாதார மற்றும் அரசியல் அளவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து தற்போது வரை வழிகாட்டுதல்களை வழங்கிவரும் திருக்குறள் எழுத்துக்களால் புனையப்பட்ட ஒரு ஆச்சர்யமே.

**4. மனித வாழ்வின் மாண்புகளாக திருக்குறள் காட்டும் பண்புகளை விவரி?**

**திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – மனிதநேயம், சமத்துவம் முதலானவை**

**முன்னுரை**

- மனிதன் – மனிதனிடத்தும் பிற உயிர்களிடத்தும் காட்டும் நேயம் மனிதநேயம் ஆகும்.
- உலகிலுள்ள எல்லா உயிரினங்களிலும் ஆறறிவுள்ள மனிதனுக்கு மிக முக்கியமாக வேண்டப்படுவது மனிதனால் வகுக்கப்பட்ட மனித நேயமாகும்.
- மனிதநேயப் பண்பினை வளர்க்கவே ஆன்றோரும் சான்றோரும் அன்பு, பண்பு, சத்தியம், உண்மை, தர்மம், நேர்மை போன்ற அறநெறிகளைத் தமது இலக்கியங்களிலும் நீதிநெறி நூல்களிலும் சமய நூல்களிலும் எழுதி வருகின்றனர்.
- மக்கள் இவற்றைப் படித்துத் தாமும் இவ்வற நெறிகளை உள்வாங்கித் தமது குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுத்து மனித நேயத்தை வளர்க்க முயல்கின்றனர்.

**தற்காலத்தில் மனிதநேயம்**

> **"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும் ஞாலத்தின் மாணப் பெரிது."**

- உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியதாகும்.
- மனிதநேயம் ஓரளவு மங்கிப் போய் கிடக்கின்றது.
- பேரிடர் காலங்களில் நேயத்துடன் மக்கள் ஓடி ஓடிச் சென்று உதவுகிறார்கள்.
- இயற்கைச் சீற்றங்கள் நிகழும் நேரங்களில் மட்டும் தலைதூக்கும் மனிதநேயம் மற்ற நேரங்களில் எங்கே போய் ஒளிந்து கொண்டது என்பதைத் தேட வேண்டிய நிலை உள்ளது.
- சந்திரனில் முதன் முதலாக கால் வைத்த ஆம்ஸ்ட்ராங்கிடம் கேட்டபோது எத்தனையோ லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சந்திர மண்டலத்தில் இடம் பிடித்த மனிதனால் பக்கத்த வீட்டில் இருக்கும் மனிதன் மனதில் இடம்பிடிக்க முடியவில்லையே என வருத்தப்பட்டேன் என்று சொன்னார்.
- சந்திரனில் மனிதன் கால் வைத்தாலும் அருகில் உள்ள பக்கத்தில் உள்ள மனிதர்களிடம் அன்புடன் நடந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம்தான் ஆம்ஸ்ட்ராங்கிடம் இருந்துள்ளது.

**அருளுடைமை**

- அருள் என்பது அன்பு பெற்றெடுத்த குழந்தை என்கிறார் வள்ளுவர்.
- அன்பின் வழியில் தோன்றுவது அருள் என்னும் பண்பாகும்.

> **"நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால் தேரினும் அ·.தே துணை"**

- என்னும் வள்ளுவரின் குறள் அருள்மிக்க வாழ்வே சிறந்த வாழ்வு என்று குறிக்கின்றது.
- அருளோடு வாழும் வாழ்வே சிறந்த வாழ்வாகும்.
- உலகம் பல வழிகளில் சிறப்பாக இயங்கினாலும், அருள் தேடி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு என்று மனிதநேயம் மிக்க வாழ்வைச் சிறப்பிக்கிறார் வள்ளுவர்.
- இக்குறளுக்கு பல்வேறு உரைகள் எழுதப்பெற்றுள்ளன.
- எல்லாச் சமயத்தாராலும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து என இராமானுஜ கவிராயர் விளக்கம் தருகிறார்.
- உலகில் சமயங்கள் பலவாக உள்ளன.
- ஒரு சமயம் கூறியதை இன்னொன்று மறுக்கலாம் அல்லது ஏற்கலாம் ஆயின் அனைத்து சமயங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சில கருத்துக்கள் ஒவ்வொரு சமயத்திலும் உள்ளன.
- அவற்றுள் ஒன்றுதான் அருளுடைமையாகிய மனிதநேயம் உன் உயிரைப் போல, பிற உயிரையும் நேசி என்ற அருள் சார்ந்த கருத்தை அதாவது மனிதநேயக் கருத்தை அனைத்துச் சமயங்களும் ஏற்று நிற்கின்றன.
- இவ்வாறு சமயம் சார்ந்த மனிதநேயத்திற்கும் இக்குறள் பொருந்துவதாக உள்ளது.

**பண்புடைமை**

- மனிதநேயமிக்க மனிதர்கள் இன்றும் வாழ்ந்து

கொண்டிருப்பதால்தான் இவ்வுலகம் அழிந்து போகாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறார் வள்ளுவர்.

> "பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்"

- என்ற திருக்குறள் மனிதப் பண்பு உடையவர்களால் மட்டுமே இவ்வுலகம் நிலை பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது.

**பொறையுடைமை**

- உலகில் துன்பம் இல்லாத மனிதர்களே கிடையாது.
- அப்படியான சூழலில் நமக்கு துன்பம் தந்தவர்களை கண்டுகொள்ளாமல் நமது வெற்றியின் மூலம் அவர்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

> "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
> தகுதியான் வென்று விடல்"

- உதாரணமாக 1932ஆம் ஆண்டு விமான சேவையை டாடா நிறுவனம் தொடங்கியது.
- இதனை அரசு 1953ஆம் ஆண்டு தேசியமயமாக்கியது.
- மனம் தளராமல் பல்வேறு தளங்களில் தொடர்ந்து டாடா நிறுவனம் தன்னை வளர்த்துக் கொண்டது.
- இதன் பலனாக 2022ஆம் ஆண்டு அரசிடமிருந்து விமான சேவையை மீண்டும் டாடா நிறுவனமே கையகப்படுத்தியது.
- இதையே வள்ளுவர் இக்குறளின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

**கல்வியில் மனிதநேயம்**

- தாம் கற்ற கல்வி பிறருக்கு உதவும்போதுதான் முழுமையடைகிறது.
- அதுவே கல்வியின் சிறப்பு என்று கீழ்க்கண்ட குறள் மூலம் எடுத்துரைக்கிறது.

> "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்"

- மறைந்த குடியரசுத் தலைவர் கலாம் அவர்கள் தங்களது கண்டுபிடிப்புகளிலேயே சிறந்ததாக மாற்றுத் திறனாளிகளுக்காக அவர் கண்டுபிடித்த குறைந்த எடை கொண்ட செயற்கைக் கால்களே என்று பெருமிதப்படுத்துகிறார்.
- இதைத்தான் வள்ளுவர் தான் இன்பம் அடைவதாகிய கல்வியினாலே உலகத்தாகும் இன்பம் அடைவதை கண்டு கற்றறிந்தவர், மேன்மேலும் தாம் கற்பதையே விரும்புவார்கள் என்று உரைக்கிறார்.

**முடிவுரை**

- அன்பு செலுத்துதல், உதவி செய்தல், மனிதநேயம் பண்பின் மூலமே கடவுளை அடைய முடியும் என்று அனைத்து சமயங்களும் போதிக்கின்றன.
- கொள்கை ரீதியாக, வாழ்வியல் ரீதியாக வேறுபட்டிருந்தாலும் அனைவருக்கும் இடமளிக்கும் ஒற்றைக்குடையாக திருக்குறள் விளங்குகிறது.
- அடுத்தவருக்கு நாம் செய்யும் உதவி ஒரு சிறப்பான வாழ்த்தைப் பெற்றுத் தருகிறது.
- இதன்மூலம் நாம் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் போதெல்லாம் வாழ்வதற்கான உந்துசக்தியை பெறுகிறோம்.
- மனிதநேயம் பேரிடர் காலங்களில் வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் அடுத்த தலைமுறைக்கும் கடத்தப்பட வேண்டிய பண்பாகும்.

**5. சமூக அரசியல், பொருளாதார நிகழ்வுகளில் வள்ளுவத்தின் பொருத்தப்பாட்டை விவரி?**

**முன்னுரை**

- திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் காலத்தால் அழியாத, அறநூலான திருக்குறளில் காணக்கிடைக்கின்றன.
- திருவள்ளுவரின் காலம் குறித்து பல்வேறு கருத்துக்கள் அறிஞர்கள் மத்தியில் நிலவினாலும் பொதுவாக பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டின் சங்க காலத்தையே அவரின் காலமாகக் கருதலாம்.
- திருவள்ளுவரின் கருத்துக்கள் நடைமுறைக்கு ஏற்றவைகளாகவே இன்றும் கருதப்படுகின்றன.
- வள்ளுவரின் நிறைய பொருளாதாரக் கருத்துக்கள் திருக்குறளின் இரண்டாம் பகுதியான பொருட்பாலில் காணப்படுகின்றன.
- வாழ்வின் அடிப்படைகளை அறிந்தவர் வள்ளுவர்.
- அவர் மழையை வாழ்வின் பெரும் ஆதாரமாகக் கருதினார்.
- மழைதான் உணவு தருகிறது.
- மழைதான் பொருளாதார வாழ்வில் அடிப்படையை உருவாக்குவதாக நம்பினார்.
- வாழ்வின் அடிப்படை பொருளாதார தேவையான வேளாண்மை மழையைச் சார்ந்திருக்கிறது அழிமானத்தையும் தரும்.
- அழிமானத்திலிருந்து மீண்டும் தழைத்தோங்கவும் செய்யும் ஆகிய இரண்டையும் செய்யும் தன்மையுடையது மழையாகும்.

**உற்பத்திக் காரணிகள்**

- உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், அமைப்பு, காலம், தொழில்நுட்பம் ஆகியவை குறித்து பல கருத்துக்களை வள்ளுவர் எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

**வேளாண்மை**

- வள்ளுவர் வேளாண்மையை அடிப்படைப் பொருளாதார நடவடிக்கை என்கிறார்.

- உலகத்தின் அச்சாணியாக வேளாண்மை இருப்பதாகவும், பொருளாதார ரீதியாக பிற துறைகளின் செழுமை வேளாண்மை துறையின் செழுமையைச் சார்ந்தது.
- உழவுத்தொழில் புரிபவன் மட்டுமே தலையாய மனிதன்.

> **"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்"**

- உழவுத்தொழிலே மற்ற தொழில்களைவிட உயர்ந்ததாக வள்ளுவர் கருதுகிறார்.

**பொது நிதி**

- திருவள்ளுவர் பொதுநிதி பற்றி பொது வருவாய், பொதுச் செலவு, நிதி நிர்வாகம் ஆகிய தலைப்புகளில் விரிவாக எழுதியிருக்கிறார்.
- வருவாய் உருவாக்குதல், வருவாயை சேகரித்தல், வருவாய் நிர்வாகம், பொதுச் செலவு பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

**பொதுச் செலவு**

- வள்ளுவர் சமநிதிநிலை அறிக்கையைப் பரிந்துரை செய்கிறார்.
- ஒரு நாடு அதன் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில், அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை என்கிறார்.
- நிதிநிலைக் கொள்கை வகுக்கும்போது செய்ய வேண்டியதாக அவர் சொல்வது எப்போதும் உபரி நிதிநிலை இருக்கட்டும்.
- ஆனால் ஒருபோதும் பற்றாக்குறை நிதிநிலை மட்டும் கூடாது.
- பொதுச் செலவை கீழ்க்காணும் மூன்று இனங்களுக்கு செலவிடுமாறு வலியுறுத்துகிறவர் வள்ளுவர்
- 1. பாதுகாப்பு, 2. பொதுப்பணிகள், 3. சமூகப்பணிகள்

**வெளிநாட்டு உதவி**

- வள்ளுவர் வெளிநாட்டு உதவி பெறுதலை ஆதரிக்கவில்லை.
- குறள் 739இல் வெளி உதவி கோரும் நாடுகள் நாடுகளே அல்ல என்கிறார்.
- வேறுவகையில் சொல்வதனால் அவர் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தையே வலியுறுத்தினார்.

**வறுமை மற்றும் பிச்சையெடுத்தல் (இரத்தல்)**

- பசிக்கொடுமையிலிருந்து பெறும் விடுதலையே ஒவ்வொரு மனிதனும் பெறக்கூடிய அடிப்படை சுதந்திரம் என்றும் அனைத்து குடிமகனும் இதனை அனுபவிக்க வேண்டும் என்று வள்ளுவர் கருதினார்.
- வறுமையே அனைத்து தீமைகளுக்கும் வேராய் இருந்து எக்காலத்தும் தீராத துன்பங்களைத் தருவதாகவும் கருதினார்.
- ஆனால் இந்தியாவில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள் எண்ணிக்கையில் பிச்சையெடுப்பவர்கள், வசிப்பிடமின்றி சாலையோரம் வசிப்பவர்கள் மற்றும் குப்பை பெருக்குபவர்கள் அதிகமாக உள்ளனர்.

**செல்வம்**

- செல்வம் வாழ்வதற்கான வழியே அன்றி அதுவே இலக்கல்ல என்று வள்ளுவர் கருதினார்.
- செல்வம் சிறந்த மதிக்கத்தகுந்த வழிகளிலேயே ஈட்டப்பட வேண்டும் என்கிறார்.
- செல்வத்தைப் பதுக்கி வைப்பது பயனற்றுப் போகும் என்கிறார்.
- அவரைப் பொறுத்த வரையில் தொழில்தான் உண்மையான செல்வம்.
- மேலும் உழைப்புதான் மிகப்பெரும் வளம்.

**நலம்பேணும் அரசு**

- திருவள்ளுவர் நலம்பேணும் அரசு எது என்பதைக் குறித்து விளக்கியுள்ளார்.
- ஒரு நலம்பேணும் அரசில் வறுமை, எழுத்தறிவின்மை மற்றும் நோய்கள் போன்றவை இருக்காது என்கிறார்.

**நலம் பேணும் அரசின் முக்கியக் கூறுகள்**

- நோய் நொடியற்ற ஆரோக்கியமான மக்கள்
- பெருஞ்செல்வம்
- நல்ல விளைச்சல்
- வளம் மற்றும் மகிழ்ச்சி
- மக்களுக்கு முழுப் பாதுகாப்பு

**நாட்டை ஆளும் அரசு**

- நாட்டை ஆளும் அரசு எப்படி இயங்க வேண்டும்.
- அரசு எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என்பதை வள்ளுவர் கீழ்வருமாறு உரைக்கிறார்.
- அரசுக்குப் பொருள் சேரும் வழிகளை மேலும் உருவாக்குதலும், அப்படிச் சேர்த்த பொருளை முறையாகத் தொகுத்தலும், அவற்றை தகுந்த முறையில் காத்தலும், காத்தவற்றை தக்க செலவினங்களுக்குச் செய்தலுமே வல்லமையான அரசு என்கிறார்.

> **"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு"**

**ஆட்சி செய்வோருக்கு இனியது**

- சமுதாயத்தினுள் குடிமக்கள் வாழ்க்கை நன்னிலை பெற செம்மையான நெறிகளை வகுத்து ஆட்சிபுரிதல் அரசின் கடமையாகும்.
- மக்களின் இயல்பையும் தேவைகளையும் உணர்ந்து செயல்படும் செங்கோன்மையாக அறம் தவறாது, அல்லவை நீக்கி அரசானது சமுதாயத்தினை மேன்மையுறச் செய்தல் வேண்டும் என்கிறது கீழ்வரும் குறள்.

> "அறனிழுக்கா நல்லவை நீக்கி மறனிழுக்கா
> மானம் உடையது அரசு"

**அரசியல் நெறி**

- குடிமக்களுக்கு வேண்டியவற்றைச் செய்துகொடுத்துச் சமுதாயத்தை மேன்மையுறச் செய்யும் அரசையும் அரசனையும் இவ்வுலக உயிர்கள் அடைக்கலமாகக் கொண்டு வாழும் எனத் திருக்குறள் அரசியல் நெறியினை நயம்பட உரைக்கிறது.

> "குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு."

**அரசின் தொழில்**

- குடிமக்களை வருந்தாவிடாமலும் தானும் வருந்தாமலும் மக்களைக் காத்து மக்களுக்குத் துன்பம் விளைவிப்பவரை அடையாளங்கண்டு அவர்க்கு தண்டனையளித்துத் தன் பணியைச் செவ்வனே செய்பவரே நல்ல ஆட்சியாளர் எனவும், குற்றத்தை கடிந்துரைத்தல் ஆள்பவருக்கு வடுவாகாது.
- மாற்றாக அது ஆள்பவரின் தொழிலே ஆகும் என்கிறது இக்குறள்,

> "குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
> வடுவன்று வேந்தன் தொழில்"

**அரசுக்குத் துணையாவன**

- நாட்டை ஆளும் அரசுக்கு துணை நிற்பவர்கள் அமைச்சர்கள்.
- இம்மரபு அக்காலம் தொட்டே ஆட்சிமரபாக இருக்கின்றமையைக் காணமுடிகிறது.
- நாட்டை ஆள்பவர் முதல்வராகிறார்.
- முதல்வருக்குத் துணையாக அமைச்சர்கள் இருக்கிறார்கள்.
- இவ்வமைச்சர்கள் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுதல் நலம் என்பதை அமைச்சு அதிகாரத்தின்வழி வள்ளுவர் சுட்டுகிறார்.

> "அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந்
> திறனறிந்தான் தேர்ச்சித் துணை"

- அறநெறியினை நன்கு உணர்ந்தவராகவும், சொற்திறன் கொண்டவராகவும், செயல்திறன் உடையவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக அரசுக்கு விளங்க முடியும் என்கிறது மேற்காணும் குறள்.

**அரசின் செங்கோன்மைப் பாங்கு**

- குற்றங்களை ஆராய்ந்து எவரிடத்திலும் பாரபட்சம் காட்டாமல், இவர் வேண்டியவர் இவர் வேண்டாதவர் எனப்பாராது நடுநிலையோடு குற்றத்தினை அறிந்து தண்டனை வழங்கச் சொல்லும் மன்னனின் செங்கோன்மையை வள்ளுவர் பின்வருமாறு உணர்த்துகிறார்.

> "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்து செய்வதே முறை"

- இக்கருத்தினை அடியொற்றிய நான்மணிக்கடிகையின் பாடலொன்று, மன்னன் என்பவன் எத்தகையவரிடமும் ஒருசார்பின்றி ஆட்சிபுரிவதே நீதிமுறை எனவும், நடுநிலையோடு இருந்து ஆராய்ந்து நடப்பவனே அரசாளும் இயல்புடையவனாவான் எனவும் அரசாளும் தகைமையினைச் செப்புகிறது.

> "கண்ணோட்டம் இன்மை முறைமை தெரிந்து ஆள்வான்
> உண்ணோட்டம் இன்மையும் இல்"

**எது நல்ல நாடாகும்**

- நாடானது குறைவில்லாத விளைச்சலைப் பெற்று விளங்குதலும், அதன்வழி குறைவிலாது அறநெறி அறிந்தவர் வாழ்தலுமாகிய பண்புகளைக் கொண்ட நாடு செல்வமிக்கோர் நாடாகச் சேரும் என நாட்டினுடைய இயல்பினை இயம்புகிறது.
- இங்கு அறநெறிக்கு அடிப்படை விளைச்சலால் நாடு செழிப்படைதலே.
- நாடு வறுமையுறின் அறநெறிக்குக் கேடு விளைந்து மக்களும் துன்பம் நேரும் என்பது மறைபொருளாக உரைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

> "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு"

- வள்ளுவர் சுருங்கச் சொன்ன இக்கருத்தை சிறுபஞ்சமூலத்தின் பாடலொன்று சற்றே விரித்துச் சொல்லுகிறது.
- வயலில் நீர் உயரவே நெல் உயரும்.
- நெல் உயர்ந்து வளங்கொழித்தால், அதனை நம்பிவாழும் சீர்பெற்ற குடிகள் உயரும்.
- பல்வேறு குடிகளாகிய மக்கள் உயர்ந்தால் அரசர் உயர்வடைவார் என உலகு உரைக்கும் என்கிறது.

> "நீர்சான்று உயரவே நெல் உயரும் – சீர்சான்ற
> தாவாக் குடிஉயரத் தாங்கு அருஞ்சீர்க் கோ உயர்தல்
> ஓவாது உரைக்கும் உலகு"

**அரசுக்குக் கூடாதன**

- நாட்டை ஆள்வோர் தன்னலத்தைப் பெரிதாகக் கொண்டு நாட்டு வளங்களைச் செழிக்கச் செய்யாமல், கிடைத்த பொருளை வீணாய்ச் செலவிட்டு பொருளனைத்தும் தீர்ந்தபின்பு, அரசை நடத்த மீண்டும் மக்களிடமே பொருள்வேண்டி நிற்கும் நிலையை மிகக் கடுமையாக வள்ளுவர் சாடுகிறார்.
- செங்கோல் ஏந்திய மன்னன் மக்களிடத்தில் பொருள்வேண்டுதல் என்பது வழிப்போக்காகச் செல்பவரிடம் வழிப்பறி செய்பவன் வேல் எனும் ஆயுதம் கொண்டு பொருள் பறிப்பது போன்றதாகும் என்கிறார் வள்ளுவர்.

> "வேலோடு நின்றான் இடுஎன்றது போலும்
> கோலோடு நின்றான் இரவு"

- இங்கு இரவு என்பது மக்களிடம் மன்னன் வேண்டிநிற்பதைக் குறிக்கிறது.

**முறைசெய்து காக்கும் அரசுக்குப் புகழ்**

- நாட்டையாளும் ஆட்சியாளனாகிய மன்னவன் கற்றறிந்து, செங்கோலாட்சி புரிந்து, பகிர்ந்துண்டு, தக்கநெறியில் பொருள் சேர்ந்து, சீரிய திட்டங்கள் வகுத்து, நல்லியல்புடைய அமைச்சரவையோடு கூடியிருந்து தம் ஆட்சித்திறத்தால் பொருள் வழங்கி நல்லாட்சி தருபவனாக இருத்தலே நலமுடையதாகும்.
- இத்தகைய நெறிமுறைகளை உணர்ந்து ஆட்சி செய்பவரை மக்கள், நல்லாட்சியாளர் எனக் கருதுவோடு மட்டுமல்லாமல் ஒருபடி மேலே சென்று இறைவனுக்கு இணையாக வைத்துப் போற்றுவர் என்கிறது திருக்குறளின் அரசியல் நெறி.

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையொன்று வைக்கப் படும்"

- திருக்குறள் கூறும் இத்தகைய அரசியல் நெறியின் எக்காலத்திற்கும் பொருந்துவனவாக இருப்பதே இதன் தனித்தன்மையாகும்.
- திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சி காலம்.
- அந்த காலத்தில் அவர் அரசர்க்குச் சொன்னவையாக அமைந்த அறிவுரைகள் இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் மொழிகளாக உள்ளன என மு.வரதராசன் அவர்கள் வள்ளுவரின் அரசியல் தொலைநோக்குப் பார்வையை குறிப்பிடுகிறார்.

**திருக்குறளில் அரசியல்**

- கௌடில்யரால் எழுதப்பட்ட அர்த்தசாஸ்திரம் என்ற நூல் மிகவும் பழமையான நூலாக இருந்தாலும் அது அரசியல் பொருளாதாரம் என்பதில் அதிகம் கவனம் செலுத்துகிறது.
- ஆனால் திருவள்ளுவரின் திருக்குறள் அதிகமாக அரசியல் ஆளுகையைப் பற்றி பேசுகிறது.
- திருக்குறளில் இருந்து நாம், அரசின் கூறுகள், இலட்சிய அரசின் தன்மைகள், நல்ல அரசரின் குணக்கூறுகள், அமைச்சர்களுக்கான தகுதிகள், அரசு அலுவலர்களை தேர்ந்தெடுக்கத் தேவையான தகுதிகள், அதிகார ஒப்படைப்பு போன்ற பலவற்றினை அறிய முடிகிறது.

**அரசரின் தன்மைகள்**

- திருக்குறளில் அரசு, மற்றும் அரசன் ஆகியோரின் தன்மைகள் மற்றும் பண்பு நலன்கள் பற்றி இறைமாட்சி என்ற ஓர் அதிகாரம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக

> "படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு"

- என்று கூறுகிறார். அதாவது ஒரு அரசன் சிறந்து விளங்குவதற்கு ஆறு அடிப்படைக் கூறுகள் அமைந்திருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறார்.
- சிறந்த படை
- நல்ல குடிமக்கள்
- நல்ல மூலவளங்கள்
- அறிவார்ந்த அமைச்சர்கள்
- சிறந்த பாதுகாப்பு மிக்க அரண்கள்
- நட்பு நாடுகளின் ஆதரவு ஆகிய ஆறும் சிறந்த அரசனுக்கு வேண்டுமெனக் கூறுகிறார்.

**அரசரின் குணநலன்கள்**

- அரசராக இருக்க வேண்டுபவர் என்னென்ன குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறாறெனில்,

> "அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
> எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

- அதாவது ஓர் அரசன் என்பவன் துணிவு, ஈகைக்குணம், பொது அறிவு, செயலூக்கம் ஆகியவற்றுடன் விளங்க வேண்டுவது அவசியம் என்று கூறுகிறார்.

அதுபோலவே,

> "தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
> நீங்கா நிலனாள் பவர்க்கு"

- நிலத்தை ஆளும் அரசனுக்கு காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, நல்ல காரியங்களை செய்வதற்கான துணிவுடைமை ஆகிய மூன்றும் அவசியமான குணம் என்கிறார் திருவள்ளுவர்.

**நாட்டிற்கு தேவையான நன்மைகள்**

- ஒரு நாடு சிறந்த நாடாக விளங்குவதற்கு என்னென்ன தன்மைகள் அமைந்திருக்க வேண்டுமென்பதனை,

> "உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு"

- என்ற குறளில் உண்ண உணவில்லாத பஞ்சநிலை, தீராத பல நோய்கள், எப்போதும் தாக்குவதற்கு தயாராக இருக்கும் பகைநாடுகள் ஆகிய மூன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

**முடிவுரை**

- அரசியல் உட்கூறுகளான நாடு.
- நாட்டின் அரசு, அரசின் ஆட்சிமுறை, அமைச்சு, இவற்றின்கீழ் வாழும் குடிமக்கள் என அரசியலுக்குள் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சொல்லப்பட்ட அறநெறிமுறைகளைப் பார்க்கும்பொழுது எந்நாட்டவருக்கும் உகந்தவையாக இருக்கின்றன.
- திருக்குறள் கூறும் அரசியல் கருத்துக்களின் செவ்வியல் தன்மையால் உயர்ந்து நிற்கின்றன.

**6. அறஇலக்கியங்களுள் "தமிழ்மாதின் இனிய உயர்நிலையாக" திருக்குறள் திகழ்வது எவ்வாறு?**

- அறத்துப்பாலில் கடவுள் உண்மை கூறப்பட்டுச் சமயச் சார்பற்ற அறம் போதிக்கப்படுகிறது; அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்று சாற்றப்படுகிறது.
- அன்புநெறி எல்லா இடங்களிலும் வலியுறுத்தப்படுகிறது; செயல்நிலை அறமே பெரிதும் வற்புறுத்தப்படுகிறது; பரந்துபட்ட பொறுமையுணர்வு அறிவுறுத்தப்படுகிறது.

**குறள் பகுப்பில் அறம்**

- குறளின் பெரும்பிரிவுகளான பால் பகுப்பில் அமைந்த அறம், பொருள், காமம் என்பனவற்றுள் அறம் வழக்கமாக முதலில் வைத்துப் பேசப்படுகிறது.
- இயல்கள் என்று அழைக்கப்படும் நான்கு சிறு பகுதிகளாக முதலில் பாயிரம், அடுத்து இல்லறம், துறவறம் கடைசியில் ஊழ் என அறத்துப்பால் உள்ளதாக திருவள்ளுவமாலை மூலமும் உரைசெய்தவர்கள் மூலமும் அறிகிறோம்.
- பாயிரமான முதல் பகுதி கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் எனும் நான்கு அதிகாரங்களாக அமைந்து குறளுக்கு ஒரு முன்னுரையாக வருகிறது.
- இந்த நான்கையும்

> **"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
> **வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
> **கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"**

- (தொல்.புற-33) எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் கடவுள் வாழ்த்து, கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய வாழ்த்து நிலைகளோடு தொடர்புப்படுத்தி இவற்றை மனதில் வைத்தே வள்ளுவர் பாயிரம் படைத்தார் எனச் சொல்வர்.
- பாயிரத்தை அடுத்து இல்லறம் சொல்லப்பட்டுள்ளது. இல்லறத்தில் இருப்பவர்கள், வீட்டிலும் வெளியே சமுதாயத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களும், கடமைகளும், செய்ய வேண்டிய செயல்களாகவும், செய்யக்கூடாதவையாகவும் பிரித்துக் காட்டப்பட்டு, 200 குறட்பாக்களாக இல்லறவியலில் இடம்பெற்றுள்ளன.
- அடுத்துத் துறவறவியலில் மனித வாழ்வின் முதிர்ந்த நிலை விளக்கப்படுகிறது.
- முதிர் நிலையாகிய துறவறத்தில் நிலையாமை கூறி, அருளுடைமை, கொல்லாமை, வாய்மை, அவா அறுத்தல் ஆகிய நிலைத்த அறங்களும் கூறப்பட்டுள்ளன.
- மேலும் துறவறவியலில் சமயங்களின் பொய்ம்மையான கொள்கைகளுக்கும் போலித்துறவிற்கும் எதிரான கருத்துக்களையும் வள்ளுவர் பதிவு செய்துள்ளார்.
- மொத்தம் 130 குறட்பாக்களில் துறவறவியல் அமைந்துள்ளது. துறவறம் இல்லறத்தின் எதிர்ப்பண்பு என்று கருதப்படவில்லை
- இல்லறத்தின் தொடர்ச்சியே துறவறம்; இல்லறத்திற்குள்ளேயும் துறவறத்தைப் பயிற்சி செய்யலாம்.
- துறவறமென்பது வாழ்க்கையை வெறுத்து ஓடுவது அன்று; இல்லறத்திலும் மேம்பட்ட விரிந்து பரந்த அன்பு வழியைப் பேணுவதென்பதும் வள்ளுவர் எண்ணமாதலின் அவர் துறவறவியலில் வாழ்வை வெறுத்தலையும் உலகை மறுத்தலையும் பேசவில்லை என்பது குறிக்கத்தக்கது.
- துறவறத்தில் கூறிய பல குறள்கள் இல்லறத்தார்க்கும் ஏற்றனவாய் இருக்கின்றன.
- இல்லறத்தாரும் துறவறவழியில் நின்றவரே என்பதையும் குறள் நிலைநாட்டுகின்றது.
- இவ்வாறு மாற்றி அமைக்கத்தக்கவாறு இல்லறவியலும் துறவற இயலும் அமைந்துள்ளதாலும் இல்லறவியல் துறவறவியல் பாகுபாடு இல்லாமலே அறத்துப்பாலின் இப்பகுதிகள் புரிந்துகொள்ளப்படுவதாலும் வள்ளுவமாலை பாடியோராலும் அவற்றை ஏற்று உரை பகன்ற உரையாசிரியர்களாலும் செய்யப்பட்ட இந்த இயல் பகுப்புமுறை தேவைதானா என்ற வினா எழுகிறது.
- மேலும் இன்றைய சூழலில் நாம் துறவறத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.
- எனவே இல்லறம் துறவறம் என்ற பகுப்பில்லாமல் அறத்துப்பாலைப் பயில்வதே பயனளிக்கும்; கள்ளாமை ஏன் துறவறவியலில் சொல்லப்பட்டுள்ளது? என்பது போன்ற தேவையற்ற ஐயங்களும் தவிர்க்கப்படும்.
- இறுதிச் சிறுபகுதி ஊழைப் பற்றிச் சொல்லும் ஓரே ஒரு அதிகாரம் கொண்டது.
- ஊழ் என்ற சொல் முறை அல்லது இயற்கையின் செயல் எனப் பொருள்படும்.
- ஊழிற்பெருவலி யாவுள? என்று கேட்டு ஊழின் வலிமையை நமக்கு உணர்த்துகிறார் வள்ளுவர்.
- அறத்துப்பாலின் இறுதியில் வரும் ஊழ் அதிகாரம் உயிர்களால் ஆவது எதுவுமில்லை; நடப்பது நடந்தே தீரும் என்ற முடிவோடு நிறைவெய்துகிறது என்பதாகத் தோற்றம் அளிக்கிறது.
- இவ்வாறாக பாயிரம் 4 அதிகாரங்களையும் இல்லறம் 20 அதிகாரங்களையும் துறவறம் 13 அதிகாரங்களையும் கடைசியாக ஊழ் 1 அதிகாரத்தையும் கொண்டு அறத்துப்பால் மொத்தமாக 38 அதிகாரங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அறம் குறிப்பது**

- மனிதனையும் சமுதாயத்தையும் செந்நெறிப்படுத்தும் ஒழுக்க நெறி அறம் எனப்படுகிறது.

- அறம் குறிக்கும் பொருள்கள் பலவெனினும் நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலேயே பெரும்பாலும் அது வழங்கி வந்துள்ளது. குறளிலும் அப்பொருளே மேற்கொள்ளப்பட்டது.
- வரைவிலக்கணம் கூற முடியாத அறத்திற்கு வள்ளுவர் சில சொற்களால் மிகச் சீரிய முறையில் இலக்கணம் கூறியுள்ளார்;
- மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன் அதாவது உள்ளத்தில் குற்றம் இல்லாமலிருத்தலே அறமாகும் என்ற மாட்சிமையான குறள் தந்தார்.
- அறம் என்ற சொல்லுக்கு ஒத்த சொல் வடமொழியில் தருமம் என்பது. ஆங்கிலத்தில் இதற்கு இணையான, இதன் பொருள் முழுமையும் அடக்கிக் காட்டக்கூடிய சொல் ஒன்றும் இல்லை என்பர் அறிஞர்.
- தனி மனிதன், குடும்பம் முதலியவற்றை மையமாகக் கொண்ட அறத்துப்பால் மனிதனின் தனி வாழ்க்கையை விளக்கி அன்பை வளர்த்து அறத்தைப் போற்றி மனத்தூய்மை பெற்று வாழும் வகையைக் கூறுகிறது.
- அறநெறியில் அழுத்தமான நம்பிக்கை உடைய வள்ளுவர் நூலின் அறம், பொருள், இன்பம் என்கிற முப்பாலிலுமே அறம் விரவி நிற்கிறது.
- இன்பமும் அறம் சார்ந்த இன்பமாகக் கருதுதல் வேண்டும் என்று வள்ளுவர் எண்ணினார்.
- எனவேதான் அவர் காலத்தில் இலக்கிய மரபுக்காகவாவது ஓதியே ஆகவேண்டி இருந்த பரத்தையின் பிரிவையும் ஒழுக்க மீறலாகக் கருதப்படாத பல பெண்டிர் சேர்க்கையையும் முற்றும் அகப்பாடல்களையே கொண்ட காமத்துப்பாலில் இருந்து முழுவதுமாக நீக்கினார். (இவற்றை அறம் சாரா இன்பம் என்று பொருட்பாலிலும் அவர் கடிந்துரைத்து உள்ளார்.)
- அறத்தால் வருவதே இன்பம்; அறம் என்பது 'ஒழுகுநெறி' அல்ல;
- அது 'ஒழுகியாகவேண்டிய நெறி' ஆகும்; அறத்தை மறத்தல் ஒன்றே ஒருவனுக்கு கேடு விளையப் போதுமானது; அறநோக்கை இடைவிடாது செல்லும் வாய் எல்லாம் செயல்படுத்தவேண்டும்; மற்றும் நன்மை மட்டுமே அன்றி தீமை இன்மையும் அறம் ஆகும்.
- முடிவு நல்லதாக ஏற்படுமானால் அதை அடைவதற்குள்ள வழி தவறாக இருந்தாலும் அத்தவற்றைச் செய்யலாம் என்பதில் வள்ளுவருக்கு உடன்பாடு இல்லை;
- வழியும் தூய்மையாகவே இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவார்.
- ஈன்றாள் பசி காண்பாள் ஆயினும் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யாதே என்பது குறள் தரும் அறவுரை.

**அறத்தின் பயன்**

- இல்வாழ்க்கைதான் அறம்; இல்லறத்திலிருந்து வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துக்கு ஒப்ப கருதப்படுவான்;
- இல்வாழ்வில் நின்று ஒழுகுபவர்கள், ஒப்புரவறிந்து, ஈகையால் புகழ் பெற்று, அதனையும் கடந்து அருள் முதலிய விரதங்களை மேற்கொண்டு, தவத்தால் நீங்கப் பெற்று, நிலையாமையை உணர்ந்து, துறவு நிலை மேற்கொண்டு, எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றுணர்ந்து, அம்மெய்யறிவால் துன்பத்துள் துன்பம் விளவிக்கும் அவாவை அழித்து, சிறப்பெனும் செம்பொருள் காண்கிறார்கள்.
- அற ஒழுக்கத்தின் பயன் சிறப்பும் செல்வமும் ஆகும். இதுவே அறத்துப் பால் தரும் திரட்டு.

**குறள் அறத்தின் சிறப்பு**

- பழைய வடவர் பனுவல்களில் தர்மம் என்பது மனித இனத்தை அனைத்து நிலைகளிலும் சமன்மைப் பார்வையோடு நோக்காமல், நடுவு நிலையற்ற, ஒரு சார்பு கொண்ட ஒரு சமுதாய முறைமையையே விளக்கியது. ஆனால் குறளறம் சமமின்மை கொண்ட ஒரு சமுதாய அமைப்பு முறையை எடுத்துக் காட்டியது.
- குறள் காலத்தில் போற்றப்படாத நெறிகள் அறத்துப்பாலில் வலியுறுத்தப்பட்டுள்ளன:
- முதன் முதலாக குறளில்தான் ஆணுக்குப் பாலியல் ஒழுக்கத்துக்கான ஓர் அறம் கூறப்பட்டது; வள்ளுவர் அதை பிறன் மனை நோக்காத பேராண்மை என்று சொல்லி அழைத்தார்.
- மனைவியை விடுத்துப் பிற பெண்களிடம் செல்வது, பரத்தையர் என்ற பொது மகளிரிடம் செல்வது போன்றவை மரபான செயல்களாகக் கருதப்பட்ட வேளையில் அவற்றை மறுத்துச் சாடியுள்ளார்.
- உணவுக்காக உயிர்களை வேட்டையாடிக் கொல்லுவது தொல்மரபில் கொலை அன்று.
- குறள் உயிர்களைக் கொல்லாதிருப்பதோடு புலால் உண்ணாதிருப்பதும் அறம் என்றது.
- ஆயிரம் வேள்வி செய்வதைவிட ஒன்றன் உயிரைக் கொன்று உண்ணாமை சிறந்தது; கொல்லாதவனை – புலால் உண்ணாதவனை உலகம் கைகூப்பி வழிபடும் என்கிறது குறள்.
- ஒழுக்கம் ஒருவர்க்கு உயிரைவிட மேலானது என்று சொல்லும் குறள் அதுவே ஒருவருடைய உயர்குடிப் பிறப்புத் தகுதிக்குக் காரணம் என்கிறது.
- உயர்குடி/குலத்தில் பிறந்தவன் ஒழுக்கத்திலிருந்து வழுவினால் இழிந்த குடி/குலப் பிறப்பவனவாய் வீழ்ச்சி அடைவான் என்று கூறி ஒழுக்கமே உயர்குடி/தாழ்குடிக்கு மதிப்பீட்டு அளவுகோல் என்று குறள் கொண்டது.
- நம்நாட்டு அறக்கொள்கைகளில் ஊழ் சிறப்பிடம் பெற்றுள்ளது.

**முடிவுரை**

- மனிதன் அடையும் இன்ப துன்பங்களும் முந்தைய பிறவியில் செய்த நல்வினை, தீ வினைகளால் உண்டாகின்றன எனும் எண்ணப் போக்கு வலிந்து ஊட்டப்பட்டு வந்தது.
- முதல் பார்வையில் அறத்துப்பாலின் ஊழ் பகுதி உயிர்வாழ்வு பேராற்று நீர்வழி ஓடும் தெப்பம்போல இயற்கைவழி இயங்கும் என்பதே வள்ளுவரின் சிந்தனையுமாகும் என்று நம்மை எண்ண வைக்கிறது.
- ஆனால் குறள் மனிதனுக்கு விருப்பம்போல் செயல்பட உரிமை உண்டு என்று கூறுவது.
- ஊழே எங்கும் முந்தி நிற்கும் என்று சொல்பவரே முயன்றால் ஊழையும் புறமுதுகு காணுமாறு செய்யலாம் என்றும் இன்னோர் இடத்தில் சொல்வார்.
- ஊழை அழித்தொழிக்க வேண்டுமானால் மனிதனுடைய ஆற்றல் மிகப் பெரியதாக இருக்க வேண்டும் என்ற உணர்வை எழுப்புவதற்காகத்தான் ஊழைப் பெரிதுபடுத்தி வள்ளுவர் பேசுகிறார்
- மனிதனுடைய அறிவு–சிந்தனை–முயற்சி ஆகியவற்றின் மூலம் ஊழை வெல்வதற்கு மனிதன் தன் பேராற்றலைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்பது குறளின் ஊக்கவுரை.

**7. ஏன் திருக்குறள் மனித இனத்திற்கான முதுமொழியாக திகழ்கிறது?**

**திருக்குறள் போற்றும் அறவாழ்வு**

- தமிழரின் அறவாழ்வைக் காட்டும் நூல்களில் திருக்குறளின் பங்கு மிகவும் உயரியது.
- திருக்குறள் ஒரு சமூகத்தளத்தில் நின்று பாடப்பட்டது எனினும், உலகனைத்திற்கும் பொதுவான தன்மைகள் அந்நூலில் மிகுதியாயுள்ளன.
- கடுமையான குறிக்கோள்களை நடைமுறைக்கு ஒவ்வாத நிலையிலிருந்து பேசாமல், வாழ்க்கையை உயர்ந்ததாகவும், இனியதாகவும் ஆக்கிக் கொள்வதற்குப் பயன்படும் ஒரு பண்பாட்டு வழிகாட்டியாகத் திருக்குறள் விளங்குகின்றது.
- திருக்குறள் காட்டும் அறநெறிக் கோட்பாடுகள் பிறிதொரு பாடத்தொகுப்பில் (வள்ளுவரின் வாழ்வியல் தத்துவம்) விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.
- இப்பாடத்தில் ஒழுக்கம், கள் உண்ணாமை, ஊன் உண்ணாமை, வரைவின் மகளிர் – இவை பற்றிய கருத்துகளை மட்டும் காண்போம்.

**திருவள்ளுவர் கூறும் கள் உண்ணாமை**

- சங்க காலச் சமூகம் கள் குடிப்பதைத் தவறென்று குறிக்கவில்லை. விருந்தோம்புவதில் கள் ஒரு தகுதியான இடத்தைப் பெற்றிருந்தது.
- ஆனால் திருவள்ளுவர் கள் குடித்தல் தீய பழக்கமென்பதை அறிவுறுத்தத் தயங்கவில்லை.
- கள் குடிப்பதால் வரும் கேடுகளைத் திருவள்ளுவர் கள் உண்ணாமை என்ற அதிகாரத்தில் கீழ்க்காணும் வகைகளில் கூறுகின்றார்:

**ஊன் உண்ணாமை**

- திருவள்ளுவர் அருள் உணர்வின் அடிப்படையில் புலால் உணவையும் மறுக்குமாறு அறிவுறுத்துகின்றார்.
- சங்க காலத்தில் கபிலர், ஔவையார் போன்ற பெரும் புலவர்களும் ஊன் உணவின் பெருமை பேசக் காண்கின்றோம். ஆனால் திருவள்ளுவர்,

> **“தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிதுஊன் உண்பான்**
> **எங்ஙனம் ஆளும் அருள்”**

- புலால் மறுப்பு என்கின்றார். தன் உடம்பைப் பெருக்க வைத்துக்கொள்ள வேறொன்றின் ஊனை உண்பவன் எங்ஙனம் அருள் உணர்வைக் காட்ட முடியும் எனக் கேட்கிறார்.
- சமண பௌத்த சமயங்களும் புலால் உண்ணுதலைக் கண்டித்திருக்கின்றன.
- தமிழகத்தில் அதைக் கண்டிக்கும் முதல் குரல் திருவள்ளுவருடையதாக இருந்திருக்கிறது.
- தமிழர் அருள் உணர்வு மிக்கவர். ஒரு பூங்கொடி, ஒரு மயில் பறவை என அஃறிணை உயிர்களும் துயருறுதல் கூடாது என நினைத்த சமூகத்தில் ஊன் உணவைச் சரியானதென்று கருத முடியாத நிலை தோன்றியதில் வியப்பில்லை. வைதிக சமயம் வேள்வியில் உயிர்க்கொலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தது.
- பசுவைப் புனிதமாகக் கருதுவதாகக் கூறும் வைதிக சமயம் முற்காலத்தில் வேள்வியின் பொருட்டுக் கொலைப்படுத்தப் பசுவைக் கட்டி வைத்திருந்ததனை மணிமேகலை குறிப்பிடுகின்றது.
- ஆயிரம் வேள்விகள் கூடப் பெரிதில்லை; ஓர் உயிரைக் கொல்லாத நோன்பே பெரியது என்கிறார் திருவள்ளுவர்.
- புண்ணை யாராவது உண்பார்களா என அவ்வுணவில் ஓர் அருவருப்பை ஏற்படுத்துகிறார்.
- திருவள்ளுவர் கண்ட இப்பண்பாடே அருளாளர்களின் சமயமாக வளர்ந்து இராமலிங்க வள்ளலாரின் உயிரிரக்கம் எனப்படும் சீவகாருணிய அறமாக ஓங்கியது.
- தமிழர்களில் பலர் சைவ உணவினராகவும், புலால் உண்பவர்களில் பலர் மாதத்தில் சில நாட்களேனும் நோன்பு மேற்கொள்வோராகவும் அமைவது இப்பண்பாட்டின் வளர்ச்சியால்தான் என அறியலாம்.

**வாழ்க்கையில் இருநிலைகள்**

- தமிழர் பண்பாட்டில் மிகக் குறிப்பிடத்தக்க இரண்டு நிலைகள் இல்லறமும் துறவறமும் ஆகும்.

- பிரம்மசரியம், சந்நியாசம், கிரகஸ்தம், வானப் பிரஸ்தம் என்ற நான்கு நிலைகளை வடமொழி கூறுகின்றது.
- வடமொழி இதிகாசங்களில் இடம்பெறும் முனிவர்கள் காடுகளில் வாழ்ந்தாலும் மனைவி மக்களோடு வாழ்ந்தனர்.
- அரசியல் துறையிலும் அவர்களுக்குப் பங்கு இருந்தது. மேனகை போன்ற பெண்களிடம் அவர்கள் மனத்தைப் பறிகொடுத்ததும் உண்டு. துருவாசர், விசுவாமித்திரர் போன்றோர் அடங்காச்சினம் கொண்டவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.
- அம்முனிவர்கள் நீங்காத சாபங்களை இடுவோராகவும் இருந்துள்ளனர். தமிழர் பண்பாடு கண்ட இல்லறம் துறவறம் இவற்றினின்றும் வேறானவை.

**இல்லறம் எதற்கு?**

- இல்லறம் எதற்கு என்ற வினாவிற்குச் சங்க இலக்கியமான குறிஞ்சிப் பாட்டு விளக்கம் கூறுவதைக் கேளுங்கள்!

**விருந்து உபசரித்தல்**

- பலரும் உண்ணும்படி அகலமாகக் கதவு திறந்து கிடக்கும் வாசலையுடைய பெரிய வீட்டில், சோற்றை வருகின்றவர்களுக்கெல்லாம் இல்லையென்னாமல் இட வேண்டும்.
- அதனால் வீடு பொலிவு பெற வேண்டும். விருந்தினர் உண்டது போக மிஞ்சியிருக்கும் உணவை மனைவியாகிய நீ இட நான் உண்ண வேண்டும். அவ்வுயர்ந்த இல்லறம் நம்மைக் கரையேற்றும் என்று தலைவன் தன் காதலியிடம் கூறுகின்றான். ஒருவன் திருமணம் செய்து கொள்வதே விருந்தோம்பல் என்னும் கடமையைச் செய்ய என்று கூறும் பண்பாடு தமிழருடையதாக இருந்திருக்கின்றது.
- வேளாண் சமூகத்தின் அடிப்படைப் பண்பாடு இதுதான்.
- வீடு முழுவதும் நிறைந்திருக்கும் தானியத்தை அடுத்த விளைச்சல் வந்து சேருமுன் செலவழிக்க வேண்டும்.
- விருந்து செய்யவும் விழாக் கொண்டாடவும் வேண்டும். பொருளாதார உலகில் பணம் வந்துவிட்ட பிறகே, விளைச்சல் பொருள் பணமாக மாற்றப்பட்ட பிறகே இந்த விருந்திடும் உள்ளம் சுருங்கியிருக்கிறது.

> **“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
> **நல்விருந்து வானத் தவர்க்கு”**

- என்று விருந்து செய்தலை இடைவிடாத கடமையாகத் திருவள்ளுவர் கூறுகின்றார். எனவே இல்லறத்தின் தலையாய கடன் விருந்தோம்பலாகும்.

**எது துறவறம்?**

- மனைவி, மக்கள், சுற்றத்தார் என நெருங்கிய உறவு வட்டத்தில் அன்பு காட்டி வாழ்ந்த ஒருவன் இல்லறத்தின் தேவைகளை நிறைவு செய்த நிலையில், தன்னை அடுத்த அயலார்க்கும், ஊரார்க்கும், பிறர்க்கும், பிற பிற உயிர்களுக்கும் நல்லன ஆற்றும் வகையில் அருள் உணர்ச்சி பெற வேண்டும்.
- இதுவே துறவு. துறவு என்பது பற்று நீக்கி வாழ்வதன்று; பற்றின் விரிவு. துறவு நிலை அடையும் ஒருவன் தன் வீட்டிலுள்ளவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருந்த நிலை மாறி எல்லா உயிர்க்கும் அன்பு செய்வோராக மாறுகிறான்.
- இதுவே துறவறம் எனப்பட்டது. அருள் என்பது அன்பின் குழந்தை என்கிறார் திருவள்ளுவர். எனவே திருவள்ளுவர் கூறும் துறவறம் நாட்டில் ஒவ்வொருவர்க்கும் உரியது என அறியலாம்.

**சில நம்பிக்கைகள்**

- தமிழர் பண்பாட்டில், நல்வினை, தீவினை, ஊழ், மறுபிறப்பு ஆகியவற்றுக்குப் பேரிடமுண்டு. வினைகளின் பயன் தொடர்ந்து அடுத்தடுத்த பிறப்புகளைத் தரும் எனத் தமிழர் நம்பினர். திருவள்ளுவரும் இக்கருத்துக்களைக் கொண்டிருந்தார்.

> **“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
> **சூழினும் தான்முந் துறும்”**

- என்று ஊழின் வலிமையைத் திருவள்ளுவர் கூறுகின்றார். எனினும் ஊழையும் விலக்க முடியும் என்பதே வள்ளுவரின் புரட்சி நோக்கமாகும்.

> **“ஊழையும் உப்பக்கம் காண்பர்”**

- ஆள்வினையோடு தொடர்ந்து முயல்பவர் ஊழின் தாக்குதலை வென்றுவிட முடியும் என்கிறார் வள்ளுவர்.
- விதி வலியது மாற்ற முடியாதது என்று கூறி அழியும் குருட்டு நம்பிக்கை கொண்ட சமூகங்களைப் போல அல்லாமல் முயற்சியின் வலிமையை வற்புறுத்திய சமூகமாகத் தமிழ்ச் சமூகம் காட்சி தருகின்றது.

**வாழ்க்கைக் கடமைகள்**

- பொருள் ஈட்டுதல், குடும்பத்தைப் பாதுகாத்தல், பிள்ளைகளை வளர்த்தல், சமூகத் தொண்டு செய்தல் போன்ற பல கடமைகள் மனிதர்களுக்கு உள்ளன.
- தனி மனிதனாயினும் அவனும் சமூகத்தில் ஓர் உறுப்பினன். அவ்வகையில் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஆற்றவேண்டிய கடமைகளைத் தமிழ் அறநூல்கள் எடுத்துரைக்கின்றன.

**பொருள் ஈட்டுதல்**

- வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது என்பதைத் தமிழினம் உணர்ந்திருந்தது.
- பொருள் உடையவரே அறத்தைச் செய்யும் இன்பத்தைத் துய்க்கவும் முடியும் என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.
- இரண்டு யானைகள் போரிடும் போது அக்காட்சியை மலை மேலிருந்து பார்ப்பதைப் போலப் பாதுகாப்புடையது பொருள் உடையவன் நிலை என்கிறார்.

- அன்பு பெற்றெடுத்த குழந்தை அருள். அது பொருள் என்னும் செவிலித் தாயால் வளர்க்கப்படும் என்று கூறுகின்றார்.

> **"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு"**

- என்பது உலக நடைமுறையை உணர்ந்து கூறும் குறளாகும். பொருளை முயற்சியால் அறவழிகளில் தேடி நற்செயல்களுக்காக அதனைச் செலவிட வேண்டுமென்பது தமிழர் வாழ்க்கை நோக்கமாகும்.
- பழியஞ்சிப் பிறரோடு பகுத்துண்டு, ஒப்புரவும் ஈகையும் கொண்டு பண்போடு வாழ்வோர் சான்றாண்மை உடையவர் ஆவர்.
- இத்தகையோர் வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர்கள் ஆவர். இவர்கள் மறைந்த பின்னும் தெய்வமென்று போற்றப்படுவர் என வள்ளுவர் கூறுகின்றார்.

**பலர்க்கும் உரிய கடமைகள்**

- வாழ்க்கையில் ஒவ்வொருவர்க்கும் கடமை இருக்கிறது. தந்தை, தன் மகனைக் கற்றவனாகவும் அவையில் முன்நிற்பவனாகவும் ஆக்க வேண்டும். மகன், "இவனுடைய தந்தை நோன்பு நோற்று இவனைப் பெற்றிருக்கின்றான்" என்று கூறுமாறு சிறந்து விளங்க வேண்டும்.
- மனைவி, தற்காத்துத் தற்கொண்டானைப் பேணி, புகழை நீங்காமல் காத்து நற்பண்புகளில் சோர்வற்றவள் ஆதல் வேண்டும்.
- அரசர், தன்கீழ் வாழும் குடிமக்களை உயிரெனக் கருதிக் காத்துக் காட்சிக்கு எளியனாகவும் கடுஞ்சொல்லன் அல்லனாகவும் விளங்க வேண்டும்.
- அமைச்சர், வேந்தனுக்கு உறுதுணையாய்ச் சொல்வன்மை, வினைத்தூய்மை உடையவராதல் வேண்டும்.
- உழவர், விளைநிலத்தை நாள்தோறும் சென்று கண்டு, அதனைக் காவல் செய்து பயிர்களுக்குச் செய்யத்தகுவன செய்தல் வேண்டும்.
- ஆசிரியன், மெய்ப்பொருளை எல்லாரும் அறிந்து கொள்ள உரைப்பவனாக ஆதல் வேண்டும்.
- மாணவன், செல்வர் முன் வறியவர் போல ஆசிரியர் முன் தாழ்ந்து நின்று கற்றல் வேண்டும்.
- கணவன், தென் புலத்தார் தெய்வம் விருந்து சுற்றத்தார் தான் எனப்படும் ஐவர்க்கும் உரியன செய்ய வேண்டும்.
- வணிகர், வாணிகத்தை நடுவுநிலைமை தவறாமல் செய்ய வேண்டும்.
- சான்றோர், அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை ஆகிய ஐந்து பண்புகளைக் கொள்ளவேண்டும்.
- இவ்வாறு வாழ்க்கையில் ஒவ்வொருவர்க்கும் உரிய கடமையை வற்புறுத்தும் தமிழரின் அறநூல் சாதி, மதம் ஆகியவற்றைப் போற்றவில்லை.

**முடிவுரை**

- தமிழ் அறநூல்கள் புறத்தூய்மையைவிட அகத்தூய்மையையே வற்புறுத்துகின்றன.
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறி மனத்தில் மாசு இன்மையையே அறம் என்று கூறுகின்றது, தமிழ் அறம். சடங்குகள், ஆசாரங்கள், கழுவாய்கள் ஆகியவற்றுக்குத் தமிழர் வாழ்வில் பேரிடமில்லை.
- துறவி என்பவன் மொட்டையடித்துக் கொள்வதா, சடைமுடி கொள்வதா என்பன போன்ற வினாக்களுக்கு இங்கு இடமில்லை.
- புறப் புனைவுகள், வேடங்கள் ஆகியவற்றைத் தமிழர் போற்றவில்லை. மனத்தின்கண் தூய்மை, எவ்வாறு செயல்படுகின்றார் என்பவற்றைப் பொறுத்தே ஒருவர் சமுதாயத்தில் எத்தகையவர் என்பதை முடிவு செய்தனர்.
- உருவு கண்டு போற்றுதலும் தூற்றுதலும் தமிழர்க்குப் பொருந்தாச் செயல்களாகும்.

**8. பொருளுறையில், பொதிந்துள்ள வாழ்வியல் விழுமியங்களை விளக்குக.**

**முன்னுரை**

- உலகில் வாழும் பெரும்பாலான மக்கள் உயர்ந்த கனவுகளுடன், சிறந்த சிந்தனைகளுடன் தனது வாழ்க்கை திறம்பட வாழ்வர்.
- அக்கனவுகள் கூடிய எதிர்கால சிந்தனைகளின் வெற்றி, தனது வாழ்வின் வெற்றியாக கருதுவர். அவ்வாறு தனது வாழ்க்கையில் வெற்றி பெற சிறந்த திட்டமிடதல், காலமறிதல், இடனறிதல், வலியறிதல், தகுந்த இலக்கை தேர்ந்தெடுத்தல், செயலின் செயல்பாடு முதலியவை வாழ்வின் வெற்றிக்கு இன்றியமையாதது. வாழ்வின் வெற்றிக்கு வழிகாட்டும், வள்ளுவத்தின் குறட்பாக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாழ்வின் வெற்றி**

- தன்னம்பிக்கை, முறையான பயிற்சி, விடாமுயற்சி, பணியில் ஒழுக்கம் ஆகியவை ஒரு செயலின் வெற்றிக்கு வழிவகுக்கும். ஆனால் நம் வாழ்வில் வெற்றி பெற சுற்றியுள்ள சமுதாயத்தின் நல்ல மதிப்பை பெறுவது, சான்றோரால் பாராட்டப்படுவது, முறைசார்ந்த அறம் வழியில் செயல்படுவது, பிறர் துன்பம் தன் துன்பம் போல் எண்ணி உதவும் பண்புடையது, பிறர் புகழுமாறு அறியப்படுவது வாழ்வின் வெற்றிக்காக கருதப்படும் என வள்ளுவர் கூறுகிறார்.

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்:**

- வாழ்கையில் வெற்றி பெற மானுடன் முதலில் உயர்ந்த கனவுகள், உயர்ந்த எண்ணங்கள் உடையவனாக இருத்தல் வேண்டும்.
- நீர்நிலைகளில் நீரின் அளவுக்கேற்ப மலரின் அளவு உயரும், அதுபோல் நாம் காணும் கனவின் அளவுக்கேற்ப வாழ்வில் வெற்றி உயரும். இதனை வள்ளுவர்,

**'வெள்ளத்து அனைய நீர்மட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு'**
**'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'**

- மேற்கண்ட குறட்பாவில் ஒருவன் காணும் கனவின் லட்சியம் அடைய, உயர்ந்த எண்ணங்கள் உடையவனாக இருத்தல் அவசியம்.
- அவ்வாறு நம்முடைய விடாமுயற்சிகள் பயன் அளிக்கும் என்பதால் நான் எண்ணியதே உயர்வாக எண்ணுதல் அவசியம்.
- மேலும் அச்செயல் நடக்காவிட்டாலும், நம் மேற்கொண்ட முயற்சி வெற்றியின் நடந்ததைப் போல் மன அமைதியைத் தரும் என கூறுகிறார் வள்ளுவர்.
- எனவே இலட்சியத்தை உயர்வாக, இடைவிடாமல் எண்ணிப் பார்ப்பது வாழ்வின் வெற்ஷிக்கு முதல் படி.

**குறிக்கோள் உடைய இலக்கு தேர்ந்தெடுத்தல்**

- ஒரு இலட்சியத்தின் இலக்கு, யாது என்பது என நன்கு ஆராய்ந்து, முறைப்படி அடைய வழிவகை செய்தல் அவசியம்.
- அதுபோல் ஒரு செயலைத் தொடங்கும் முன் நன்கு ஆராய்ந்து எண்ணுதல் வேண்டும், செயல் தொடங்கியபின் ஆராய்வது துன்பத்தைத் தரும் என்கிறார் வள்ளுவர். இதனை,

**'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'**

- மேலும், லட்சியத்தை அடைய முயற்சி செய்ய வேண்டிய இலக்கை முயலாததாலும், முறையற்ற இலக்கை முயல்வதாகவும் துன்பம் நிலவும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை

**'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'**
**'தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்'**

- எனவே வாழ்வின் லட்சியத்தின் இலக்கை அடைய, இலக்கை அடைந்து வெற்றி பெற்ற நபர்கள் உடன் கூடி கலந்தாலோசித்து செயல்படுவது அறிவுடையவரின் செயல் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**வெற்றிக்கான திட்டமிடுதல்**

- லட்சியத்தை மேற்கொள்ள வேண்டிய பொருட்கள், தகுந்த காலம், முறையான கருவி, சரியான செயல் வகைமை, உரிய இடம் ஆகிய ஐந்தும் நன்கு ஆராய்ந்து திட்டமிட்ட பின் ஒருவன் செயலைத் தொடங்குவது, வெற்றியைத் தரும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை,

**'பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்'**

- என குறட்பா மூலம் வெற்றியின் ஐந்து கூறுகளை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**1. பொருளும் கருவியும்:**

- திட்டமிடுதலின் முதல் படி பொருளையும் கருவியும் திரட்டுவதே.

**'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு...'** என்றும்,

செய்கை பொருளை.. என்னும் குறட்பா மூலம் பொருளின் இன்றியமையாமையை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**2. திறனறிதல்:**

- ஒரு செயலை மேற்கொள்ளும் போது, நமது திறனை வலிமையை நன்கு ஆராய்ந்து செயல்படுதல் வேண்டும்.
- எனவே அனைத்தையும் ஆராய்ந்து பின்னர் ஒரு செயலை செயல்படத் தொடங்குதல் வேண்டும். இதனை வள்ளுவர்,

**'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்'** என குறட்பா மூலம் குறிப்பிடுகிறார்.

**3. காலமறிதல்:**

**'பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது'**
**'காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்'**

- எனும் குறட்பா மூலம் கால மனிதனின் அவசியத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**4. இடம் அறிதல்:**

**'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்'**

- என்னும் குறட்பா மூலம் உலகத்தை வெல்ல கருதுபவர், அதற்கான இடத்தை நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்த பின் செயல்படுவர் எனக் குறிப்பிடுகிறார்.

**இலட்சியத்தின் செயல்முறை:**

**'தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை'**

- என்னும் குறட்பாவில் தகுந்த நேரத்தில் செய்ய வேண்டியது செயலை காலத்தாமதத்தோடு செய்தால், காலத்தாமதத்தோடு செய்யக்கூடிய செயலை விரைவாக செய்தல் கூடாது என எச்சரிக்கிறார் வள்ளுவர்.
- இவ்வாறு செய்வதால் முயலாமை என்னும் முறைசாரா எண்ணம் உருவாகும் என கூறுகிறார்.
- மேலும்,'முயற்சி திருவினையாக்கும்...'

**'அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'**

- மேற்கண்ட குறட்பா மூலம் நாம் கண்ட கனவை நினைவாக்கும் அதற்கு திட்டமிடுதல் கூடிய விடாமுயற்சியுடன் செயல் திட்டம் அவசியம்.

- எனவே செயலை மேற்கொள்ளும் போது எண்ணித் துணிந்த பின் திட்டமிட்டு செயல்படுவது கடுமையான இலக்கையும் எளிமையாக்கும் என்கிறார் வள்ளுவர்.

**வெற்றியின் முழுமை:**

- உயர்ந்த சிந்தனை கொண்ட கனவுகளும், பொருள் கருவி இடம் காலம் திறன் முதலிய திட்டங்களும், முறையான செயல்வகைகளும் வாழ்வின் லட்சியத்தை அடைய வழிவகுக்கும்.
- அவ்வாறு வெற்றி பெற்ற லட்சியத்தை தமக்கு உரிய காலத்தில் உதவிய தனி மனிதனுக்கும், சமூகத்திற்கும் பகிர்ந்தளிக்கும் போது அவ்வெற்றி முழுமைபெறும் என்கிறார் வள்ளுவர்.
- அவ்வாழ்வின் வெற்றியே, சமுதாயத்தில் தம்மை மதிப்பு உடையதாகும், பாராட்டு உடையதாகும் போற்றப்படும்.

> **'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
> **செத்தாருள் வைக்கப் படும்'**

- மேலும், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் குணம் உடையவர்கள், வாழ்வில் புகழுடன் வாழ்வர்.

**முடிவுரை:**

- வாழ்வில் வெற்றி அடைய விரும்புபவர் உயர்வாக எண்ணுதல், குறிக்கோள் உடைய இலக்கை தேர்ந்தெடுத்தல், அதற்கான செயலை மேற்கொள்ளுதல், பெரியோரின் துணைக்கோடல், திட்டமிடுதல் கூடிய விடா முயற்சிகள், இடையூறுகளுக்கு மனம் தளராமல் உழைத்தல் முதலியவை வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும் என செந்நாப் போதார், உத்தரவேதத்தின் வழி வழிகாட்டுகிறார்.

> **"குறளே! குறளே!! குறளே!!!**
> **குறளை கல்லாதவர் வாழ்வு**
> **இருளே! இருளே!! இருளே!!!"**

**௭. வாயுறை வாழ்த்து வகுத்துள்ள சமூக வரையறைகளை விரிவாக விளக்குக.**

- திருக்குறள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாய் நின்று நன்னெறி புகட்டும் அருமறையாகும். வள்ளுவர் கூறும் நெறிகள் வேற்றுச் சமயத்தவரும் ஏற்றுப் போற்றி வருகின்ற காரணத்தால் அந்தந்தச் சமயத்தவரும் திருக்குறளைத் தத்தம், சமயம், இனம் சார்ந்த நூலெனக் கூறிக்கொள்கின்றனர்.
- இத்தகைய மக்கள் இலக்கியமாம் திருக்குறளைப் பிற்காலத்து உரையாசிரியர் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப இடைச் சேர்க்கைக்கு உட்படுத்தியும், பிழையான கருத்துகளை உரையில் புகுத்தியும் அதன் உண்மைத் தன்மையை உணர முடியாமல் தடுத்து விட்டனர்.
- திருக்குறள் பாயிரத்தில் முதல் மூன்று அதிகாரங்களில் காணப்படும் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை என்பவை வள்ளுவரால் இயற்றப்பட்டவை இல்லையென்றும், பிற்பாலத்தில் சேர்க்கப்பட்டவை யென்றும் அதன் சொல், பொருள், செறிவு மற்றும் முரண் முதலியவற்றின் மூலம் இதை மெய்ப்பிக்க முடியுமென்று வ.உ.சிதம்பரம் அவர்கள் கூறுவதன் மூலம் உணரலாம்.

**புத்துரையின் எழுச்சி**

- உலகத்தின் மூலம் எது என்பதைப் பற்றிய வள்ளுவரின் சிந்தனை மிகவும் போற்றற்குரியது. ஆனால் குறளுக்கு உரை எழுதியவர்கள் தாங்கள் வாழ்ந்த சமுதாயம் சாதி, மதம் என்ற தற்சார்பு எண்ணங்களுடன் எழுதியதால் அதன் உண்மை நுணுக்கம் மறைக்கப்பட்டாலும் வள்ளுவரின் வாய்மொழித் தன்மை எப்படிப்பட்டது என்பதை நம்மால் உணர முடிகிறது.

> **"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
> **பகவன் முதற்றே உலகு"**

- தமிழ் நெடுங்கணத்தின் அனைத்து எழுத்துகளும் அகரத்தை முதலாக உடையன.
- அதுபோல இந்த உலகத்திற்குப் பகலவன் முதலாக உள்ளான் என்பதை இதன் கருத்து.
- எனவே மூட கருத்துகளுக்குக் கடுகளவும் இடம் கொடாதவாறு பயன் மிக்க கொள்கைகள் நமது பண்பாட்டுக் கூறுகளோடு எடுத்தோதிப் பகுத்தறிவுக் கருத்துகளை நம்மோடு பகரிந்து கொள்வதில் இந்திய இலக்கியங்களில் குறளுக்கு இணையாக வேறு நூல் இல்லையென்றே கூறலாம்.
- ஒருவன் பெருஞ் செல்வம் உடையானாயினும் கல்வி கற்காத களர் நிலமாக இருப்பின் இந்தச் சமுதாயத்தில் பெருமைக் குரியவனாகக் கருதப்படமாட்டான். இழி குலத்தில் பிறந்த ஒருவன் நன்கு கற்றவனாக யிருப்பானாயின் கல்லாதவன் இவனுக்க ஈடாக மாட்டார் என்பது இதன் கருத்து.

> **"மேற்பிறந்ததார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
> **கற்றார் அனைத்துஅலர் பாடு"**

- ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே மதவாதிகளால் நால் வருண பாகுபாடானது உருவாக்கப்பட்டு இலக்கிய, இலக்கண, வரலாறுகளில் புகுத்தப்பட்டு இன்று உலக பெருவழக்காகி விட்டது.
- மேலும் பிறப்பால் உயர்வு தாழ்வு என்பது ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக நமது திருக்குறள் விளங்குதை நினைத்து நமக்குப் பெருமையா யிருக்கிறது.
- தமிழரின் இத்தகைய உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளை எண்ணும் போது உலகப் பொதுமையை எடுத்தோதுவதில் நமது இலக்கியங்களைப் போல வேற்றுமொழி இலக்கியங்கள் இல்லையென்றும் நாம் துணிந்து கூறலாம்.

- சாதி, செல்வம், தகுதி முதலியவற்றால் மேலான பிறப்புடையவர்களும் கல்வி அறிவில்லாத வறான இருந்தாலும் சாதி, செல்வம் முதலியவற்றால் கீழான பிறப்புடையவரோடு ஒன்றாக வைத்து எண்ணக் கூடியவர்களல்லர்.
- காரணம் அழியும் செல்வங்களைக் காட்டிலும் அழியாத் தன்மையுடைய கல்விச் செல்வம் சிறப்புடையது.

**அறிவுக் இறைக் கோட்பாடுகளும்**

- இந்தச் சமுதாயமானது பன்மலர்கள் பூத்துச் சிதறிக் கிடக்கும் மலர் வனம் போன்றது.
- இதில் நல்லோரும் உண்டு, தீயோரும் உண்டு. நன்மை பயக்கும் உள்ளங்களும், நன்றி மறவாத நல்ல நெஞ்சங்களும் உண்டு.
- எனவே கற்றவர்களும், ஒழுக்கமுடையவர்களும் தான் கற்ற நூலின் பொருளை அறிந்து அவற்றில் குவிந்துள்ள அறிவு தொடர்பு பற்றி விவரித்துக் கூறுவதை ஒருவன் தனது செவியால் கேட்டு மனதால் நன்கு உணாந்து நடப்பதைக் கேள்வி அறிவு என்கிறோம்.
- அத்தகைய கேள்வி அறிவானது மேன்மேலும் பெருகி வளரக் கூடிய அறிவு வளாச்சிக்கு அடிப்படையாகும்.
- எனவே யார் கூறுவதாகக் கேட்டாலும் அதன் உட்பொருளின் மென்மை, வன்மை மற்றும் உண்மை, பொய்மை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து உண்மையை உணர வேண்டும்.

> **"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

- எந்தப் பொருளைப் பற்றியும் யார்? யார்? எப்படியெல்லாம் கூறினாலும் அனைத்தையும் அறிந்து அதில் எது மெய்ம்மை என்று நமது பகுத்தறிவால் உணாந்து கொள்ள வேண்டும்.
- தொழுதல் என்பது கடவுளை வணங்குவது என்ற குறுகிய பொருளைக் கொண்டதன்று. தான் உயர்வாக எண்ணுபவரை வணங்கவது, ஒருவர் மற்றொருசரின் செயல்தறினைக் கண்டு போற்றும் பொழுது தொழுவது என்பனவற்றைக் குறிக்கும்.

> **"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்**
> **நற்றார் தொழாஅர் எனின்"**

- குற்றமற்ற அறிவுடையவனது நல்ல முயற்சியைத் தொழுவது போற்றாதவர் நல்ல நூல்களை நிறையக் கற்றும் அதனால் பயன் ஏதும் இல்லாதவரேயாவர்.
- இறைவன் என்ற பிரச்சனைக்குரிய சொல்லானது முதல் அதிகாரத்தில் இரண்டு குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சொல் சங்க இலக்கியங்களில் தலைவன், அரசு, அரசன் வரி, போன்றப் பொருள்களில் தான் வழங்கப்பட்டுள்ளதே தவிர கடவுள் என்ற பொருளில் அல்ல.

> **"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
> **பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"**

- மற்றவர்கள் புகழும்படி வாழ்ந்த தலைவனின் பொருளைப் போன்ற பொருந்தியப் பெருமையைப் பெற்றவர்களிடம் அறியாமையால் பெறுகின்ற பெரிய செயல்கள் வந்தடையும் மேலும் அவர்களைத் துன்புறுத்தாதென்று தெளிவா விளக்கும் வள்ளுவர் தமது நூலில் இறை, இறைவன் என்ற சொற்களை தலைமை, அரசன், தலைவன் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார்.
- எனவே இறைவன் என்ற சொல்லைக் கடவுளாக்கி மகிழ்வதை விடுத்து உண்மைப் பொருள் கொண்டு ஆராய்ந்தால் உரியப் பொருளை உய்த்துணரலாம்.
- மொழியிலுள்ள உயர்ந்த சொற்களையெல்லாம் பயன்படுத்திய வள்ளுவர் கடவுள் என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தவில்லை அப்படியே இறைவன் தெய்வதம் என்ற சொற்களுக்குக் கடவுள் என்று பொருள் கொண்டாலும் அதற்கும் வள்ளுவத்தில் எதிர் கருத்து இருக்கத்தான் செய்கிறது.

> **"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டி பரந்து**
> **கெடுக உலகஇயற்றி யான்"**

- ஒருவன் மற்றவனை இரந்து பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலை வருமாயின் இந்த உலகம் மட்டுமல்ல அதற்கெல்லாம் அடிப்படையாகக் கருதப்படும் கடவுள்தான் முதலில் அழிக்கப்பட வேண்டியவனாவான் என்ற வள்ளுவரின் கூற்று சிந்திக்கத் தக்கது.

**அறிவும் ஒருமைப்பாடும்**

- திருவள்ளுவரும், புத்தரும் அறிவு முதல்வாதிகள் என்பர். திருக்குறள் ஓர் அறிவு நூல் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

> **"அறிவுடையார் எல்லாம் முடையார்**
> **அறிவுடையார் ஆவது அறிவார்"**

- போன்ற தொடர்கள் அறிவு ஆராய்ச்சியின் சிறப்பை இயம்புகின்றன. அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு அறிவியலுக்கு ஒப்பு இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்தாக்கங்களைக் கொண்டு இயங்குவது வள்ளுவரின் வாய்மொழியாகும்.
- தமிழருக்கு மதம் என்பது இருந்ததாக ஆதாரம் கிடையாது. இன்றை வழக்கில் மதம் என்பது பெருவழக்காய் ஒரே ஒரு கருத்தில் தான் குறிபாக கடவுளை அடையும் வழி என்ற பொருளில் தான் பயன்படுகிறது.
- மதம் என்ற சொல்லுக்கும் தமிழர், தமிழுக்கும் சிறிதும் தொடர்பு கிடையாது. சாதி, மதம், இனம் இவைகளுக்கு அப்பாற்பட்டு பொது இலக்கியமாக திருக்குறளைப் படைத்தவர் வள்ளுவர்.

"குடி செய்வார்க்கில்லை பருவம் மடி செய்து
மானங் கருதப் படும்"

- ஒருவன் மக்களுக்கு நன்மைகள் பலவற்றை செய்ய வேண்டும் நினைத்தால் அதற்கு காலம், சகுனம், பார்ப்பது தவறு.
- மானம், மரியாதை. கற்பனை மூட்டத்தில் முழுமையாகத் தனதுச் சிந்தனைகளை மழுங்கடிக்காமல் சமுதாய விழிப்புணர்வு கருத்துகளை வழங்கிய சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்கவர் வள்ளுவர்.
- இவரது பார்வை முழுமையான மானுட வாழ்வியல் பார்வையாக பதிந்துள்ளது.
- இவ்வாறு கற்பனை மூட்டங்களில் முழுமையான சிந்தனைகளை மழுங்கடிக்காமல் சமுதாயம் விழிப்புப் பெறவும், மக்களிடையே மறுமலர்ச்சிக்கான விழிப்புணர்வு கருத்தக்களை வழங்கிய சிந்தனைகளில் வள்ளுவரும் குறிப்பிடத்தக்கது. வள்ளுவரின் பார்வை முழுமையான மானுட வாழ்வியல் பார்வையாகவே தடம் பதிந்துள்ளது.
- உலக இலக்கியங்களில் நீதி வழங்கியதில் சிறந்த நூல் திருக்குறள் ஒன்றுதான் என்று பெரியார் தமது கருத்தாக வெளிப்படுத்தி இருக்கிறார்.
- பகுத்தறிவு இயக்கவாதியான பெரியாருக்கு திருக்குறளிடத்து ஈடுபாடு உண்டானமைக்குரிய பல்வேறு காரணங்களுள் முக்கியமானது 'நான் திருக்குறளைப் படித்து ஏதோ சிறிது ஆராய்ச்சி செய்து எடுத்துச் சொல்லி வருவதன் உண்மையான கருத்து அவற்றில் பல எனது தொண்டுக்கு அரண் செய்வது போலவும் எனது கருத்துக்கு ஆதரவு அளிப்பதாகவும் இருக்கிறது என்பதுதான்'என்று அவரே தெரிவித்துள்ளார்.
- நம் மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான உயாந்த நெறிகளையும் மனிதனிடம் மனிதன் நடந்து கொள்ளும் முறையையும் வழி வகுக்கக் குறளுக்கு மேலான ஒரு நீதி நூல் வேறு கிடையாது என்பது பெரியாரின் கருத்து.
- திருவள்ளுவரின் கருத்துகளில் பெரியார் அவர்கட்கு மிகுதியும் உடன்பாடு இல்லையாயினும் திருக்குறளை அவர் எதிர்க்க வில்லை காரணம் திருக்குறள் ஓர் அறிவு நூல் என்பதே யாகுமென்று குன்றக்குடி அடிகளார் கூறியதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.
- அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு அறிவியலுக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் மான கருத்துகளைக் கொண்டு திருக்குறள் இயங்குகிறது.
- திருக்குறள் ஒன்றே போதும் தமிழ் மக்களுக்கு அறிவைப்புகட்ட. திருக்குறளை மட்டுமே எடுத்துக் கொண்டு அதிலுள்ள அனைத்து தலைப்புகளின் கீழ் வருவனவற்றை இரண்டு மூன்று பிரிவுகளாகப் பிரித்து எளிதில் பொருள் விளங்குவனவற்றைக் கீழ் வகுப்புகளுக்கும், சற்றுக் கடினமான குறள்களை நடுத்தர வகுப்புகளுக்கும், மிகுந்த புதை பொருள் கொண்டு விளங்கும் பகுதிகளை மேல் வகுப்பிற்கும் பாடமாக வைத்தால் மற்ற மதப்படிப்போ. ஒழுக்கப் பாடமோ தனியாக வைக்க வேண்டிய அவசியம் இருக்காது என்ற பெரியாரின் கருத்து இங்குச் சிந்திக்கக் கூடியதாக அமைந்துள்ளது.
- நம் மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான உயர்ந்த நெறிகளையும், மனிதனிடம் மனிதன் நடந்து கொள்ளும் முறையையும் எடுத்துக் கூறும் அருமையான நூல் திருக்குறளைத் தவிர வேறு நீதி நூல் இல்லையென்று பெரியார் கருதுகிறார்.
- பெரியார் ஒரு சமுதாயச் சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தவர் அவர் எத்தகைய கருத்துகள் இன்றைய மனித சமுதாயத்திற்குத் தேவையென்று நினைத்தாரோ அந்தக் கருத்துகள் பல திருக்குறளில் உள்ளதைப் பெருமையாக எடுத்துக் கூறி வந்தார்.
- திருக்குறள் குறித்து பெரியார் கூறும் கருத்துகள் அவரது ஆய்வு மனப்பான்மையை நமக்கு நன்குப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.
- சங்க காலந் தொட்டு புலவர்களின் தனிச்சொத்தாக விளங்கிய திருக்குறளை பாமர மக்களின் பார்வையில் கொணர்ந்து திருக்குறளின் பெருமையை உணரும் படிச் செய்தவர் பெரியார் ஆவார்.
- திருக்குறளை மக்களின் முன்வைத்த பெரியார் 1948 ஆம் ஆண்டில் திருக்குறளுக்கு மாநாடு கூட்டினார். மேலும் திருக்குறள் நாள் கொண்டாடச் செய்தார்.
- இதன் விளைவாகத் தமிழகப் பள்ளிகளிலும், மேடைகளிலும், இதழ்களிலும், நூல்களிலும் திருக்குறள் தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்றது.
- கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் கடவுள் என்ற வார்த்தையைக் கையாளவில்லை என்பது மட்டுமல்ல நூல் முழுவதிலுமாக 1330 பாடல்களில் ஒரு இடத்திலும் வள்ளுவர் கடவுள் என்ற ஒரு சொல்லைக் குறிப்பிடவில்லை.
- தமிழ் மொழியில் உள்ள நல்ல, உயர்ந்த சொற்களையெல்லாம் தமது நூலில் பயன்படுத்தியுள்ள வள்ளுவர் கடவுள் என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தவில்லை.
- சாதி, இனம், மதம் இவைகளுக்கு அப்பாற்பட்டு பொது இலக்கியம் படைத்தவர் வள்ளுவர்.
- உலக நடப்புக்கும், வாழ்வுக்கும் கடவுள் காரணமல்ல, இயற்கை நடப்புதான் காரணம் என்பதைக் காட்ட திருக்குறளில் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன.

"வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்று உணரற்பாற்று"

- மழையால்தான் உலகம் வாழ்கிறது அதனால் மற்ற உயிர்களும் காப்பாற்றப்படுகிறது என்று உலக நடப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறார் வள்ளுவர்.
- தமிழ் சமுதாயத்தில் மண்டிக் கிடந்த மூட நம்பிக்கைகளை அகற்றி சாதி, மதம் போன்ற கூறுகள் இல்லாத சமத்தவ சமுதாயத்தை உருவாக்க நினைத்த பெரியாருக்கு அவருடைய கருத்துகளை அரண் செய்வது போலவும், அவரது கொள்கைகளுக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்துள்ள பல்வேறு கருத்துகளை தனக்கேவுரிய ஆய்வாகப் பெரியார் திருக்குறளை அணுகு இருக்கிறார் என்றே தெரிகிறது.

**10. நீதி இலக்கியத்தின் நந்தா விளக்கொளியில் மனித வாழ்வின் பயணத்தை விளக்குக.**

**முன்னுரை**

- சமுதாயமாகச் சேர்ந்து வாமும் மனிதர்கள் நல்வழியில் நடக்க நீதிகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் ஆன்றோர்கள் நல்கியுள்ளனர்.
- இலக்கிய வளம் நிறைந்த மொழிகளில் இலக்கியங்களும் எண்ணற்ற எண்ணிக்கையில் உள்ளன.
- அவ்விலக்கியங்கள் உள்ளத்தைத் திறப்பதற்கும், அதைத் திருத்திச் செம்மைப் படுத்துவதற்கும், தவறுகளைப் போக்கும் வன்மை உண்டாகுவதற்கும், நல்லனவற்றை மேற்கொள்வதற்கும், அவற்றைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதற்கும், பிறரை நல்வழியில் செலுத்துவதற்கும் பயன்பட வேண்டும் என்கிறார் வைகவுண்ட் மன்லே.
- அத்தகைய இலக்கியங்களை நல்கிய சான்றோர்களில் ஒருவர்தான் தெய்வப்புலவர் என்று மக்களால் கொண்டாடப்படும் திருவள்ளுவர். அன்னாரின் திருக்குறளில் சொல்லப்படாத செய்திகளே இல்லை எனலாம்.

**நோக்கம்**

- இந்தக் கட்டுரையின் நோக்கம் வள்ளுவர் நல்கிய வாழ்வியல் நீதிகளை ஆராய்ந்து பகுத்துக் கூறுவதாகும்.
- இக் கட்டுரையில் வள்ளுவர் கூறிய வாழ்வியல் நீதிகளாக, கல்வியால் ஏற்படும் நன்மை, நீத்தார் பெருமை, இல்வாழ்க்கை நெறி, இல்வாழ்வான், இல்லாளுக்கு இருக்கவேண்டிய பண்புகள், விருந்தோம்பலின் சிறப்பு, பொதுவாக மனிதனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் எனப் பல நீதிகள் பகுத்துக் கூறப்பட்டிருக்கிறது. வள்ளுவர் கூறிய வாழ்வியல் நீதிகள் தமிழ்க் குடிமகன் ஒருவனுக்கு மட்டுமன்றி, உலகில் மனிதனாகத் தோன்றிய அனைவருக்கும் உரிய வாழ்வியல் நீதிகளாக அமைந்திருப்பதே திருக்குறளின் சிறப்பாகும்.

**கல்வியின் சிறப்பு**

- உலகில் பிறந்த அனைவருக்கும் பொதுவாக, ஆரியம் கூறும் சாதி, இன வேறுபாடு எதுவுமின்றி அனைவரும் சமமானவர்களே என்பதைப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொக்கும் செய்தொழில் வேற்றுமையான்' என்ற குறள் மூலம் வெளிப்படுத்துகின்றார்.
- விலங்குகளிடமிருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டும் உறுதிப் பொருளான கல்வியால் ஒருவன் அடையும் சிறப்புகளையும் அக்கல்வியைக் கல்லாதவன் மேல் குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் கீழ் குலத்தில் பிறந்தவனாகவே கருதப்படுவான் என்றும், கீழ் குலத்தில் பிறந்தவன் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக இருப்பின் கல்லாத மேல்குடிப் பிறப்பானைக் காட்டிலும் உயர்ந்தவனாகவே கருதப்படுவான் என்பதைக் கீழ்கண்ட குறளில் சொல்கிறார் திருவள்ளுவர்

> **"மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்பிறந்தும்**
> **கற்றார் அனைத்திலர் பாடு"**

- கல்வியின் பெருமையைக் கூறிய திருவள்ளுவர் வெறும் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்றுரைத்து சமூகத்தில் மேல் தளத்தில் இருப்பவனானாலும், கீழ்மட்ட நிலையில் இருப்பவனனாலும், தான் வாமும் உலகுடன் ஒத்துப் பொருந்தி வாழத் தெரியாதவன் எத்தனை உயர்ந்த கல்வியைக் கற்றவனாகவே இருந்தாலும் கல்லாதவனாக, அறிவற்றவனாகவே மதிக்கப்படுவான் என்பதை,

> **"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
> **கல்லார் அறிவிலா தார்"**

- என்ற குறள் மூலம் விளக்குகிறார்.
- அவ்வாறு கற்ற கல்வி பல்லோர் முன்னிலையில் மதிப்பையும், கௌரவத்தையும் உயர்த்துவதுடன், பெற்ற தாய் அத்தகு மகனைப் பெற்றதற்காகப் பெறும் மக்ழ்ச்சியைப் பின் வரும் குறள் மூலம் மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

> **"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோன் எனக் கேட்டதாய்"**

**நீத்தார் பெருமை**

- திருக்குறளின் அடிப்படைத் தத்துவமே அறம், பொருள், இன்பம் மூலமாக வீடு பேற்றினை அடைவதுதான்.
- அத்தகைய வீடு பேற்றை அடைய இரு வகை அறங்கள் இருப்பதாகக் கூறுகிறார் திருவள்ளுவர்.
- ஒன்று இல்லறம், இன்னொன்று துறவறம். இவ்விரண்டு அறங்களிலும் இல்லறமே மிகச் சிறந்தது என்றும், இல்வாழ்வை மேற்கொண்டு அறநூல் செப்பிய வழியில் வாழ்ந்து சிறந்த மனைவியுடன் நன்மக்களைப் பெற்று தருமவழியில் நடந்து, வீடுபேற்றினை அடைவதற்காக துறவறம் மேற்கொள்வதையே சிறந்த அறமாக வள்ளுவர் கருதுகிறார் என்பதைக் கீழ் கண்ட குறள் உணர்த்துகிறது.

> "இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற்று உலகு"

- மேலும் வயதால் ஒருவரைப் பெரியவர் என்று கருத முடியாது என்றும், அரிய செயல்களைச் செய்பவர் வயதில் சிறியவராக இருந்தாலும், பெரியவராக மதிக்கப் பெறுவர் என்றும் அவ்வாறு செயற்கரிய செயலை செய்ய இயலாதவர் வயதில் பெரியவராக இருந்தாலும் சிறியவராகவே கருதப்படுவர் என்றும் குறள் 26 மூலம் உணர்த்துகிறார் திருவள்ளுவர்.

> "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலாக தவர்"

**இல்வாழ்க்கை**

- வீடு பேற்றை அடைய துறவறத்தை விட மிகச் சிறந்தாகக் கருதப்படும் இல்வாழ்க்கை, தற்காத்துக் கொண்டு தற்கொண்டானையும் பேணிப் பாதுகாக்கும் இல்லாளையும், இவன் தந்தை என்னோற்றான் கொல் என்று சொல்லுமளவுக்கு கல்விக் கேள்விகளில் சிறந்த மகனையும் பெற்று பிறன் பழிப்பு இல்லாத வாழ்க்கையே பண்பும் பயனும் நிறைந்தகாக இருக்கும் என்கிறார் திருவள்ளுவர். இதையே,

> "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது"
> "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
> பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"

- என்ற குறள்கள் மூலம் விளக்குகிறார்.

**இல்வாழ்வான் இல்லாளிடம் இருக்க வேண்டிய பண்புகள்**

- இல்வாழ்வான் கடமையைக் கூறப்போந்த திருவள்ளுவர் அறநெறியில் அதாவது பழி பாவத்திற்கு அஞ்சி சம்பாரித்த செல்வத்தைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்துத் தானும் உண்டு வந்தால் அவன் சந்நிதி என்றும் நிலைத்து நிற்பது மட்டுமின்றி அழிந்து போகாமலும் இருக்கும் என்பதை,

> "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

- இல்வாழ்க்கையை மேற்கொண்ட ஆண்மகன் தான் நல்வழியில் ஈட்டிய பொருளை எவ்வாறு பயன்படுத்தினால் சந்ததி நிலைக்கும் என்று 44 வது குறளில் சொல்லிய வள்ளுவர் அத்தகைய ஆண்மகனின் ஒழுக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், அவனுக்கு அமையும் மனைவி எத்தகையவளாக இருந்தால் தன்னையொத்த மனிதர்களின் முன் தலைநிமிர்ந்து நடக்க முடியும் என்பதையும் கீழ்கண்ட குறளின் மூலம் விளக்குகிறார் திருவள்ளுவர்

> "அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
> பெண்மை நயவாமை நன்று"

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறள் மூலம் இன்ன அறவழியில் நடக்கவேண்டும், இன்னின்ன நற்காரியங்கள் செய்யவேண்டும், என்று வரையறுத்துக் கொள்ளாவிட்டாலும் மனைவியிருக்கப் பிறருக்குச் சொந்தமான பெண்ணை நினையாமலாவது இருக்கவேண்டும் என்றும் சொல்கிறார்.
- அவ்விதம் அறநெறியில் பிறன் மனை விழையாது இல்வாழ்வு மேற்கொண்ட ஆண் மகனுக்கு அவனைப் புரிந்து கொண்டு குடும்பம் நடத்தும் நற்பண்புகளுக்கு உறைவிடமான கற்பு எனச் சிறப்பித்துக் கூறப்படும் நிலைகுலையா மன உறுதி கொண்ட பெண் மனைவியாக வாய்க்கப் பெறாவிட்டால் ஏறுபோல் பீடு நடை போடமுடியாது என்பதைப்.

> "புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை"

**விருந்தோம்பல்**

- தமிழர்களின் இன்னும் சொல்லப் போனால் இந்திய மண்ணின் தலையாய மிகச் சிறந்த குணம் வீட்டிற்கு வந்த விருந்தினை மனம் கோணாமல் உபசரித்து வழியனுப்புவது.

> "செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு"

- வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பிவிட்டு வரும் விருந்தினரையும் எதிர்பார்த்திருந்து அழைத்துப் போற்றுவான். வானத்தவர்க்கு நல்ல விருந்தினராகச் சென்று சேருவான் வீட்டிற்கு வந்த விருந்தினரை நன்முறையில் உபசரிக்காவிட்டால் அந்த விருந்தினரின் நிலை குறித்து

> "மோப்பக் குழையும் அனிச்சம் முகத்திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து"

- எல்லா மலரினும் மென்மையானது அனிச்சம்பூ. அப்பூவை முகர்ந்து பார்த்தால் வாடி விடும்.
- ஆனால் வரும் விருந்தினர் அப்பூவினும் மென்மையானவர் என்றும், அவ்விருந்தினரை விருந்தோம்பல் செய்வான் முகம் மாறி நோக்கினாலும் அவ்விருந்தினர் வாடி விடுவார்கள் என்று விருந்தோம்பல் என்ற வாழ்வியல் கூற்றின் மென்மையை அனிச்ச மலருக்கு ஒப்பிடுகிறார் வள்ளுவர்.

- இவ்வாறாக இல்வாழ்க்கையில் வாழ்வியல் கோட்பாட்டைக் கூறும் வள்ளுவர் தனிமனிதனுக்கென்று சில வாழ்வியல் நெறிகளையும் கீழ்கண்ட விதமாகக் கூறுகிறார்.

**இன்னா செய்யாமை**

- ஒருவன் தான் செய்த பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்கவேண்டும் என்றும் ஒருவருக்குத் முற்பகலில் தீங்கு செய்தால் பிற்பகலிலேயே அத்தீங்கை அனுபவிக்க நேரும் என்ற நீதியையும் வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்

> **"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
> **பிற்பகல் தாமே வரும்"**

- ஒருவன் தனக்கு இன்னா செய்யும் போது திரும்பி 'did for tat' என்று பழிக்கு பழி வாங்காமல் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்ற பைபிளின் பண்பைப் போல தீமை செய்தவன் நாணும் விதமாக நன்மை செய்து விடவேண்டும் என்று

> **"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
> **நன்னயம் செய்து விடல்"**கூறுகிறார்.

**நன்றி மறவாமை**

- தனியான மனிதனிடம், இயல்பாக இருக்கவேண்டிய மனிதநேயமே இல்லாமல் போன பிறகு செய்நன்றி போன்றறவற்றைப் பற்றி யோசிக்க மனிதனுக்கு நேரம் எங்கே இருக்கிறது? ஆனாலும் உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி கடுகளவே யானாலும் மறந்து விடாமல் நன்றியுடன் இருக்கவேண்டும் என்ற வாழ்வியல் கோட்பாட்டைக் கீழ்கண்ட குறள் மூலம் விளக்குகிறார்

> **"தினைத்துணை நன்றிசெயினும் பனைத் துணையாகக்**
> **கொள்வர் பயன் தெரிவர்"**

**புறங்கூறாமை**

- மனிதனுக்கு மனிதன் தீங்கு செய்யாதது மட்டுமல்ல; செய்த தீமையை மன்னித்து விடவேண்டும் என்று கூறும் வள்ளுவர் ஒருவரைப் பற்றிஅவர் இல்லாத போது புறம் கூறக் கூடாது என்றும் கூறுகிறார்.
- அறம் என்ற சொல்லை வாயினால் கூட சொல்லாதவனாக இருந்தாலும் ஒருவரைப் பற்றி அவர் இல்லாத போது பேசாமல் இருந்தால் அதுவே சாலச் சிறந்தது என்பதை கீழ்கண்ட குறள் மூலம் விளக்குகிறார்.

> **"அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
> **புறங்கூறான் என்றல் இனிது"**

- புறங்கூறக்கூடாது என்று போதித்த வள்ளுவர் பேசும் மொழிகளும் பயனுடையதாக இருக்கவேண்டும் என்றும் பயனற்ற சொற்களைச் சொல்லக்கூடாது என்று.

> **"சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க**
> **சொல்லில் பயனிலாச் சொல்"**

- என்று அறிவுரை கூறுகிறார்.

**இனியவை கூறல்**

- மனிதனின் வாழ்நாள் சிறிது. அதில் சாதிக்க வேண்டியவை எண்ணற்றவை.
- கூடி வாழும் மனிதர்களுடன் நல்லுறவு இருந்தால் தான் வாழ்க்கையில் சில நல்ல காரியங்களைச் சாதிக்கமுடியும்.
- நல்லுறவு கொள்ள நன்மொழி பேசத் தெரிந்திருக்கவேண்டும் என்றும் புறங்கூறக் கூடாது
- பயனற்ற சொற்களைப் பேசக் கூடாது என்று திருவள்ளுவர் இனிய மொழிகளையே பேசவேண்டும் என்றும், நல்ல கனிந்த கனி கையிலிருக்கும்போது வெக்காய் போன்ற கொடூரமான வார்த்தைகளை ஏன் பேசவேண்டும் என்று கேட்கிறார்,

> **"இனிய உளவாக இன்னாத கூறல்**
> **கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"** என்கிறார்.

**மனத்தூய்மை**

- பிறருக்குத் தீங்கு செய்யாமை மட்டுமல்ல; இன்சொல்லையே பேச வேண்டும் என்று கூறும் வள்ளுவர் மனமும் எவ்வித களங்கமும் இல்லாமல் தெளிந்த நீரோடை போல இருக்க வேண்டும்.
- அவ்விதம் இருந்தாலே அறம் என்றும் மனத்தூய்மையற்ற செயல்கள் யாவும் ஆரவாரச் செயல்கள் என்றும் கீழ்கண்ட குறளின் மூலம் விளக்குகிறார். .

> **"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற"**

- ஒருவன் தன் மனத்தின் கண் குற்றம் இல்லாதவனாக இருத்தல் வேண்டும்.
- அதுவே அறன் எனப்படுவதாகும். மனத்தூய்மையின்றிச் செய்யப்படும் பிற அனைத்துமே ஆரவாரத்துடன் செய்யப்படுபவனவேயாகும்.

**முடிவுரை**

- பிறப்பால் அனைவரும் சமம் என்று கூறி நீத்தார் பெருமை இல்வாழ்க்கை, இல்வாழ்வான், இல்லாள் இவர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களையும், ஒவ்வொரு மனிதனிடம் இருக்கவேண்டிய குணங்களாக இனியவை கூறல் இன்னா செய்யாமை, நன்றி மறவாமை, புறங்கூறாமை, விருந்தோம்பல், மனத்தூய்மை போன்றவற்றை வாழ்வியல் நீதிகளாக விளக்கியுள்ளமை இக்கட்டுரையின் மூலம் விளங்குகிறது.

TEST 3
வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

### 1. பொருளாதார வாழ்க்கை

வேதகாலப் பொருளாதாரமானது கால்நடை மேய்ச்சலும் வேளாண்மையும் கலந்ததாகும். ரிக்வேதகால ஆரியர்களின் முதன்மைத் தொழில் கால்நடைகள் மேய்ப்பது என்றாலும் மரவேலை செய்வோரும், தேர்கள் செய்வோரும், மட்பாண்டங்கள் செய்வோரும், உலோக வேலை செய்வோரும், துணி நெய்வோரும், தோல்வேலை செய்பவர்களும் இருந்தனர். பழுப்பு, மஞ்சள் நிற மட்பாண்டங்கள் இக்காலத்தைச் சேர்ந்ததாகும். குதிரைகள், காளைகள் மற்றும் நாய்கள் வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்டன.

சிந்து மற்றும் பஞ்சாப் பகுதிகளில் ஆரியர்கள் நிரந்தரமாகக் குடியேறியபின் அவர்கள் வேளாண்மை செய்யத் தொடங்கினார். யவா (பார்லி) அவர்களின் முதன்மை பயிராகும். கோதுமை, பருத்தி ஆகியவை சிந்துவெளி மக்களால் பயிர் செய்யப்பட்ட போதிலும் ரிக் வேதத்தில் அவைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொரு வருடமும் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது.

பின்வேதகாலத்தில் ஆரியர்கள் பசு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை மட்டுமல்லாமல் யானைகளையும் பழக்கப்படுத்தினர். தொடக்க வேத கால கைவினைஞர்களோடு நகை செய்வோர், சாயத்தொழில் செய்வோர், உலோகங்களை உருக்குவோர் போன்றோரும் சமூகத்தில் இடம் பெற்றிருந்தனர். இக்காலப் பண்பாடு வர்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

இரும்புக் கொழுமுனை கொண்ட கலப்பை மற்றும் இரும்புக் கோடாரி ஆகியவற்றின் உதவியோடு அதிக அளவிலான நிலங்களில் வேளாண்மை செய்யப்பட்டது. நெல், கோதுமை, பார்லி ஆகியன பயிர் செய்யப்பட்டன. வேளாணமை வளர்ச்சி பெற்றதால் நிலத்தின் மீது தனியுரிமை உருவானது. புதிய தொழில்களும், கலைகளும் வளர்ந்து உபரி உற்பத்தி ஏற்பட்டு வணிகத்துக்கு இட்டுச் சென்றன.

### Economic Life

Economy in the Vedic period was sustained by a combination of pastoralism and agriculture. Though occupation of Rig Vedic Aryans was cattle rearing, there were carpenters, chariot makers, potters, smiths, weavers, and leather workers. Ochre Coloured Pottery (OCP) was attributed to this period. Horses, cows, goats, sheep, oxen and dogs were domesticated.

When Aryans permanently settled in Sindh and the Punjab regions they began to practise agriculture. The staple crop was yava (barley). There is no mention of wheat or cotton in the Rig-Veda, though both were cultivated by the Indus people. Two crops a year were raised.

In the later Vedic period the Aryans tamed elephants, apart from cow, goat, sheep and horse. In addition to craftsmen of early Vedic period there were also jewellers, dyers and smelters. Pottery of this period was Painted Grey Ware Culture.

Use of iron plough and axe helped to put more areas of land under cultivation. Crops of wheat, rice and barley were cultivated. With the growth of agriculture, the idea of private possession of land came into existence. New crafts and arts developed leading to surplus production of commodities for sale.

SURESH'

### 2. திருமண நிதியுதவித் திட்டம்

தமிழக அரசால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள், பெண் கல்வியை உறுதி செய்தல், குழந்தை திருமணத்தை தடுத்தல், விதவை மறுமணம் மற்றும் கலப்பு திருமணங்களை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம் : சமுதாயத்தில் காணப்படும் சாதி வேறுபாடு மற்றும் வரதட்சணைக் கொடுமைகளை களையும் பொருட்டு, கலப்புத் திருமணங்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்த 1968 முதல் செயல்பட்டு வருகிறது.

டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்: 1975-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு விதவை மறுமணத்தினை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் : ஏழை கைம்பெண் தாய்மார்களின் துயர் தீர்க்கும் வகையில் அவர்களது மகளின் திருமணத்தை நடத்த உதவும் நோக்கில் 1982-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியதவித் திட்டம் : தாய் மற்றும் தந்தையை இழந்த ஆதரவற்ற பெண்கள், திருமணம் செய்து கொள்ள உதவி செய்திடும் வகையில் 1985-ஆம் ஆண்டு அரசால் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருணம நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண உதவித் திட்டங்களில், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டம் / பட்டயம் பெற்றவர்களுக்கு ரூ.50,000/- ஏனையோருக்கு ரூ.25,000/ - நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டதாரி அல்லாதோருக்கான நிதியுதவித் தொகையான ரூ.25,000/-ல், மின்னணு பரிமாற்றம் மூலம் ரூ.15,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.10,000/- பட்டம் / பட்டயம் பெற்றோருக்கான நிதியுதவி தொகை ரூ.50,000/-ல் மின்னணு பரிமாற்றம் மூலம் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.20,000/- ம் வழங்கப்படுகிறது.

2022 - 2023ஆம் ஆண்டு வரவுசெலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.64.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**Marriage Assistance Scheme**

Various Marriage Assistance Schemes have been implemented through the Department of Social Welfare and Women Empowerment for the purpose of ensuring girl child education, preventing child marriage, promoting widow remarriage and inter-caste marriages.

Dr. Muthulakshmi Reddy Ammaiyar Memorial Inter-Caste Marriage Assistance Scheme : In order to abolish caste discrimination and to eliminate dowry harassment, a scheme to encourage inter-caste marriage by providing financial assistance was launched in the year 1968 and is now being implemented.

Dr.Dharmambal Ammaiyar Memorial Widow Remarriage Assistance Scheme was started in the year 1975 with an intention to rehabilitate the widows as well as to encourage the remarriage of widows.

E.V.R Maniyammaiyar Memorial Widow's Daughter Marriage Assistance Scheme was started in the year 1982 with an intention to help the poor widowed mothers to get their daughters married.

Annai Theresa Memorial Orphan Girl Marriage Assistance Scheme was launched as a marriage assistance scheme, during the year 1985 to help for the marriage of the orphan girls.

Moovalur Ramamirtham Ammaiyar Ninaivu Marriage Assistance Scheme has been revamped as "Moovalur Ramamirtham Ammaiyar Higher Education Assurance Scheme".

Under the E.V.R Maniyammaiyar Memorial Widow's Daughter Marriage Assistance Scheme and Annai Theresa Ammaiyar Memorial Orphan Girls Marriage Assistance Scheme, the beneficiaries are given 8 gram gold coin along with cash assistance of Rs.50,000/- for the graduates and diploma holders and Rs.25,000/- cash assistance for others.

Under Dr.Dharmambal Ammaiyar Memorial Widow Remarriage Assistance Scheme and Dr.Muthulakshmi Reddy Memorial Inter-caste Marriage Assistance Scheme, the beneficiaries are given 8 gram gold coin along with cash assistance of Rs.25,000/- which is disbursed as Rs.15,000/- through Electronic Clearing Service (ECS) and Rs.10,000/- in the form of National Savings Certificate (NSC) to non graduates and cash assistance of Rs.50,000/- for Degree/ Diploma Holders which is disbursed as Rs.30,000/- through Electronic Clearance Service (ECS) and Rs.20,000/ - as National Savings Certificate (NSC).

A sum of Rs.64.44 Crore has been provided in the Budget Estimate for the year 2022-2023.

### 3. பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான தேசிய இயக்கம்

இது 2010 ம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினத்தன்று பெண்களின் ஒட்டுமொத்த வலிமையினையும் உயர்த்துவதை நோக்கமாக கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துகிறது

அமைச்சகங்கள் மற்றும் துறைகள் முழுவதும் அனைத்து பெண்களின் நலன் மற்றும் சமூக பொருளாதார

மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் செயல்முறைகளை எளிதாக்குகிறது. இத்திட்டமானது பல்வேறு மத்திய அமைச்சகங்களின் கீழ் பெண்களுக்கான திட்டங்களுக்கும் ஒற்றைச் சாளர சேவையை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. மிஷன் பூர்ண சக்தி என்று பெயரிடப்பட்டுள்ள அது பெண்களின் முழுமையான அதிகாரமளிப்பதற்கான பார்வையைக் குறிக்கிறது.

பெண்களுக்கான தேசிய வளமையம் அமைக்கப்பட்டுள்ளது. இது பெண்களுக்கான அனைத்து திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கான தேசிய ஒருங்கிணைப்பு மையமாக செயல்படுகிறது.

**ஆணையம் கவனம் செலுத்தும் பகுதிகள்**

பெண்களுக்கு சுகாதாரம், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் கிடைப்பது. ஆரம்பநிலை முதல் 12ம் வகுப்பு வரையிலான பள்ளிகளில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைச் சேர்ந்த அனைத்து சிறுமிகளின் பாதுகாப்பு. பெண்களுக்கு உயர் மற்றும் தொழிற்கல்வி. திறன் மேம்பாடு, மைக்ரோ கிரெடிட், தொழிற்பயிற்சி, தொழில்முனைவு, சுயஉதவிக்குழு வளர்ச்சி. பாலின உணர்திறன் மற்றும் தகவல்களை பரப்புதல்.பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது மற்றும் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலுக்கு நடவடிக்கை எடுப்பது.

**National Mission For Empowerment Of Women**

The National Mission for Empowerment of Women (NMEW) was launched by the government of India on International Women's Day in 2010 with the aim to strengthen overall processes that promote all-round development of women.

It has the mandate to strengthen the inter-sector convergence; facilitate the process of coordinating all the women's welfare and socio economic development programmes across ministries and departments. The Mission aims to provide a single window service for all programmes run by the Govermment for Women under aegis of various Central Ministries. In light with its mandate, the Mission has been named Mission Poorna Shakti, implying a vision for holistic empowerment of women. The National Resource Centre for Women has been set up which functions as a national convergence centre for all schemes and programmes for women.

It acts as a central repository of knowledge, information, research and data on all gender related issues and is the main body servicing the National and State Mission Authority.

**Focus areas of the Mission**

Access to health, drinking water, sanitation and hygiene facilities for women. Coverage of all girls especially those belonging to vulnerable groups in schools from primary to class 12. Higher and Professional education for girls/women. Skill development, Micro credit, Vocational Training, Entrepreneurship, SHG development.Gender sensitization and dissemination of information. Taking steps to prevent crime against women and taking steps for a safe environment for women.

**4. நெகிழிகள் மனித வாழ்விற்கு நன்மை பயக்குமா?**

சரியான பயன்பாட்டிற்கு முறையாகப் பயன்படுத்தினால் பலவகை நெகிழிகள் சிறந்த பொருள்களாகச் செயல்படும். எடுத்துக்காட்டாக, பாலிபுரோபைலீன் என்ற நெகிழினால் செய்யப்பட்ட உறிஞ்சுக்குழாயினை எடுத்துக்கொள்வோம். இந்த உறிஞ்சுக்குழாய்களை நோய்த்தொற்றுநீக்கம் செய்து மீண்டும் பயன்படுத்தத் தேவையில்லை. எனவே, அவை உயர்தரமான சுகாதாரத்தை வழங்குவதோடு நோய்கள் பரவும் அபாயத்தையும் முற்றிலும் அகற்றுகின்றன.

எவ்வாறு நெகிழி என்ற பொருளை நன்மையான பயன்பாட்டிற்கு முறையாகப் பயன்படுத்த முடியுமோ, அதேபோல், தவறான பயன்பாட்டிற்கும் பயன்படுத்தலாம். நெகிழியினால் செய்யப்பட்ட பல பொருள்களைப் பற்றிச் சிந்துத்துப் பாருங்கள். எடுத்துக்காட்டாக, மெல்லிய நெகிழி பையினை எடுத்துக்கொள்வோம். இந்த வகை பிளாஸ்டிக் பைகளை நாம் மிகக் குறைந்த காலத்திற்குப் பயன்படுத்திய பின், அவை குப்பையாக, சுற்றுப்புறத்தில் நீண்டகாலம் கிடந்து மாசுபடுத்துகின்றன.

தவறான பயன்பாட்டிற்கு உபயோகிக்கப்படும் நெகிழிகள் பற்றி நீங்கள் மேலும் அறிய விரும்பினால் நீங்கள் தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி எறியப்படும் நெகிழி பொருள்கள் என்ற தலைப்பில், 1 ஜனவரி 2019 முதல் அமுலுக்கு வந்த சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, அரசாணை T.N.G.O.NO:84, தேதி 25/06/2018ஐப் பார்க்கவும்.

**Uses of plastics**

There are different types of plastics that are excellent materials when they are used for the right application. For example, let us take a syringe that is made from a type of plastic called polypropylene. These syringes do not have to be sterilized and reused; hence they provide a high standard of hygiene and eliminate the risk of spreading diseases.

Just as plastic is a material that can be used for a good application, it can also be used for the wrong application. Think about the different items you use that are plastic. For example, a simple article such as a thin plastic carry bag. You use this bag for a very short time and then throw it in a dustbin. Many of these carry bags do not get recycled and they litter and pollute our environment for a long time.

If you want to learn more about plastic which is used for the wrong application then you can refer to the Government of Tamil Nadu's ban on one-time use and throwaway plastics (Environment and Forests Department, T.N. G.O. No: 84, dated 25/06/2018, with effect from 1st January 2019)

### 5. இந்தியாவில் சாலை விதிகள்

இந்தியா முழுமைக்கும் பொருந்தக்கூடிய மோட்டார் வாகனச் சட்டம் 1988இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 1989ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.

ஒரு வழி சாலையில் ஓட்டுநர் தனது வலது புறம் வாகனம் முந்திச் செல்ல அனுமதிக்க வேண்டும். எதிர்புறமாக வாகனங்களை ஒருபோதும் நிறுத்தக்கூடாது.

இருவழி சாலையில் இடப்புறம் மட்டுமே ஓட்டுநர் வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

அனைத்து சாலை சந்திப்புகளிலும் மற்றும் பாதசாரி கடக்கும் கோடுகள் உள்ள இடங்களிலும் ஓட்டுநர் கட்டாயமாக வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும்.

தடை செய்யப்பட்ட இடங்களான மருத்துவமனை, பள்ளிக்கூடம், போன்றவைகளின் அருகில் ஓட்டுநர்கள் ஒலிப்பான்களைப் பயன்படுத்தக் கூடாது.

மருத்துவ ஊர்தி, தீயணைப்பு வாகனங்கள், இராணுவ பாதுகாப்பு வாகனங்கள் போன்றவைகளுக்கு வழிவிடுவது நமது பொறுப்பாகும்.

உயர் கற்றை ஒளியினைத் தேவையான போது மட்டுமே ஓட்டுநர்கள் பயன்படுத்த வேண்டும். எதிரே வாகனங்கள் வரும்போதும், அல்லது ஒரு வாகனத்தின் அருகில் பின்செல்லும்போதும் மங்கலான முகப்பு விளக்குகளை பயன்படுத்த வேண்டும்.

ஓட்டுநர் வாகனத்தின் வேகத்தினை குறைக்கும் பொழுது தனது வலது கையினை மேல் உயர்த்தி நிதானமாக மேலும் கீழுமாக அசைக்க வேண்டும்.

ஓட்டுநர் வாகனத்தினை நிறுத்தும்பொழுது பின்வரும் வாகனங்களுக்குத் தெரியும் பொருட்டு தனது கையினைச் செங்குத்தாக மேல் உயர்த்த வேண்டும்.

**Traffic Rules in India**

The Motor Vehicle Act 1988 passed by the Parliament which came into force in 1989 is applicable to the whole of India.

On one-way road the driver should allow the overtaking vehicle through the right. Never park the vehicle in reverse on a one-way street.

On a two-way road, the driver must drive on the left side of the road.

It is mandatory for the driver to slow down at all inter junctions and pedestrian crossing.

Drivers should not use the horns in prohibited areas like hospital zones, school zones etc.,

It is our responsibility to give way to emergency vehicles such as Army convoy fire engine and ambulance.

Driver should use high – beam only when necessary. It is important to dim the lights when there are oncoming vehicles or when driving closely behind another.

When the driver is slowing down his vehicle, he has to raise the right arm and swing it up and down gently.

When the driver stopping his vehicle he has to raise the arm vertically for the indication to the other vehicles behind it

### 6. தேசியக் கல்விக் கொள்கை

சுதந்திரத்திற்குப் பிறகு, 1968ஆம் ஆண்டின் முதல் தேசியக் கல்விக் கொள்கையானது இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இது தேசத்தின் முன்னேற்றத்தை ஊக்கவிப்பதோடு, பொதுவான குடியுரிமை, கலாச்சாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது. 1986ஆம் ஆண்டு இந்திய அரசு புதியக் கல்விக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது. இதன் நோக்கம் ஒரு நிலையான சமுதாயத்தை, மேம்பாட்டுடன் கூடிய துடிப்பான சமுதாயமாக மாற்றுவதாகும். இக்கல்விக் கொள்கை நாட்டில் விளிம்பு நிலை மக்களுக்கான சமவாய்ப்புகள், உதவித் தொகைகள், வயது வந்தோர் கல்வி, திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் மூலம் குறிப்பாக கிராமப்புற இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது. புதிய கல்விக் கொள்கை தொடக்கக் கல்வியில் குழந்தைகளை மையமாகக் கொண்ட அணுகுமுறைக்கு அழைப்பு விடுத்ததுடன், தொடக்கப் பள்ளிகளை தேசிய அளவில் மேம்படுத்துவதற்காக கரும்பலகைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது.

புதிய கல்விக் கொள்கையானது 1992ஆம் ஆண்டு மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. இது தேசியக் கலைத்திட்டத்தை வடிவமைத்தல், பணியிடைக் கல்வியை வலியுறுத்துதல், வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இடைநிலைக் கல்வி நிலையில் மதிப்பீட்டு முறைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றைப் பரிந்துரைத்தது.

### National Policy on Education

The first National Education Policy of 1968 marked a significant step in the history of Dr. Radhakrishnaneducation in post-independent India. It aimed to promote national progress, a sense of common citizenship and culture and to strengthen national integration. In 1986, the Government of India introduced a New Education Policy. The aim of New Education Policy was to transfer a static society into a vibrant one with a commitment to development and change. It emphasised on equal opportunities for marginalised sections of the country and the removal of disparity through scholarships, adult education and open universities, especially for rural India. The New Education Policy called for a child-centred approach in primary education and launched Operation Blackboard to improve primary schools nationwide.

The New Education Policy was revised again in 1992. It envisaged the formulation of a National Curriculum Framework, emphasis on in-service education, improvement of facilities and streamlining of the evaluation system at the secondary stage.

### 7. இந்தியாவின் சிவப்பு தரவு புத்தகம்

மிகப்பெரிய பல்வகைத் தன்மையுடைய இந்திய நாடு உலகின் நிலப்பரப்பில் 2.4% பரப்பளவை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால், உலகிலுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள சிற்றினங்களுள் 7.8% இங்கு காணப்படுகின்றன. சுமார் 45,000க்கும் மேற்பட்ட தாவரங்கள் மற்றும் 91000 வகையான விலங்குகள் இங்கு உள்ளன. நமது நாட்டின் மாறுபட்ட புவியியல் அமைப்பு மற்றும் காலநிலை காரணமாக, காடுகள், ஈரநிலங்கள், புல்வெளிகள், பாலைவனங்கள், கடலோர மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் இங்கு காணப்படுகின்றன. இவை அதிக பல்லுயிர் பெருக்கத்தைப் பராமரிப்பதோடு மனித நல்வாழ்வுக்கும் பங்காற்றுகின்றன. உலகளவில் அடையாளம் காணப்பட்டுள்ள 34 பல்வகைத் தன்மையுடைய இடங்களில் இமயமலை, மேற்குத் தொடர்ச்சி மலைகள், வடகிழக்கு இந்தியப் பகுதி மற்றும் நிக்கோபார் தீவுகள் ஆகியவை இந்தியாவில் காணப்படுகின்றன.

சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்று அமைச்சகத்தின் மூலம் 1969ஆம் ஆண்டில் இந்தியா ஐ.யூ.சி.என் என்ற அமைப்பின் மாநில உறுப்பினரானது, ஐ.யூசி.என் அமைப்பின் இந்திய அலுவலகம் 2007ஆம் ஆண்டு புதுதில்லியில் நிறுவப்பட்டது. இந்திய துணைக் கண்டத்தில் காணப்படும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாதுகாப்பு நிலையை இந்திய சிவப்பு தரவு புத்தகம் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் பெயரில் இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு மற்றும் இந்திய தாவரவியல் கணக்கெடுப்பு ஆகிய அமைப்புகள் நடத்திய ஆய்வுகள் இந்தப் புத்தகத்திற்கான தரவை வழங்குகின்றன.

### Red Data Book of India

India, a mega-diverse country with only 2.4% of the world's land area, accounts for 7-8% of all recorded species, including over 45,000 species of plants and 91,000 species of animals. The country's diverse physical features and climatic conditions have resulted in a variety of ecosystems such as forests, wetlands, grasslands, deserts, coastal and marine ecosystems which harbour and sustain high biodiversity and contribute to human well being. Four out of 34 globally identified biodiversity hotspots, the Himalayas, the Western Ghats, the North-East, and the Nicobar Islands, can be found in India.

India became a state member of IUCN in 1969, through the Ministry of environment, Forest and Climate Change (MoEFCC). The IUCN India country office was established in 2007 in New Delhi. Red Data Book of India contains the conservation status of animals and plants which are found in the Indian subcontinent. Surveys conducted by the Zoological Survey of India and the Botanical Survey of India under the guidance of the Ministry of Environment, Forest and Climate Change provide the data for this book.

### 8. ப்ளு கிராஸ்

ப்ளு கிராஸ் என்பது 'நமது வாயில்லா நண்பர்களின் கூட்டிணைவு' என்ற பெயரில் இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட விலங்கு நல தொண்டு நிறுவனமாகும். இது 1897ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஒவ்வொரு செல்லப் பிராணியும் ஆரோக்கியமான வாழ்க்கையை மகிழ்ச்சியான இல்லங்களில் அனுபவிக்க வேண்டும் என்பதே இந்த தொண்டு

நிறுவனத்தின் நோக்கமாகும். கால்நடைகளுக்கான தனியார் நிறுவனத்தின் சிகிச்சைகளை தங்களது செல்லப் பிராணிகளுக்கு, பெற்றுத்தர முடியாத உரிமையாளர்கள், தங்கள் பிராணிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுத்தர அவர்களுக்கு உதவுகிறது. மேலும், கைவிடப்பட்ட விலங்குகள் தங்களுக்குத் தேவையான வசிப்பிடங்களைப் பெறுவதற்கு அவற்றிற்கு உதவுவதோடு விலங்குகளைப் பராமரிப்போரின் கடமைகள் பற்றிய விழிப்புணர்வையும் இது ஏற்படுத்துகின்றது.

கேப்டன் வி.சுந்தரம் என்பவர் 1959ஆம் ஆண்டு ஆசியாவின் மிகப்பெரிய விலங்கு நல அமைப்பான இந்திய புளூ கிராஸ் என்ற அமைப்பை சென்னையில் நிறுவினார். அவர் ஒரு இந்திய விமான மற்றும் விலங்கு நல ஆர்வலர் ஆவார். தற்போது, இந்திய புளூகிராஸ் அமைப்பே நாட்டின் மிகப்பெரிய விலங்கு நல அமைப்பு ஆகும். இது செல்லப்பிராணிகளைத் தத்தெடுத்தல் மற்றும் விலங்குகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பல விலங்கு நல நிகழ்வுகளை நடத்துகின்றது. இந்திய ப்ளூ கிராஸ் அமைப்பு பல சர்வதேச மற்றும் தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. இந்த அமைப்பு முற்றிலும் தன்னார்வலர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. மருத்துவமனைகள், தங்குமிடங்கள், ஆம்புலன்ஸ் சேவைகள் மற்றும் விலங்குகளின் பிறப்புக் கட்டுப்பாடுகள் போன்ற அனைத்து வசதிகளுடன் சென்னையிலுள்ள கிண்டியில் இதன் பிரதான அலுவலகம் அமைந்துள்ளது. தங்குமிடம் வழங்குதல், தத்தெடுப்பு, விலங்குகளின் பிறப்புக் கட்டுப்பாடு, மருத்துவமனை வசதிகள், நடமாடும் மருந்தகம் மற்றும் ஆம்புலன்ஸ் சேவைகளை வழங்குதல் ஆகியவை இந்த அமைப்பின் செயல்பாடுகளாகும்.

### Blue Cross

Blue Cross is a registered animal welfare charity in the United Kingdom, founded in 1897 as 'Our Dumb Friends League'. The vision of this charity is that every pet will enjoy a healthy life in a happy home. The charity provides support for pet owners who cannot afford private veterinary treatment, helps to find homes for unwanted animals, and educates the public in the responsibilities of animal ownership.

Captain V. Sundaram founded the Blue Cross of India, the largest animal welfare organization of Asia in Chennai in the year 1959. He was an Indian pilot and animal welfare activist. Now, Blue Cross of India is country's largest animal welfare organizations and it runs several animal welfare events like pet adaptation and animal right awareness. Blue Cross of India has received several international and national awards. This organization is entirely looked after by volunteers. The main office is located at Guindy, Chennai, with all amenities like hospitals, shelters, ambulance services and animal birth controls, etc. Activities of the organization include, providing shelters, re-homing, adoption, animal birth control, maintaining hospitals and mobile dispensary and providing ambulance services

### ૭. ஊடகத்தின் முக்கியத்துவம்

சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகம் ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக கருதப்படுகிறது. ஊடகம் மற்ற மூன்று துறை செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது. இந்த நான்காவது தூண் நாட்டின் தொலைதூர பகுதிகளில் வாழும் அனைத்து மக்களும் நாட்டின் பிற பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதை அறிய உதவுகிறது. உண்மையில் ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகம் என்பது தகவல்கள் மற்றும் அறிவை வழங்கும் மிக முக்கிய சாதனமாக செயல்படுகிறது.

இவ்வுலகில் ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்த கட்டமைப்பு ஆகும். இது நம்மைச் சுற்றியுள்ள பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார செயல்பாடுகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கிறது. இதனை மக்கள் பல்வேறு தேவைகளுக்காக சார்ந்திருக்கின்றனர். குறிப்பாக தகவல்கள் மற்றும் பொழுதுபோக்கிற்காக சார்ந்துள்ளனர். ஊடகம் மக்களை விழிப்போடு இருக்கச் செய்கிறது. மேலும் சமூக மாற்றத்திற்கான மிக முக்கிய சாதனமாகவும் இருக்கிறது. ஊடகம் உலகின் அன்றாட நிகழ்வுகளை மட்டுமல்லாமல் ஒரு அரசின் பலம் மற்றும் பலவீனத்தை வெளிக்கொண்டு வருகிறது. தனியார் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை மக்களிடம் விளம்பரப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. அனைத்து தொலைக்காட்சி சேனல்களும் தேசிய மற்றும் பன்னாட்டு செய்திகளை ஒளிபரப்புகின்றன. பல திரைப்படங்களில் சமூகப் பிரச்சினைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விடயங்களிலும் ஊடகம் நடுநிலையான அறிக்கையை வழங்குகின்றது. இது சமூக. அரசியல் பிரச்சனைகளுக்கெதிராகவும், சமூக அநீதிக்கு எதிராகவும் போராடுகிறது. மேலும் இது மக்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவுகிறது.

### Importance of the Media

The four pillars of democracy are Legislature, Executive, Judiciary, and Media. Media ensures the transparency in the working of all the above three systems. This fourth pillar of democracy ensures that all people living in far off areas of country are aware of what's happening in rest of the country. In fact, mass media is the most important vehicle for information, knowledge and communication in a democratic polity.

Media is very powerful entity on the earth. It is a mirror which shows various social, political and economic activities around us. People depend on the media for various needs including entertainment and information. Media keeps the people awakened and it has become one of the major instruments of social change. Media not only bring out the day to day happenings in the world, but also exposes the strength and weakness of the government. It also advertises the various products produced by the private companies. It creates the awareness. All the TV channels broadcasts national and international news. Social problems are portrayed in many cinemas. Media provide a balanced report on any matters. It fights against the socio-political evils and injustice in our society while bringing empowerment to the masses and facilitating development.

### 10. இந்திய அரசியலமைப்பு மற்றும் சமத்துவம்

ஒரு அரசியலமைப்பு என்பது நாட்டின் நிர்வாகத்தை வழிநடத்தும் விதிகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பாகும். இந்திய அரசியலமைப்பின் 14ஆவது பிரிவு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்கிறது. மேலும் மக்களுக்குள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுவதைத் தடுக்கிறது.

நாட்டின் நிலப்பரப்பு பன்முகத்தன்மை கொண்டது என்பதால் அனைவருக்கும் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நமது அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. சமுதாயத்தில் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான இரண்டு முக்கியமான காரணிகள் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதுல் ஆகும். பல்வேறு வகையான சுதந்திரம் என்பது அவரவர் மதத்தை பின்பற்றவும், மொழியைப் பேசவும், விழாக்களைக் கொண்டாடவும், கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதும் ஆகும்.

அரசியலமைப்பு என்பது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் சட்ட வடிவமைப்பாகும். இதன்படி ஒரு நாடு நிர்வகிக்கப்படும். சமத்துவம் என்பது தீண்டாமையை ஒரு குற்றமாகக் காண்பதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவு 17இன் படி இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது. எந்த வகையிலும் தீண்டாமையைப் பின்பற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இன்றும் கூட நாடு முழுவதும் பல்வேறு வகையான பாகுபாடு காணப்படுகிறது. பெண்கள், விவசாயிகள்,பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூக வகுப்பினர் உள்ளிட்டோர் இன்னும் இந்தியாவில் சமத்துவத்திற்காகப் போராடி வருகிறார்கள்.

### Constitution of India and Equality

A Constitution is a set of rules and regulations guiding the administration of a country. Article 14 of the constitution of India provides equality before the law or equal protection within the territory of India and prohibits the unreasonable discrimination between persons.

Our Constitution says ours is a land of diversity; therefore, equality has to be ensured for all. Two significant parameters to ensure equality in society are respecting diversity and ensuring freedom. The different kinds of freedom are freedom to follow their religion, speak their language, celebrate their festivals and express their views freely.

The Constitution is a legal framework of rules and regulations by which a nation would function. Equality is where untouchability is seen as a crime. In India, as per the Article 17 of the Indian Constitution, untouchability is totally abolished and it's any form is forbidden.

Even today, different types of discrimination are reported across the country. Women, peasants, tribes and people from lower social classes are still striving for equality in India.




TEST 4 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

## 1. Population Growth

'It is easy to add but difficult to maintain' Population is a dynamic phenomenon where the number, distribution and composition are constantly changing. Human population increases as babies are born and decreases as people die. For most of human history, births have only slightly exceeded deaths every year. As a result, human population grew slowly. About the time of Industrial Revolution, it began to increase rapidly.

Natural increase of population is the difference between the birth rate and death rate. In fact population is always increasing but only in very rare cases it may decrease through natural or man-made disasters such as famine, landslides, earthquakes, tsunami, epidemics, extreme weather conditions and war.

Population change refers to an increase or decrease in the population of an area influenced by the number of births, deaths and migration. The population of the world doubled from 500 million in 1650 to 1000 million in1850.The projected population for 2025 and 2050 is about 8 billion and 9 billion respectively.

Population growth refers to an increase in the number of people who reside in a particular area during a particular period.

**மக்கள்தொகை வளர்ச்சி**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பையே மக்கள்தொகை வளர்ச்சி என்கிறோம். பொதுவாக மக்கள்தொகை வளர்ச்சியானது சீராக அதிகரித்துக் கொண்டிருக்கும். ஆனால் தொழிற்புரட்சியின் போது மிக அதிகமாக அதிகரிக்க ஆரம்பித்தது.

மக்கள்தொகை வளர்ச்சி என்பது பிறப்பு விகிதத்திற்கும், இறப்பு விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும். பொதுவாக மக்கள்தொகை எப்போதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும், ஆனால் சில சமயங்களில் மக்கள்தொகை வளர்ச்சி குறையும். குறிப்பாக, பஞ்சம், நிலச்சரிவு, புவி அதிர்ச்சி, ஆழிப்பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்கள் மற்றும் மனிதனால் ஏற்படும் அழிவுகளான போர் போன்ற காரணங்களினால் மக்கள்தொகை வளர்ச்சி குறைகின்றது.

மக்கள்தொகையில் மாற்றம் என்பது மக்களின் எண்ணிக்கை ஓரிடத்தில் வளர்ச்சி அதிகரிப்பு அல்லது குறைவதைக் குறிப்பதாகும். இது பிறப்பு, இறப்பு மற்றும் மக்கள் இடப்யெர்வு ஆகியவற்றினால் தீர்மானிக்கப்படுகிறது. கிபி (பொ.ஆ) 1650இல் 500 மில்லியனாக இருந்த மக்கள்தொகை கிபி (பொ.ஆ) 1850இல் 1000 மில்லியனாக இருமடங்கு வளர்ச்சி கண்டது. இது கி.பி (பொ.ஆ) 2025 மற்றும் கிபி (பொ.ஆ) 2050இல் முறையே 8 பில்லியன் மற்றும் 9 பில்லியன்களாக வளர்ச்சியடையும் என அனுமானிக்கப்பட்டுளது.

பிறப்பு மற்றும் குடியிறக்கம் காரணமாக மக்கள்தொகை அதிகரிக்கிறது. இறப்பு மற்றும் குடியேற்றம் காரணமாக மக்கள் தொகை குறைகிறது.

## 2. Sustainability

In 1987, the Brundtland Commission cited the definition of sustainability.

"Sustainable development is development that meets the needs of the present without compromising the ability of future generation to meet their own needs".

For sustainable development to be achieved, it is crucial to harmonize three core elements: economic growth, social aspects and environmental protection. These elements are interconnected and are crucial for the well-being of individuals and societies. To achieve true sustainability, we need to balance the economic ,social and environmental factors of sustainability in equal harmony.

**Social Sustainability**

The ability of a social system such as a country, family or organization to function at a defined

SURESH

level of social well being and harmony is called social sustainability. Problems like war, endemic poverty, widespread injustice and low education rates are symptoms of a system in socially unsustainable.

The balancing capacity of a government in maintaining peaceful existence towards other countries and at the same time providing the requirements of its citizens without affecting the environment creates social sustainability.

**வளம் குன்றா வளர்ச்சி**

கி.பி (பொ.ஆ) 1987ஆம் ஆண்டு பிரண்டலேண்டு குழு வளம் குன்றா வளர்ச்சி என்ற சொல்லுக்கான விளக்கத்தை அளித்தது.

வளம் குன்றா வளர்ச்சி என்பது எதிர்காலச் சந்தியினரான தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்வதோடு நிகழ்காலத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்வதாகும்.

வளம் குன்றா வளர்ச்சியை அடைவதற்குப் பொருளாதார வளர்ச்சி, சமுதாயக் கூறுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கியமான அடிப்படைக் காரணிகளை ஒன்றிணைப்பது அவசியமாகும். இந்தக் கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அதன் மூலம் தனிமனிதன் மற்றும் சமூகத்தின் வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். உண்மையான வளம் குன்றா வளர்ச்சியை அடைய வேண்டுமென்றால் நாம் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளுக்குச் சம அளவு முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகும்.

**வளம் குன்றாச் சமூக வளர்ச்சி**

ஒரு திறன் வாய்ந்த குடும்பம், சமூகம், நிறுவனம் மற்றும் நாடு சமூக நல்லிணக்கத்திற்காகவும் திறம்பட வளர்ச்சிக்காகவும் வரையறுக்கப்பட்ட அளவில் சிறப்பாக இயங்குவதை வளம் குன்றா சமூக வளர்ச்சி என்று அழைக்கின்றோம். போர்கள் தொடர்ச்சியான ஏழ்மை பரந்துபட்டு காணப்படும் அநீதி மற்றும் குறைந்த கல்வி வீதம் ஆகியவை நிலைப்படுத்தப்படாத வளர்ச்சி கொண்ட சமூகத்திற்கான அடையாளமாகும். ஒரு அரசாங்கத்தின் சமநிலைத்திறன் என்பது அண்டை நாடுகளுடன் கொண்டுள்ள அமைதியான பரஸ்பர நல்லுறவிற்கும் அதேவேளையில் குடிமக்களின் தேவைகளைச் சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் பூர்த்தி செய்து நிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சியை உருவாக்குவதாகும்.

## 3. Tsunami

A tsunami can kill or injure people and damage or destroy buildings and infrastructure as waves come forth and recede. A tsunami is a series of enormous ocean waves caused by earthquakes, underwater landslides, volcanic eruptions or asteroids. Tsunamis can travel 700-800 km per hour, with waves 10-30 meter high. It causes flooding and disrupts transportation, power, communications, and water supply.

**How to respond to Tsunami?**

You should find out if your home, school, workplace or other frequently visited locations are in tsunami hazard areas along the sea-shore

Plan evacuation routes from your home, school, workplace, or any other place you could be, where tsunamis poses a risk.

Use a weather radio or stay tuned to a local radio or television station to keep informed of local watches and warnings.

**What to do after a Tsunami?**

You should continue using a weather radio or staying tuned to a Coast Guard emergency frequency station or a local radio or television station for updated emergency information.

Check yourself for injuries and get first aid if necessary, before helping injured or trapped persons.

If someone needs to be rescued, call professionals with the right equipment to help.

**ஆழிப் பேரலை**

ஆழிப் பேரலை உயிர்ச் சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது. நிலநடுக்கம், கடலுக்கு அடியில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு மற்றும் குறுங்கோள்கள் போன்றவற்றால் ஏற்படும் தொடர் பெருங்கடல்களின் அலைகளே ஆழிப் பேரலையாகும். ஆழிப் பேரலையின் 10 – 30 மீட்டர் உயரத்தில் மணிக்கு சுமார் 700 – 800 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது. இது வெள்ளப் பெருக்கை உண்டாக்கும். இது மின்சாரம், தகவல் தொடர்பு, நீர் அளிப்பு போன்றவற்றைப் பாதிக்கின்றது.

**ஆழிப் பேரலை எவ்வாறு எதிர்கொள்வது?**

முதலில் நீங்கள் இருக்கும் வீடு, பள்ளி, பணிபுரியுமிடம், அடிக்கடி சென்று வருமிடம் போன்றவை கடலோர ஆழிப் பேரலை பாதிப்பிற்குட்பட்ட இடங்களா எனக் கண்டறியவும்.

SURESH'

ஆழிப் பேரலை பாதிப்புக்குள்ளாகும் உங்கள் வீடு, பள்ளி, பணிபுரியுமிடம், அடிக்கடி சென்று வருமிடம் போன்றவற்றிலிருந்து வெளியேறும் வழியைத் திட்டமிடவும்.

ஆழிப் பேரலை தொடர்பான எச்சரிக்கைத் தகவல்களை அறிந்துகொள்ள உள்ளூர் வானொலி அல்லது தொலைக்காட்சியைக் காணவும்.

**ஆழிப் பேரலைக்குப் பிறகு என்ன செய்ய வேண்டும்?**

ஆழிப் பேரலை தொடர்பான அண்மைச் செய்திகளுக்கு வானொலி அல்லது தொலைக்காட்சியைக் காணவும்.

உங்களுக்குக் காயம் ஏற்பட்டுள்ளதா எனக் கண்டறிந்து முதலுதவி பெறவும். பிறகு காயமடைந்த அல்லது சிக்கிக் கொண்ட நபர்களுக்கு உதவி செய்யவும்.

ஆழிப் பேரலையிலிருந்து யாரையாவது மீட்க வேண்டுமென்றால் சரியான கருவிகளுடன் கூடிய வல்லுநர்களை உதவிக்கு அழைக்கவும்.

## 4. Sectors of people involved in agricultural activities

A major portion of the workers involved in agricultural activities are landless labourers. All the land holders do not have the same amount of land. Many have very little land and very few people hold large areas of land.

During 2015-16 , there were 79,38,000 cultivators in Tamil Nadu. But five years earliers there were 81,18,000 cultivators. There was a reduction of 1,80,000 cultivators in these five years. Similarly, the area under cultivation also reduced from 64.88 lakh hectares to 59.71 lakh hectares during the same period. That is, the state of Tamil Nadu had lost nearly 1,03,400 hectares on an average during these five years.

Most of the cultivators in Tamil Nadu are micro farmers who cultivate in an area less than 1 hectare. Micro farmers account to around 78% of the total cultivators, while the area cultivated by these micro farmers is just 36%. Small farmers cultivating 1-2 hectares of land cover 14%, while the land cultivated by them is 26%.

Cultivators of schedule caste farmers are only one percent in Tamil Nadu. 96% of this one percent are small, micro farmers. The total land area under agriculture is shrinking fast not only in Tamil Nadu, but also throughout India. The number of marginal farmers has increased in India. In contrast, the number of marginal farmers is decreasing in Tamil Nadu. This shows that the farmers are doing other occupations.

**வேளாண் தொழிலில் ஈடுபடுவோரின் பிரிவுகள்**

வேளாண் தொழிலில் ஈடுபடுவோரில் பெரும்பகுதியினர் நிலமற்ற கூலித் தொழிலாளிகள் ஆவர். நிலம் படைத்தோர் எல்லோரிடமும் ஒரே அளவில் நிலம் இருப்பதில்லை. பலரிடமும் சிறிய பரப்பளவில்தான் நிலம் இருக்கும். வெகு சிலரிடம் மட்டுமே பெரிய அளவில் நாம் இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை நிலத்தைச் சாகுபடி செய்வோரின் எண்ணிக்கை 2015 - 16இல் 79,38,000ஆக இருந்தது. ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 81,18,000 விவசாயிகளாக இருந்தனர். இந்த ஐந்து ஆண்டுகளில் இவர்களின் எண்ணிக்கையில் 1,80,000 குறைந்துள்ளது. இதேபோல் சாகுபடி செய்யப்படும் பரப்பளவும் 64.88 லட்சம் ஹெக்டேர்கள் என்பதிலிருந்து 59.71 லட்சம் ஹெக்டேர்களாகக் குறைந்து போனது. அதாவது சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 1,03,400 ஹெக்டெர் சாகுபடி நிலத்தை. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகம் இழந்துள்ளது.

தமிழகத்தின் பெரும்பாலான விவசாயிகள் குறுவிவசாயிகள் ஆவர். (ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர்). மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையில் குறுவிவசாயிகள் 78% உள்ளனர். ஆனால் அவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு மொத்தச் சாகுபடி பரப்பளவில் 36% மட்டுமே. அடுத்ததாக சிறுவிவசாயிகள் (1 - 2 ஹெக்டேர் சாகுபடி செய்வோர்), 14% உள்ளனர். அவர்கள் விவசாயம் செய்யும் பரப்பளவு 26% ஆகும்.

தமிழகத்தில் விவசாயம் செய்பவர்களில் நூற்றில் ஒருவர் மட்டுமே பட்டியலினத்தவர். அவர்களில் 96 விழுக்காட்டினர் சிறு, குறு விவசாயிகள். தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதிலுமே சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு சுருங்கிக் கொண்டே வருகிறது. குறு விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. தமிழகத்தில் நேர்மாறாக, இவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மக்கள் வேளாண் தொழிலைவிட்டு விலகுவதையே இது சுட்டுகிறது.

## 5. Global warming

Global warming is the current increase in temperature of the Earth's surface (both land and water) as well as its atmosphere. Average temperatures around the world have risen by 0.75°C (1.4°F) over the last 100 years. About two thirds of this increase has occurred since 1975. Carbon

SURESH'

dioxide, methane, Chlorofluoro Carbon, nitrous oxides are the green house gases warming the earth's surface. So it is also called green house effect. The $CO_2$ is the most important of the green house gases contributing to 50% of global warming. The burning of fossil fuel, and other biomass, deforestation result in CO2. In the past, when the Earth experienced increases in temperature it was the result of natural causes but today it is being caused by human activities.

Global warming adversely affects agriculture, horticulture and eco system. Reduced rainfall, higher temperature and increased pest/weed growth hamper farming. Threats to health arise due to increase in disease carrying vectors such as mosquitoes resulting in malaria, dengue fever, encephalitis and yellow fever.

An increase in the global average surface air temperature of such magnitude will bring about alarming changes in rainfall patterns and other climatic conditions, resulting in serious ecological disequilibrium.

**புவி வெப்பமயமாதல்**

நிலம் மற்றும் நீர் உள்ளடக்கிய பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்ப நிலையையே புவி வெப்பமயமாதல் என்கிறோம். உலகின் சராசரி வெப்பநிலை கடந்த 100 ஆண்டுகளில் 0.75 டிகிரி செல்சியஸ் கூடியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இதில் 3இல் 2 பங்கு 1975க்குப் பின்வந்த குறுகிய காலத்திலேயே கூடியதாகும். கரியமில வாயு, மீத்தேன், குளோரோபுளோரோ கார்பன் நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமைக் குடில் வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதை பசுமைக்குடில் விளைவு என்பர். இவைகளில் கரியமில வாயு புவி வெப்பம் அதிகரிக்க 50% காரணமாக உள்ளது. உயிரிப் பொருட்கள், விறகு ஆகியவற்றை எரிப்பதாலும் காடுகள், மரங்களை அழிப்பதாலும் கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கின்றது. கடந்த காலங்களில் புவி வெப்பமடைதல் இயற்கைக் காரணங்களால் நிகழ்ந்தது. ஆனால் தற்போது இது மனித நடவடிக்கைகளால் தோற்றுவிக்கப்படுகின்றது.

புவி வெப்பமடைதல் காரணமாக விவசாயம், தோட்டக்கலை மற்றும் சுற்றுச் சூழல் அமைப்பு போன்றவை அதிக அளவில் பாதிக்கப்படுகின்றது. குறைந்த மழையளவு, அதிக வெப்பம் காரணமாக அதிக பூச்சி தாக்குதல், களைகள் வளர்தல் மூலம் விவசாயம் பாதிக்கப்படுகின்றது. அதிக வெப்பம் காரணமாக நோய் பரப்பும் கொசு போன்ற உயிரினங்கள் பெருகி மலேரியா, டெங்கு, என்செபாலிட்டிஸ், மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களை பரப்புகின்றது.

புவி வெப்பத்தின் சராசரி வெப்ப நிலையின் அதிக அளவு அதிகரிப்பு மழை பெய்யும் போக்கையும் மற்றும் தட்பவெப்ப நிலைகளையும் மாற்றி சுற்றுப்புறச் சூழலில் சமநிலையற்ற தன்மையை ஏற்படுத்தும்.

## 6. A Mighty Emperor Ashoka

The most famous ruler of ancient India was Emperor Ashoka. It was during his period that Buddhism spread to different parts of Asia. Ashoka gave up war after seeing many people grieving death after the Kalinga war. He embraced Buddhism and then devoted his life to spread the message of peace and dharma. His service for the cause of public good was exemplary. He was the first ruler to give up war after victory. He was the first to build hospitals for animals. He was the first to lay roads. Dharma Chakra with 24 spokes in our national flag was taken from the Saranath Pillar of Ashoka. Even though Emperor Ashoka was great, his greatness had been unknown until 20th century. The material evidence provided by William Jones, James Prinsep and Alexander Cunningham revealed the greatness of Emperor Ashoka.

Based on these accounts, Charles Allen wrote a book titled The Search for the India's Lost Emperor, which provided a comprehensive account of Ashoka. Many researches made thereafter brought Ashoka's glorious rule to light. These inscriptions were observed on the rocks, Sanchi Stupa and Saranath Pillar and helped to understand the greatness of Ashoka to the world.

**வலிமைமிக்க பேரரசர் அசோகர்**

பண்டைய இந்திய அரசர்களில் பேரும் புகழும் பெற்ற அரசர் அசோகர் ஆவார். இவரது ஆட்சியில் தான் புத்த மதம் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவியது. கலிங்கப் போருக்குப் பின் பல உயிர்கள் மடிவதைக் கண்டு வருந்தி, போர் தொடுப்பதைக் கைவிட்டார். அதற்குப் பிறகு புத்த சமயத்தைத் தழுவி, அமைதியையும் அறத்தையும் பரப்புவதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தார். பொதுமக்களுக்கு அவர் ஆற்றிய சேவை முன் மாதிரியாக விளங்கியது. வெற்றிக்குப் பின் போரைத் துறந்த முதல் அரசர்

அசோகர்தான். உலகிலேயே முதன்முதலாக விலங்குகளுக்கும் தனியே மருத்துவமனை அமைத்துத் தந்தவரும் ஆவார். இன்றும் அவர் உருவாக்கிய சாலைகளை நாம் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். நமது தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ள 24 ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய சாரநாத் கற்றூணில் உள்ள முத்திரையிலிருந்தே பெறப்பட்டது. இதிலிருந்து அசோகரது முக்கியத்துவத்தை நாம் அறியலாம். ஆனால், இத்தகைய சிறப்புகளைக் கொண்ட அசோகர் குறித்த தகவல்கள், வரலாற்றின் பக்கங்களில் 20ஆம் நூற்றாண்டு வரை இடம்பெறவே இல்லை. ஆங்கிலேய வரலாற்று ஆய்வாளர்களான வில்லியம் ஜோன்ஸ், ஜேம்ஸ் பிரின்செப், அலெக்சாண்டர் கன்னிங்காம் போன்றவர்கள் வரலாற்று ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்த வரலாற்றுச் சான்றுகள்தான் மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகுக்கு கொண்டு வந்தன.

இதன் அடிப்படையில் சார்லஸ் ஆலன் என்னும் ஆங்கிலேய எழுத்தாளர் அசோகர் குறித்த அனைத்து வரலாற்று ஆவணங்களையும் சேகரித்துத் தொகுத்து நூலாக வெளியிட்டார். அந்த நூலின் பெயர் The Search for the India's Lost Emperor. அதற்குப் பிறகு பல ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகள் மூலம் அசோகரின் பொற்கால ஆட்சி குறித்த செய்திகளை வெளிக்கொணர்ந்தனர். இதற்கான சான்றுகள் சாஞ்சி ஸ்தூபியிலும், சாரநாத் கற்றூணிலும் காணப்படுகின்றன. இவை அசோகரின் பெருமையை நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன.

## 7. Family and Society

Families constitute the fundamental unit of a society. There are two types of families: joint families and nuclear families. Families live in a harmonious neighbourhood. Hundreds of neighbourhoods collectively form a village and thousands of them group together in a city. The needs of people and the interdependence of communities for amenities such as water, food, electricity, education, housing and so on bring us together to live in harmony. Though we are diverse in our cultural practices, we are united and interdependent socially.

**Religious Diversity**

Our Constitution declares India to be a secular nation in which all religions are treated equally. The freedom of religion is our fundamental right. India is the birth Toda tribal people.place of many religions and has become the home of many others. Hinduism, Islam, Christianity, Sikhism, Buddhism, Jainism and Zoroastrianism flourish in India. India is a land of festivals, where people from different religions engage in many colourful celebrations in different parts of the country and co-exist harmoniously.

The wide variety of festivals celebrated in India is a true manifestation of its rich culture and traditions. Festivals like Pongal, Deepavali, Holi, Vijayadhasami, AyudhaPuja, Navaratri, Durga Puja, Dussehra, Ganesh Chaturthi, Bihu, Kumbamela, Onam, Miladi Nabi, Ramzan, Christmas, Buddha Poornima, Mahavir Jayanthi, Guru Nanak Jayanthi and Rakshabandhan are some of the festivals that denote the cultural diversity of India.

**குடும்பம் மற்றும் சமூகம்**

ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். குடும்பம் என்பது இருவகைப்படும். கூட்டுக் குடும்பம் மற்றும் தனிக்குடும்பம். பல குடும்பங்கள் சேர்ந்து இணக்கமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும் பல குடியிருப்புகள் இணைந்து கிராமங்களாகவும், பல கிராமங்கள் இணைந்து நகரங்களாகவும் உருவாகின்றன. குடிநீர், உணவு, மின்சாரம், கல்வி, வீட்டுவசதி போன்ற பல தேவைகளே மக்களை ஒன்றுபடுத்தி சமூக நல்லிணக்கத்துடன் வாழச் செய்கின்றன. நமது பண்பாட்டு நடைமுறைகள் அல்லது வாழ்வியல் அமைப்புகள் வேறுபட்டு இருப்பினும் அடிப்படையில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருகிறோம்.

**சமய பன்முகத்தன்மை**

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு ஆகும். அனைத்து மதங்களும் சமமானது என்று நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் அறிவிக்கிறது. மத விடுதலை நமது அடிப்படை உரிமை. இந்தியா பல மதங்களின் தாயகமாகவும், பல மதங்களின் புகலிடமாகவும் விளங்குகிறது. இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம், சீக்கிய மதம், புத்த மதம், சமண மதம், ஜொராஸ்டிரிய மதம் போன்ற எண்ணற்ற மதங்கள் இந்தியாவில் தழைத்தோங்கி உள்ளன.

இந்தியா பல்வேறு விழாக்களின் தாயகம் ஆகும். இந்தியாவில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் பல்வேறு விழாக்களை நாட்டின் பல பகுதிகளிலும் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக கொண்டாடுகின்றனர். இதுவே இந்தியாவை உயர்ந்த பாரம்பரியமிக்க கலாச்சார நாடு என்பதை பறைசாற்றுகிறது. மேலும் இந்திய விழாக்களான பொங்கல், தீபாவளி, ஹோலி, விஜயதசமி, ஆயுத பூஜை, நவராத்திரி, துர்கா பூஜை, தசரா, விநாயகர் சதுர்த்தி, பிஹு, கும்பமேளா, ஓணம், மிலாது நபி, ரம்ஜான், கிறிஸ்துமஸ், புத்த பூர்ணிமா, மகாவீர் ஜெயந்தி, குருநானக் ஜெயந்தி, ரக்ஷாபந்தன் போன்ற விழாக்கள் இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மைக்கான ஆதாரமாக விளங்குகிறது.

## 8. Features of the Factors of Production

Factors of production means resources used in the process of production of commodities. There are of four types viz., land, labour, capital and organization or enterprise. Here, land represents natural resources (such as soil, mineral deposits, seas, rivers, natural forests, fisheries etc). Labour represents human resources.

Together, these two factors are called the 'primary factors of production'. These two factors produce some units of goods for the purpose of consumption. And as consumption of these goods takes place, there is the possibility of some of these goods getting left over. Thus, saving is production minus consumption. This saved amount is called as capital, which serves as investment in the production process. Also, organisation or enterprise is a special form of labour. The third and the fourth factors are called 'secondary factors of production'.

These four factors depend on each other. They have a coordinated impact on production of goods and services.

**உற்பத்திக் காரணிகளின் இயல்புகள்**

உற்பத்திக் காரணிகள் என்பது பண்டங்களை உற்பத்தி செய்யப் பயன்படும் வளங்கள் ஆகும். இது நான்கு வகைப்படும். நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு அல்லது தொழில் முனைதல். இங்கு நிலம் என்பது இயற்கை வளமாகும் (அதாவது மண், கனிமவளங்கள், கடல்கள், ஆறுகள், இயற்கை நாடுகள், மீன்வளர்ப்பு, இன்னும் பல) உழைப்பு என்பது மனிதவளம். நிலம் மற்றும் உழைப்பு என்பது முதன்மை உற்பத்திக் காரணிகளாகும்.

இந்த இரு காரணிகளும், நுகர்விற்காக சில பொருட்களை உற்பத்திச் செய்ய பயன்படுத்தப்படுகின்றன. நுகர்விற்குப் போக சில பொருட்கள் எஞ்சியிருக்க வாய்ப்புண்டு. சேமிப்பு என்பது உற்பத்தியிலிருந்து நுகர்வு போக எஞ்சியதாகும். சேமித்த தொகை முதலீடாகும். அது உற்பத்திக்கான மூலதனமாக பயன்படுகிறது. அமைப்பு அல்லது நிறுவனம் என்பது உழைப்பின் சிறப்பு வடிவம் ஆகும். மூலதனம் மற்றும் அமைப்பு என்பது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகள்.

இந்த நான்கு காரணிகளும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. இவை ஒருங்கிணைந்து பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியை தீர்மானிக்கின்றன.

## 9. Agriculture

Tamil Nadu, with seven agro climatic zones and varied soil types is better suited for the production of fruits, vegetables, spices, plantation crops, flowers and medicinal plants. The State is the largest producer of loose flowers and the third largest producer of fruits. Tamil Nadu has historically been an agricultural State. At present, Tamil Nadu is the India's second biggest producer of rice, next only to West Bengal. The state is one of the major producers of turmeric. It is also the leading producer of Kambu, Corn, Groundnut, Oil seeds and Sugarcane. It ranks first in production of plantation crops, banana and coconut, second in rubber and cashew nut, third in pepper and fourth in sugarcane.

The gross cropped area under all crops was 58.97 lakh hectares in the year 2013-14. The area under food crops account for 72.9% and that of non-food crops is 27.1%. Among the food crops paddy takes a major share. Among the non-food crops, groundnut and coconut take a major share.

**வேளாண்மை**

வரலாற்று ரீதியாக தமிழகம் ஒரு வேளாண் மாநிலமாகும். தற்போது தமிழகத்தில் ஏழு வேளாண் காலநிலை மண்டலங்கள் உள்ளது. இங்கு பல்வேறு வகையான மண் வளம் இருப்பதால் பழங்கள், காய்கறிகள்,

SURESH

மசாலா பொருட்கள், தோட்டப் பயிர், மலர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் போன்றவை பயிரிட ஏதுவாக உள்ளது. தமிழகம் தேசிய உதிரி பூக்கள் உற்பத்தியில் முதலிடத்திலும் பழங்கள் உற்பத்தியில் மூன்றாமிடத்திலும் உள்ளது. தமிழகத்தில் வேளாண்மையானது மிக அதிக அளவில் ஆற்றுநீர் மற்றும் பருவமழையை நம்பியுள்ளது. தற்போது இந்தியாவின் நெல் உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய உற்பத்தியாளர்களாக மேற்கு வங்கத்திற்கு அடுத்ததாக உள்ளது. மிகப்பெரிய அளவில் மஞ்சள் உற்பத்தி செய்யும் மாநிலமாகவும் உள்ளது. கம்பு, சோளம், நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்றவை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது. தோட்டப் பயிர், வாழை, தேங்காய் உற்பத்தியில் முதலிடத்திலும், இரப்பர் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் மிளகு உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், கரும்பு உற்பத்தியில் நான்காவது இடத்திலும் உள்ளது.

அனைத்து வகைப் பயிர்களுக்கான மொத்த உற்பத்திப் பரப்பு 2013 – 14இல் 58.97 இலட்சம் ஹெக்டேர்களாக உள்ளது. உணவு தானிய உற்பத்திப் பரப்பு 72.9% ஆகவும் பிற பயிர்களுக்கான உற்பத்திப் பரப்பு 27.1% ஆகவும் உள்ளது. உணவுப் பயிர்களில் நெல் முக்கியப் பங்கு வகிக்கிறது. பிற பயிர்களில் கடலை மற்றும் தேங்காய் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## 10. Industry

Chennai is sometimes referred to as the Health Capital of India or the Banking Capital of India, having attracted investments from International Finance Corporationsand the World Bank. It is also called as Detroit of Asia.

Tamil Nadu has a network of about 110 industrial parks/estates that offer developed plots with supporting infrastructure. Also, the Government is promoting other industrial parks like Rubber Park, Apparel Park, Floriculture Park, TICEL Park for Biotechnology, Siruseri IT Park and Agro Export Zones.

The heavy engineering manufacturing companies are centered around the suburbs of Chennai. Chennai boasts of global car manufacturing giants as well as home grown companies.

Karur is known for its bus body building which contributes 80% of South Indian bus body building. TNPL is the Asia›s largest ecofriendly paper mill. Salem is called as steel city and has many sago producing units and mineral wealth. Sivakasi is the leader in printing, fireworks, safety matches production in India. It contributes to 80% of India's total safety matches production and 90% of India's total fireworks production. Thoothukudi is the gateway of Tamil Nadu. It is a major chemical producer next only to Chennai.

### தொழில்துறை

சென்னை, இந்தியாவின் மருத்துவத் தலைநகரம் எனவும், வங்கித் தலைநகரம் எனவும் அழைக்கப்படுகிறது. இது உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்துள்ளது. இது ஆசியாவின் டெட்ராய்டு எனவும் அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 110 தொழிற் பூங்காக்கள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளோடு செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழக அரசு இரப்பர் பூங்கா, ஆயத்த ஆடைகள் பூங்கா, பூக்கள் பூங்கா, உயிரி தொழில்நுட்பப் பூங்கா மற்றும் வேளாண் ஏற்றுமதிப் பூங்கா போன்ற பல துறைகளையும் முன்னேற்றியுள்ளது.

மாநிலத்தின் பெரிய அளவிலான பொறியியல் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மையமிட்டுள்ளன. சென்னை பன்னாட்டு அளவில் கார் உற்பத்தி ஜாம்பவான்களின் நகரமாக உள்ளது.

பேருந்து கட்டுமானத் தொழிலுக்குப் பெயர் பெற்ற கரூர், தென்னிந்திய பேருந்து கட்டுமானத் தொழிலுக்கான பங்களிப்பில் 80%மாக உள்ளது. கரூரில் உள்ள தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனம் ஆசியாவிலேயே மிகப் பெரிய சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத காகித நிறுவனங்களுள் ஒன்றாகச் செயல்பட்டு வருகிறது. எஃகு நகரம் என்றழைக்கப்படும் சேலத்தில் பல பெரிய ஜவ்வரிசி தயாரிப்பு நிறுவனங்களும் கனிமச் செல்வங்களும் உள்ளன. சிவகாசி அச்சுத் தொழில், பட்டாசு நிறுவனங்களுடன் தீப்பெட்டித் தயாரிப்பில் முன்னோடியாக உள்ளது. இந்தியாவின் மொத்தத் தீப்பெட்டி உற்பத்தியில் 90% பங்கு சிவகாசியில் உற்பத்தியாகிறது. தமிழகத்தின் நுழைவாயில் தூத்துக்குடி ஆகும். சென்னைக்கு அடுத்தபடியாக வேதிப்பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

TEST 5

வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

**வினா எண் : 1**

இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய் என்று முழுங்கினான். அமரகவி பாரதி, தமிழ் – தமிழரின் தொன்மை பற்றி, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்பது பழம்பெரும் தொடர். தமிழர் நாகரிகமும் தோற்றமும் இன்றுவரை ஆய்வுகளுக்கும் உட்பட்ட புதிராகவே உள்ளது. இதற்கான விடைகாணும் முயல்வுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எனினும் சங்க இலக்கியங்கள், அகழாய்வுகள், அயல்நாட்டார் நூல்கள், குறிப்புகள் முதலியன தமிழரின் தொன்மையினை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

சங்கப் பாடல்கள் காட்டும் குறிப்புகளும் செய்திகளும் சான்றுகளும் கடந்த நூறாண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்று வரும் அகழாய்வுத் தரவுகளுடன் அறிவுக்குறைபாடு, நம் நிகழ்காலச் சமூகம், கடந்த காலம் பற்றி அறிவதில் தெளிவின்றி இருப்பது உண்மையே. இருப்பினும் வரலாற்று ஆய்வாளர் பலர் பல்வேறு ஆய்வுகள் மூலம் சிலபல முடிவுகளுக்கு வந்துள்ளனர்.

தற்போது நடைபெற்று வரும் கீழடி அகழாய்வுகள் மூலம், நம் தொன்மை 3000 ஆண்டுகள் பழமையானது என்ற முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகத்தோடு தொடர்புடையது என்கிறால் ஹீராஸ் பாதிரியார். சங்க இலக்கிய எழுத்துக்களான தமிழ் – பிராமியும் சிந்துவெளி எழுத்துக்களும் ஒன்று என்கிறார். ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள். தமிழர்களே பற்பல இடங்களில் அலைந்து திரிந்து சிந்து வெளியில் குடியேறி இருக்க வேண்டும் என்கிறார் கால்டுவெல்.

உலகின் முதல் இலெமூரியனே என்பது, இலெமூரியக் கொள்கை, இலெமூரியா என்பது, தென்குமாரி முனையாம் இந்தியப் பெருங்கடல் சார்பாக இருந்த பெருநிலப்பரப்பு. அடிக்கடி நிகழ்ந்த கடற்கோள்களினால் அக்கண்டம் அழிவுக்குள்ளானது. எனவே தமிழர்கள் இலெமூரியக் கண்ட மாந்தர்களின் வழித் தோன்றல்களே என்பதும் ஊகப்படியான கருதுகோளாக இருக்க முடியும்.

மிகப்பெரும்பாலோர் கருத்துப்படி, சங்க காலம் என்பது கி.மு 300 – கி.பி 300 என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்ததாகவும் முதற்சங்கம் தென்மதுரையிலும், இரண்டாம் சங்கம் கபாடபுரத்திலும் மூன்றாம் சங்கம் தற்போதைய மதுரையிலும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கியங்கள் கடைச்சங்க காலத்தில் பிறந்தவை.

சங்க காலம் காட்டும் தமிழர், நகர வாழ்க்கையினர், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மட்டுமே கொண்டது. கிராம நாகரீகம். ஆனால் சங்ககால மக்கள் உழவியல், கால்நடை மேய்ப்பு, உள்ளூர்த் தொழில்கள், அயலக வணிகம் என நாகரிகச் சமூகமெனத் திகழ்ந்திருந்தமையைச் சங்கம் அடையாளப் படுத்துகின்றது.

**விடை**

தமிழர் நாகரிகத் தோற்றம் இன்றுவரை ஆய்வுகளுக்குட்பட்டே இருக்கின்றது. பாரதியும் பழம்பெரும் நூல்களும் தமிழரின் தொன்மையினை வியக்கின்றனர். சங்கப்பாடல்கள் கூறும் செய்திகள் பல தற்கால அகழாய்வுத் தரவுகளை ஒத்துள்ளன. திராவிட நாகரிகம் சிந்து வெளியுடன் தொடர்புடையது என்ற கருத்தில் ஹீராஸ், ஆர். பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., கால்டுவெல் ஆகியோர் உடன்படுகின்றனர். தென்குமரி முனையில் கடல் கொண்ட இலெமூரியா தமிழரின் தோற்றப் பகுதியாக இருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. மூன்று சங்கங்கள் இருப்பினும் கடைச் சங்கத்தில் பிறந்த நூல்களே சங்க நூல்கள். சங்ககாலம் காட்டும் தமிழரின் வாழ்வியல் உழவு, கால்நடை வளர்ப்பு, உள்ளூர்த் தொழில்கள், அயல வணிகம் என நகர நாகரிகமாகத் திகழ்ந்தது என்பதைச் சங்கம் தெளிவுபடுத்துகின்றது.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 210**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 73**

**வினா எண் : 2**

கல்வி என்பது மனித இனத்திற்கு வாழ்வியல் தேடல்களில் இன்றியமையாத ஒன்றாகும். இது குழந்தைகளை உடல் மற்றும் மன வளர்ச்சி அளவில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு இன்றியமையாத கூறாகும். கல்வியாளர்கள்

கூற்றின்படி, இளைய தலைமுறையை முறையாக வழிநடத்துவதிலும் சமுதாயத்தில் பங்களிப்பு செய்வதிலும் கல்வி, முக்கியப் பங்கு வகிக்கிறது.

கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம், அறிவு, திறமை போன்றவற்றைத் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றை கருத்தில் கொண்டு ஒரு முழுமையான ஆற்றல் மிக்க மனிதனை சமூகத்திற்கு அளிக்கிறது. சமூகத்தில் மனிதனின் செயல்பாட்டுக்கு மிக முக்கிய காரணமாக அவன் பெற்ற கல்வி விளங்குகிறது. கல்வி என்பது பாடப் புத்தகங்கள் வாயிலாக கற்றல் என்பதை கடந்து சமூகத்தின் தனி மனிதனின் அனுபவத்தையும் இலக்கியங்கள், இதிகாசங்கள் மற்றும் சமூக செயல்பாடுகள் ஆகியவற்றால் ஏற்பட்ட தாக்கங்களும், மனித வாழ்வில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் எனில், அது கல்வியாக கருதப்படுகிறது.

கல்வி ஒரு மனிதனின் நிலையான செல்வமாக விளங்குகிறது. திருக்குறள் தொடங்கி அனைத்து இலக்கியங்களிலும், கற்காலம் தொடங்கி தற்காலம் வரை கல்வி பெரிதாக கொண்டாடப்பட்டு வருகிறது. பண்டைய காலங்களில் ஒருவருக்கொருவர் பார்த்து பழகியும், கதைகள் சொல்லியும் கேட்டும் தங்களது அறிவினை பெருக்கிக் கொண்டனர். கால மாற்றத்துக்கு ஏற்ற வகையில் கற்கும் முறையும் அதற்காக பயன்படுத்தும் உபகரணங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. பண்டைய காலங்களில் கலைகள் மற்றும் கதைச் சொல்லிகள் வாயிலாக சிறந்த கருத்துக்கள் குழந்தைப் பருவம் முதலே அனைவருக்கும் ஊட்டப்பட்டது. தற்காலத்தில் இணைய வழிக்கல்வி அறிமுகத்தின் மூலம் ஒரு மனிதன் சிறந்த கல்வியைப் பெறுவதும் பெறாதிருப்பதும் அவன் தேர்ந்தெடுக்கும் வலைதள பக்கங்களைச் சார்ந்தே அமைகிறது. இதுவே கூட்டு முயற்சியின் அடிப்படையில் உருவாக்கப்படும் சமுதாயத்தின் தன்மையை நிர்ணயிக்கிறது.

**விடை**

கல்வி என்பது மனிதனின் உடல் அளவிலும் மனதளவிலும் வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய முக்கியக் கூறாக விளங்குகிறது. கற்பதன் மூலம் நமது செயல்பாடுகள் செறிவடைந்து ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்கும் வழிவகைகள் ஏற்படுகிறது. சமூகத்தின் மீதான ஒவ்வொரு தாக்கங்களுக்கும் நாம் பெற்ற கல்வியே பொறுப்பாகும். புத்தகங்கள் கடந்து வாழ்வியல் அனுபவ ரீதியாகவும் கலை வடிவங்களிலும் பெறப்படுவது கல்வியாகக் கருதப்படுகிறது. காலம் கடந்து அனைவராலும் போற்றப்படும் கல்வி தற்காலத்தில் இணைய வடிவில் உள்ளது. இக்காரணத்தால் இதன் சிறப்பான வெளிப்பாடு அதனை பயன்படுத்தும் மாணவனின் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே அவரது கல்வியும் அதனால் உருவாக்கப்பட்ட சமூகமும் அமைகிறது.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 182**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 64**

**வினா எண் : 3**

ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுக்களில் ஒன்றாகும். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு. புதுக்கோட்டை மாவட்டம் ஜல்லிக்கட்டின் சொர்க்கபூமியாக இன்னும் திகழ்ந்து வருகிறது. தமிழர்களின் வீர விளையாட்டாகக் கருதப்படும் இது மதுரை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் பரவலாக நடத்தப்படுகிறது.

இப்போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள், போட்டியில் கலந்து கொள்ளும் விலங்குகள், பார்வையாளர்கள் என அனைத்து தரப்பினருக்கும் இப்போட்டியில் காயங்கள் ஏற்படக்கூடும். இதன் விளைவாக விலங்குரிமை அமைப்புகள் இப்போட்டிக்கு தடை விதிக்கக்கோரி நீதிமன்றத்தில் முறையிட நீதிமன்றம் கடந்த ஆண்டுகளில் இப்போட்டிக்கு பலமுறை தடைவிதித்தது. இதனை எதிர்த்து, ஏற்பட்ட மக்கள் போராட்டத்தை அடுத்து 2017ஆம் ஆண்டு புதிய சட்டம் இயற்றப்பட்டு போட்டி தொடர்ந்து நடந்தது. இன்றளவும் தமிழகத்தில் பல்வேறு இளைஞர்கள் இதற்கான தனிப்பயிற்சியில் ஈடுபட்டு தங்களை தயார்படுத்திக் கொண்டனர்.

சல்லி என்பது விழாவின்போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் கட்டும் வழக்கம் தற்போதும் உள்ளது. பண்டைய காலத்தில் நடைமுறையில் இருந்த சல்லி என்ற நாணயங்களை துணியில் கட்டி மாட்டுக் கொம்பில் கட்டிவிடுவர். மாட்டை அணையும் வீரருக்கே அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும்.

சல்லிக்கட்டு என்ற இந்தப்பெயர் பிற்காலத்தில் ஜல்லிக்கட்டு என்று அழைக்கப்படுகிறது. வேலி, வாடிவாசல், வடம், மஞ்சுவிரட்டு உள்ளிட்ட பல்வேறு வகையான

SURESH'

விளையாட்டுக்கள் ஜல்லிக்கட்டின் அடிப்படையில் நடத்தப்படுகிறது. போர்ச்சுக்கல் மற்றும் மெக்சிகோ நாடுகளில் காளைப்போர் இன்றளவும் ஒரு பொழுதுபோக்காக நிகழ்த்தப்படுகிறது. காளையை ஒரு அரங்கத்தினுள் விட்டு அதற்கு கோபம் ஏற்படும்படியான செய்கைகளை மேற்கொண்டு அதனுடன் மோதி காளைகளை கொல்லும் செயல்பாடு பொழுதுபோக்காக கருதப்படுகிறது.

அதற்கு நேர்மாறாக தமிழகத்தில் நடக்கும் ஜல்லிக்கட்டு அனைத்து தரப்பினருக்கும் காயங்களை ஏற்படுத்தினாலும் வாழ்நாள் முழுவதும் தொழிலுக்கும் வாழ்வாதாரமாக விளங்கிய மாட்டுடன் ஒரு நட்பை பேணும் விளையாட்டாக இது கருதப்படுகிறது. விலங்குக்கும், மனிதருக்கும் இடையிலான ஒரு பிணைப்பை இவ்வகையான வீர விளையாட்டுக்கள் உறுதி செய்கிறது. வெளியிலிருந்து பார்ப்பதற்கு விலங்குகள் தாக்கப்படுவதாக தோன்றினாலும், அதற்காக பின்பற்றப்படும் வழிமுறைகள் விலங்கின் நலனையும் கருத்தில் கொண்டே கட்டமைக்கப்படுகிறது.

**விடை**

பல்வேறு பெயர்களில் வீரத்தை நிலைநிறுத்தும் பொருட்டு தமிழர் வாழ்வியலில் கலந்தது ஜல்லிக்கட்டு. தமிழ்நாட்டின் பரவலாகக் கொண்டாடப்படும் இப்போட்டி அனைவருக்கும் காயங்களை ஏற்படுத்தினாலும் அது எந்தவிதமான முன்விரோதம் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதன்று. இதற்கான வழிமுறைகள் விலங்கின் நலன் உட்பட அனைவரின் நலனையும் உள்ளடக்கிய வகையில் கட்டமைக்கப்பட்டதாகும். காளையின் கொம்புகளில் குறைவான மதிப்புகொண்ட பரிசுகள் கட்டப்பட்டிருந்தாலும் காளையை அடக்கி பரிசினை பெறுபவர் வீரம் செறிந்த ஆண்மகனாக சமூகத்தில் போற்றப்படுகிறார். காளைகள் இந்தியாவின் தொழில்ரீதியாகவும், மதரீதியாகவும் போற்றப்பட்டாலும் மற்ற நாடுகளில் நடக்கும் போட்டிகளில் காளைகள் கொல்லப்படுவது கடந்து காளைகளுடனான ஒரு இணக்கமான போக்குடன் ஜல்லிக்கட்டு நிகழ்த்தப்படுகிறது.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 220**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 65**

**வினா எண் : 4**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. அத்தகைய நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உணவே மருந்து என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது பாரம்பரிய மருத்துவ முறையாக சித்த வைத்தியமும், அதைத்தான் அறிவுறுத்துகிறது. குழந்தைப் பருவம் முதலே சத்தாண உணவினை ஊட்டச்சத்துடன் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதைப் பின்பற்றினால் மனித குலத்தை அச்சுறுத்தி வரும் நீரிழிவு நோய், உடல் பருமனாதல், அதிக இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு தொற்றா நோய்களை கட்டுப்படுத்த முடியும். சிறந்த உணவு முறையின் மூலம் புற்றுநோயைக் கூட குணப்படுத்த முடியும். சத்தான உணவு என்பது போதுமான அளவு நுண் ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும். 40க்கும் மேற்பட்ட சத்துக்கள் நம் உடலுக்கு இன்றியமையாதவையாக உள்ளன.

அதில் கார்போஹைட்ரேட் என்னும் சர்க்கரை, புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாது உப்புக்கள், நார்ச்சத்துக்கள் ஆகிய அனைத்தும் அடங்கியதுதான் ஊட்டச்சத்துமிக்க உணவு. இவற்றை குழந்தைப் பருவத்தில் இருந்தே கொடுப்பது அவசியம். நம்மில் பலர் சர்க்கரை சத்து அதிகம் உள்ள அரிசியையே தினமும் உண்டு வருகிறோம். இதுவே சர்க்கரை நோயை உண்டாக்கி இறப்புக்கு வழிவகுக்கிறது.

அரிசி உணவோடு நம் பாரம்பரிய உணவாக உள்ள பருப்பும் நெய்யும் சேர்த்து எடுத்தால் சர்க்கரையோடு புரதம், கொழுப்பு கிடைக்கப் பெறுவதால் சர்க்கரை அளவு உடலில் அதிகரிக்காது. இதனை அறிந்தே நம் முன்னோர்கள் தங்களது உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொண்டனர். புரதங்கள், நம் உடலினை நோய்க்கிருமிகளிடமிருந்து காக்கும் அரண்களாகும். உலகையே அச்சுறுத்திய கொரோனா நோய்த்தொற்றின் போதும் இந்த புரதச்சத்து உணவுகளையே எடுத்துக் கொள்ளவே மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

மாமிச வகைகளோடு முளைகட்டிய தானியங்களும் பயிர் வகைகளும் புரத சத்துக்கள் அதிகம் கொண்டவையாகும். இது வளரும் குழந்தைகளுக்கும் இளம் பெண்களுக்கும் உள்ள தேவையற்ற கொழுப்புக்களை கரைக்கும் வல்லமை படைத்ததாகும். தாவரங்கள் மூலமாக கிடைக்கும் எண்ணெய் வகைகளுக்கு கொழுப்பு சத்து கிடையாது. சூடான சோற்றில் நெய் கலந்து உண்பது முன்னோர் வழக்கம். இந்த பாரம்பரிய முறையினை நாமும் கடைபிடிப்பது நல்லது.

கொழுப்புக்கு பயந்து நமது பாரம்பரிய சத்தான உணவு முறைகளை நாம் கைவிட்டுவிட்டோம். பிஞ்சு காய்கறிகள், மாமிசங்கள் மற்றும் சில கொழுப்பு சார்ந்த பொருட்கள் ஆகியவற்றை நோய்க்கு பயந்து அறவே

ஒதுக்கிவிட்டோம். ஆனால் நம் முன்னோர்கள் நல்ல உடல் உழைப்புடன் சிறந்த உணவு முறையையும் கடைபிடித்து சிறந்த வாழ்வை எதிர்கொண்டனர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**விடை**

பண்டை காலம் முதல் இக்காலம் வரை நோயற்ற மனிதனே ஆரோக்கியத்தில் சிறந்தவராகக் கருதப்படுகிறார். இதற்கான முதன்மையான பரிந்துரையாக இயற்கை உணவும் சித்த மருத்துவமும் திகழ்கிறது. ஊட்டச்சத்து மிகுந்த உணவினை குழந்தைப் பருவம் முதலே வழக்கத்திற்குக் கொண்டு வருதல் நோய்த் தாக்கத்தை பெரிதும் தடுக்கிறது. கார்போஹைட்ரேட், சர்க்கரை உள்ளிட்ட அனைத்து புரத மற்றும் நார்ச்சத்துக்கள் கிடைக்கும்படியான உணவு முறையை நம் முன்னோர்கள் பரிந்துரைக்கின்றனர். எந்த உணவையும் நோய்க்கு பயந்து, ஒதுக்க முடியாத அளவில் சமமான ஊட்டச்சத்து கொண்ட உணவு முறை தமிழர்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. பெருகிவரும் தொழில்நுட்பங்கள் கடந்து வாழ்வியல் சூழலுக்கேற்ப அத்தனை பழக்க வழக்கங்கள் மாறினாலும், பழமை மாறாத உணவு முறை நோயற்ற வாழ்வையும் ஆரோக்கியமான தலைமுறையையும் உருவாக்கும்.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 241**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 78**

**வினா எண் : 5**

விளையாட்டு என்பது பொழுதுபோக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் கட்டமைப்பு கொண்ட ஒரு செயல்பாடு ஆகும். விளையாட்டு சில சமயங்களில் வேலை என்பதுடன் தொடர்புடையது போல் ஆகிறது. ஆனால் வேலை ஊதியத்துக்காக மேற்கொள்ளப்படுவது. விளையாட்டு மகிழ்ச்சிக்காக நிகழ்த்தப்படும் ஒரு கலை என்று அறியப்படுகிறது.

கலையைப் போல் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாக விளையாட்டு இருப்பதில்லை. இருந்தாலும் எப்போதும் இவற்றிற்கு இடையேயான எல்லைகள் தெளிவாக இருப்பதில்லை. தொழில்முறை விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு வருமானத்திற்கான ஒரு தொழிலாக உள்ளது. இது அனைத்து வயதினரும் ஆர்வத்துடன் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடிய ஒரு செயல்பாடாகும். மனித உடல்நலத்தையும் மன நலத்தையும் சமூக நலத்தையும் விளையாட்டின் மூலம் நிலைநிறுத்தலாம்.

விளையாட்டின் மூலம் ஒற்றுமையும் தலைமைத்துவமும் பேணப்படுகிறது. இவை கவலைகளை மறக்கடித்து, சிறந்த பண்புகளை சிறுவயதிலேயே வளர்த்து எடுப்பதற்கான ஒரு களமாக விளையாட்டு திகழ்கிறது. சிறு வயதிலேயே தங்களின் ஆற்றல் அளவு உள்ளிட்டவற்றை அளவிட்டு அறியக்கூடிய ஒரு வாய்ப்பை மைதானங்கள் ஏற்படுத்தித் தருகிறது. விளையாட்டு என்பது சிறார்களுக்கு மட்டுமின்றி குழந்தைகளுக்கும் அவர்களின் உடல் பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் பழங்கால வழக்கங்கள் உள்ளன.

சிறு குழந்தைகளுக்கு அவர்களின் மூச்சுக்குழாய் மற்றும் நுரையீரல் நன்கு சுருங்கி விரிவடைவதற்கான சூழலை ஏற்படுத்த ஒலி எழுப்பும் நாதஸ்வரம் போன்ற அமைப்புடைய விளையாட்டுப் பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. உடல் வளர்ச்சி மற்றும் உபாதைகளுக்கான சிறந்த தீர்வாக விளையாட்டு அன்றாட உடற்பயிற்சியின் ஒரு அங்கமாகவே திகழ்கிறது. விளையாட்டு என்பது மனித மனங்களை தளர்வடையச் செய்து வயது வரம்பு கடந்து அவர்களை சிறப்பாக செயல்பட செய்யும் தனிப்பெருந்திறனை கொண்டு திகழ்கிறது.

பல்வேறு இடங்களில் போட்டியில் வெற்றி என்பது கொள்கையை நிலைநாட்டுவதற்காகவும் பண முடிப்புகளுக்காகவும் மேற்கொள்ளப்படும் முயற்சியாக உள்ளது. ஆனால் உண்மையில் சமத்துவத்தை நிலைநாட்டி, ஒற்றுமையை வளர்த்து, தலைமைப் பண்பை வளர்த்தெடுக்கக்கூடிய அடிப்படையிலேயே அத்தனை விளையாட்டுக்களும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இரு நாடுகள் மற்றும் கருத்து ரீதியான வேறுபாடுகள் கொண்ட இருபெரும் குழுவினருக்கு இடையிலான சமத்துவமான முடிவுகளை எடுக்க பெரும்பாலும் விளையாட்டுக்களே நடத்தப்பட்டு தீர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**விடை**

விளையாட்டு பொழுதுபோக்கு என்பதைக் கடந்து உடற்பயிற்சியாகவும் கலை வடிவமாகவும் காணப்படுகிறது. தற்காலத்தில் வருவாய்க்காக தொழில்ரீதியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டாலும், தலைமைப் பண்பு, விட்டுக் கொடுத்தல், தோல்வியினை ஏற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட சிறந்த பண்புகளை விளையாட்டுக்களே வளர்த்தெடுக்கின்றன. குணநலன்கள் கடந்து மனிதனின் உடல் நலத்தையும் விளையாட்டின்

மூலம் சிறந்த முறையில் பேணலாம். கருத்து மோதல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் உள்ள பல்வேறு களங்களில் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக பெரும்பாலும் விளையாட்டுகளே நடுநிலையை நிலைநாட்டக்கூடியதாக பயன்படுத்தப்படுகிறது. ஒரு மைதானத்தைக் கடந்து மனித வாழ்வில் உடல் அளவிலும், மன அளவிலும் பல்வேறு விதமான நேர்மறையான தாக்கங்களை விளையாட்டுக்கள் உருவாக்கி பொழுதுபோக்கின் மூலம் வாழ்வவை வழிநடத்திச் செல்லக்கூடிய பாதைகளில் உள்ள தடைகளான பழுதினையும் போக்குகிறது.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 203**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 76**

## வினா எண் : 6

தொழில்நுட்பம் என்பது பொருட்கள் அல்லது சேவைகள் ஆகியவற்றை மேற்கொள்ள பயன்படும் அறிவியல் நுட்பங்களின் தொகுப்பாகும். தொழில்நுட்பக் கருவிகள் கைவினைகள், முதலியவற்றின் பயன்பாட்டுடனும் பல்வேறு செயல்கள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய மூன்றும் ஒன்றுடன் மற்றொன்று நெருங்கிய தொடர்புடையதாகும். இவற்றின் வேறுபாட்டை நாம் தெளிவாக வரையறுக்க முடியாது. அறிவியல் என்பது இவ்வுலகம் எப்படி இருக்கிறது எப்படி உருவானது என்பதை விளக்குகிறது.

பொறியியல் என்பது இதுவரை இல்லாத உலகை அல்லது செயல்முறையை உருவாக்குகிறது. தொழில்நுட்பம் என்பது இவ்விரண்டின் பயன்பாட்டையும் தெளிவுபடுத்துகிறது. மனித இனத்தின் தொழில்நுட்ப பயன்பாடு இயற்கை வளங்களை கொண்டு எளிமையான கருவிகளை செய்வதற்கு மேற்கொண்ட முயற்சியின் மூலம் தொடங்குகிறது. தொழில்நுட்பங்கள் அனைத்தும் ஒட்டுமொத்த மனித இனத்தின் நலனுக்காகவும் அல்லது உலக அமைதிக்காகவும் பயன்படுவதில்லை.

கத்தி முதல் அணு ஆயுதங்கள் வரை அனைத்தும் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப் படுகின்றன. ஆனால் அவை பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் என்பது தனிமனித பண்பிற்கு உரியதாகும். தொழில்நுட்பத்தை இரு வேறு வகையிலான வடிவங்களில் பயன்படுத்தலாம். ஒரு பொருளை உருவாக்கி அதே நேரம் மற்றொரு பொருளை அழிப்பதற்காகவும் பயன்படுத்தலாம். வாழ்வியல் சூழலகளை மேம்படுத்துவதற்கான கருவியாக தொழில்நுட்பம் இருந்தவாறு அனைவரும் அமைதியான வாழ்வினை எதிர்கொண்டோம்.

வசதியான வாழ்க்கையை உருவாக்கும் முனைப்பில் அதிகப்படியான இயற்கை வளங்கள் மீதான சுரண்டல், இயற்கைச் சீற்றங்களுக்கும் பேரழிவுகளுக்கும் வழிவகுக்கின்றது. இதனைக் கடந்து பெறப்பட்ட உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் முறையற்ற பயன்பாட்டால் சமூக சீரழிவுகளை ஏற்படுத்துகிறது. வலைதளம் உட்பட, அனைத்து கண்டுபிடிப்புகளை அடுத்தவர் நலனையும் கருத்தில் கொண்டே பயன்படுத்த வேண்டும். தனிமனிதனின் இவ்வகையான ஒழுக்கம் தவறான நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை அடியோடு களைந்திட உதவும்.

தொழில்நுட்பங்கள் சர்வதேச அரங்கில் நாட்டை முன்னேற்றினாலும் அதே முன்னேற்றத்தை சரிக்கின்ற பெரும் பங்கு அதே தொழில்நுட்பத்திற்கு உண்டு. பெறப்பட்ட வளங்களை பிரயோகப்படுத்தும் முறையிலேயே நமக்கான நன்மைகள் ஒழிந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறான கண்டுபிடிப்புகள் எவ்வித பேதமுமின்றி அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்தி சர்வதேச அரங்கில் உள்ள போட்டித்தன்மைகள் கடந்து, ஒரு முன்மாதிரியான நாடாக இந்தியாவை நிலைநிறுத்தும்.

**விடை**

தொழில்நுட்பத்திற்கு ஏற்றவகையில் நமது தேவைகள் மற்றும் நாம் எதிர்பார்க்கும் சேவைகள் ஆகியவை மாறிவருகின்றன. அதனை பூர்த்தி செய்யும் வகையில் கண்டுபிடிப்பாளர்கள் விரைந்து செயல்படுகின்றனர். இதன் காரணமாக இயற்கை வளங்களுக்கும் அற நெறியிலான மனித வாழ்விற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. அதிக தொழில்நுட்ப பயன்பாட்டால் மனிதச் செயல்பாடுகள் குறைந்து வேலைவாய்ப்பின்மை ஏற்படுகிறது. உலக நாடுகளுக்கு இடையில் பெரும்பாலும் தொழில்நுட்ப அடிப்படையிலான போட்டிகள் நிகழ்ந்தாலும் அதில் முன்னிலையில் உள்ள நாடுகள் வல்லரசாக அறிவிக்கப்பட்டாலும் அதே தொழில்நுட்பம்தான் நாட்டின் சரிவிற்கு மறைமுகக் காரணியாக விளங்குகின்றது. கண்டுபிடிப்புகளின் தன்மையினை அறிந்து, அதற்கான பயன்பாட்டை மேற்கொள்ளும்பொழுது மனித வாழ்வியலின் ஒரு சுமூகமான சூழலை ஏற்படுத்துகிறது.

இச்செயல்பாட்டின் மூலம் தொழில்நுட்ப பயன்பாட்டில் ஒரு முன்மாதிரியான நாடாக திகழலாம்.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 210**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 77**

**வினா எண் : 7**

தற்போதைய இளைய சமுதாயம் இணையம் என்னும் மாய வலைக்குள் சிக்கி மூழ்கிக் கொண்டிருக்கிறது. இணையம் என்பது பரந்து விரிந்து இருந்தாலும் அதன் ஒரு குறிப்பிட்ட புள்ளியைச் சுற்றியே இன்றைய இளைய சமுதாயம் செயல்படுகிறது. அவர்களது சிறகுகள் பறப்பதற்குப் பதிலாக இணையத்தால் கட்டப்பட்டுள்ளது. இணையத்தில் தெரிந்து கொள்ள முடியாத தரவுகளே இருக்க முடியாது.

அணுக முடியாத விஷயங்களே இல்லை. எத்தனைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இணையம் வாயிலாக கல்வியினை அளித்து வருகிறது. நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் அந்த நபரை இணையத்தின் மூலம் தொடர்பு கொண்டு பேச முடியும். கொரோனா போன்ற அசாதாரணமான சூழல்களிலும் இவ்வகையான கண்டுபிடிப்புகள் பெரும் வரமாக செயல்பட்டன. ஆனால் இணையப் பயன்பாட்டில் இவ்வகையான தேடல்கள் இன்றைய இளைஞர்களுக்கு பெரும்பாலும் இருப்பதில்லை.

தற்காலத்தில் அனைவரின் கைகளும் திறன்பேசிகளால் நிறைந்துள்ளன. அனைவரின் நேரத்தையும் ஆட்கொள்ளக்கூடிய ஒரு பெரும் சக்தியாக இவை மாறிவருகின்றன. மாறிவரும் காலசூழ்நிலைக்கேற்ப பெருகிவரும் தொழில்நுட்ப சேவைகளின் அடிப்படையில் நமது அலைபேசி பயன்பாடு அதிகமாகி வருகிறது. சிறந்த தொழில்நுட்ப வெளியீடுகளை வழங்குவதற்குப் பதிலாக மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இவ்வகையான கண்டுபிடிப்புகள் மனித இனத்தை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்கின்றன.

இணையத்தின் பயன்பாட்டின் அடிப்படையில் இப்போக்கு மாற்றப்படலாம். அதற்கான சரியான வழிகாட்டுதலும் பயன்பாட்டாளருக்கு வழங்கப்பட வேண்டும். முறையான பயிற்சியின் அடிப்படையில் தவறான பயன்பாட்டிற்கான தாக்கம் குறித்த விழிப்புணர்வு உள்ள பயனாளர்கள் இணையத்தை மிக கவனமாகக் கையாள்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு இணையத்தின் பயன்பாடு அதன் தாக்கம் ஆகியவை குறித்த அறிவுறுத்தல்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

இணையத்தில் அனைத்து வகையான தரவுகளும் வயது வேறுபாடின்றி அனைவரும் அறியும்படி பகிரப்பட்டுள்ளது. இந்த தளங்கள் வயது வாரியாக பயனாளருக்கு ஏற்ற வகையில் பிரத்யேகப்படுத்தப்பட வேண்டும் என்று பல்வேறு வலியுறுத்தல்கள் நிலவி வருகின்றன. சில தளங்கள் இதனை பின்பற்றி வந்தாலும் அதனைக் கடந்து பயனாளர்கள் அனைத்து தளங்களையும் எவ்வித தடையுமின்றி அணுகும் வகையிலே கட்டமைப்பானது மேற்கொள்ளப்பட்டது. கட்டமைப்பை மாற்றுவதாலும் சட்ட திட்டங்களை கடுமையாக்குவதாலும் இணையத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. மாறாக அதைப் பயன்படுத்தக்கூடிய பயனாளர்கள் பொதுப் பார்வையுடன் சீரிய சிந்தனையுடன் தொழில்நுட்பத்தின் வரமாகிய இணையத்தை பயன்படுத்த வேண்டும்.

**விடை**

தற்போதைய இளைய சமுதாயம் இணையத்தில் அதிகமாக மூழ்கிக் கிடக்கின்றனர். அதற்கேற்ற வகையில் கல்வி உள்ளிட்ட பெரும்பாலான அன்றாட செயல்பாடுகள் இணையம் வாயிலாகவே மேற்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் திறன்பேசியின் இன்றியமையாத தன்மையை நாம் உணரலாம். இணையத்தின் பயன்பாடு சேவைகளை அளித்தாலும் எவ்வித பாதுகாப்பு உறுதியும் அளிக்கப்படவில்லை. இதனால் தனிமனித சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகிறது. இணையத்தை முறையாக பயன்படுத்துதல் அவசியமாக உள்ளது. சட்டங்கள் கடுமையாக்கப்பட்டாலும் பயன்படுத்தும் முறையில் நேர்மையை பின்பற்றுவது இக்கால இணையத் தலைமுறையின் முக்கிய கடமையாகும். இதன் மூலம் சிறந்த தலைமுறைக்கான ஒரு சூழலை நம்மால் ஏற்படுத்த முடியும்.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 222**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 63**

**வினா எண் : 8**

இந்தியாவில் பெண்களின் நிலை கடந்த சில நூற்றாண்டுகளாக வெகுவாக மாறிவருகிறது. பண்டைய காலங்களில் பெண்கள் சமூகத்தில் ஆண்களுக்கு இணையாக செயல்பட்டனர். இடைக்காலங்களில் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு, தாழ்ந்த நிலையில் இருந்தனர். கடந்த சில நூற்றாண்டுகளாக சமயம் சார்ந்த

பல சீர்திருத்தவாதிகள் பெண்களின் விடுதலைக்காக போராடி வந்துள்ளனர். இதற்கு எதிர்மாறாக தற்போதைய இந்தியாவில் பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னிலையில் இருந்து வருகின்றனர்.

2011 தரவுகளின்படி மக்களவையின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும் பெண்களே ஆவர். பெண்களுக்கு எதிராக அமில வீச்சு, வரதட்சணைக் கொடுமை உள்ளிட்ட பல சமூக சீர்கேடுகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றனர். இதைக் களைவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் பல்வேறு விதங்களில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவற்றை அணுகுவதற்கான பயமற்ற ஒரு சமூக கட்டமைப்பு இன்றளவும் இல்லை என்பதே வருந்தத்தக்க விஷயமாகும்.

சட்ட ரீதியான அணுகுமுறைகளை பெண்கள் மேற்கொள்வதற்கான விழிப்புணர்வினை ஆங்காங்கே பொதுக் கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள் வாயிலாக அரசு மற்றும் அரசு அல்லாத நிறுவனங்களும் பல்வேறு விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர். மகளிர் நலனை பேணும் ஒரு அரசே சிறந்த அரசாக பண்டைய இலக்கியம் தொடங்கி இன்றைய காலம் வரை கருதப்பட்டு வருகிறது. இதனை சட்டம் என்பதைக் கடந்து வாழ்வியலில் ஒரு அங்கமாக மகளிர் நலன் உள்ளது.

குழந்தை வளர்ப்பில் இது ஒரு முக்கிய அங்கமாக பின்பற்றப்பட்டு வருகிறது. பெண்கள் பெரும் பதவிகளில் இருந்தாலும் அவர்களுக்கான சமூக வரையறை என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. தற்காலத்தில் படித்துவரும் பெண்கள் தங்களின் முறையான அணுகுமுறையின் மூலம் அவற்றை களைய வேண்டும். சுதந்திரம் என்பது படித்த பெண்களுக்கு, உரியது என்பதைக் கடந்து அவர்கள் அதை, பயன்படுத்தும் விதமே அந்த சுதந்திரத்தை புனிதப்படுத்துகிறது.

சமூகம் பெண்களுக்கான சரியான இடத்தினை அளித்தாலும் அவர்களுக்கான சுதந்திரம், இடஒதுக்கீடு உள்ளிட்டவை அனைத்துத் தளங்களிலும் வழங்கப்பட்டாலும் அவர்கள் தங்களுக்கே உரித்தான சுதந்திரத்தை பயன்படுத்தும் விதத்தில் அடுத்த தலைமுறையின் வாழ்வியலும் ஒளிந்திருக்கிறது. தாய்மைக் குணம் பெண்களுக்கே உரித்தான ஒன்றாக போற்றப்படுகிறது. அதன் அடிப்படையில் பொதுவாக சிந்தித்துப் பார்த்தால் சுதந்திரம் தனிப்பட்ட உரிமை என்றாலும் அது பொது நோக்குடனேயே பயன்படுத்தப்பட வேண்டும். இந்தப் புரிதல் ஒவ்வொரு தனி மனிதரிடமும் இருந்துவிட்டால் அனைவருக்கும் சுதந்திரமான சமத்துவம் நிறைந்த ஒரு சிறந்த வாழ்வை அனைவரும் எதிர்கொள்ளலாம்.

**விடை**

பண்டைய காலங்களில் பாலின பேதங்கள், இந்திய சமூகத்தில் காணப்படவில்லை. இடைக்காலங்களில் பெண்களுக்கான உரிமைகள் பறிக்கப்பட்டு சமூகத்தில் தாழ்த்தப்பட்டனர். தற்காலப் பெண்கள் தாங்கள் பெற்ற கல்வியறிவின் மூலம் இக்கட்டமைப்புகளை உடைத்தெறியும் முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளனர். பல்வேறு துறைகளை ஆளும் இடங்களில் பெண்கள் பணியமர்த்தப்பட்டனர். இந்த ஒதுக்கீடுகள் கடந்து, பெண்மைக்கே உண்டான தாய்மைக் குணம் அடிப்படையில் அவர்களது சுதந்திரத்தில் அடுத்தவர் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும். சட்ட ரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் சுதந்திரம் பற்றிய சரியான புரிதலும் பயன்பாடும் அனைவரையும் உள்ளடக்கியதே சமுதாயம் என்ற அனுபவ அறிவும் சிறந்த சமுதாயத்தை பெண்களின் மூலம் உருவாக்க இன்றியமையாததாகும்.

**கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 227**

**சுருக்கி எழுதிய வார்த்தைகள் : 70**

TNPSC TARGETING
வெற்றியின் முகவரி
SINCE 2006 SURESH' IAS ACADEMY BANK | TNPSC | SSC | RAILWAY | POLICE | TET
SINCE 2006 SURESH' IAS ACADEMY BANK | TNPSC | SSC | RAILWAY | POLICE | TET

| தூத்துக்குடி | திருநெல்வேலி | இராமநாதபுரம் | மதுரை | சென்னை |
| --- | --- | --- | --- | --- |
| 162-A, எட்டையபுரம் ரோடு | 8A/1, இலந்தகுளம் ரோடு, பாளையங்கோட்டை | 82, புளிகாரத் தெரு, கண்ணன் கோவில் அருகில் | மாஸ்டர் மஹால் பின்புறம், முடக்குச்சாலை, காளவாசல் | 4, அண்ணா ஆர்ச் எதிர்புறம், அருகம்பாக்கம், சென்னை அஞ்சல் |
| 99445 11344<br>99941 70110 | 98942 41422<br>99948 14400 | 75503 52916<br>75503 52917 | 98431 10566<br>98431 15233 | 97555 52003<br>97555 52009 |

தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | இராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566 | சென்னை - 97555 52003

TEST 6 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

## பொருள் உணர்திறன்

### வினா எண் 1

சங்க கால அரசு மன்னராட்சி முறையில் அமைந்திருந்தது. மன்னர்கள் கட்டுப்பாடற்ற முழு அதிகாரம் பெற்று விளங்கினர். மன்னரின் அதிகாரத்தில் தலையிட எவருக்கும் உரிமையில்லை. இருப்பினும் மன்னர், அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தார்.

அவை நாளவை மன்றம் எனவும் அரசவை அழைக்கப்பட்டது. அரசவையில் அமைச்சர்கள், படைதலைவர்கள், உயர் அதிகாரிகள், பட்டத்து அரசி, பட்டத்து இளவரசர், மற்ற இளவரசர்கள் இடம் பெற்றனர். மன்னனுக்கு நிலையான படை அமைப்பு இருக்கவில்லை. போர் காலங்களில் கட்டாய இராணுவ சேவை வலியுறுத்தப்பட்டது. (அ) காலாட்படை (ஆ) குதிரைப்படை (இ) போர் யானைகள் (ஈ) தேர்படை என படைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. சங்க காலத்தில் கடற்படையெடுப்புகளும் நிகழ்ந்துள்ளன. (எ.கா) கடம்பர் என்னும் கடற்கொள்ளையாளர்களுக்கு எதிராக சேரன் செங்குட்டுவனது படையெடுப்பு, கரிகாலனது, சிங்கள படையெடுப்பு என்பவனவற்றைக் கூறலாம். மண்டலம், கோட்டம், ஊர் என்ற உள்ளாட்சி நிர்வாக பிரிவுகள் இருந்தன. முதியோர் அவையால் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்டன. முறையான நிதி நிர்வாகம் நடைமுறையில் இருந்தது. போரின் போது கொள்ளையடிக்கப்பட்டவை, வணிக வரி, சுங்க வரி, உப்பு வரி, அன்பளிப்புகள், கப்பங்கள், போன்றவை அரசு வருவாய்களாகும். அரசர்கள், குறிப்பாக பாண்டியர்கள் மற்றும் சோழர்கள் விவசாயத்தை ஊக்குவித்தனர். காடுகளை அழித்து விளைநிலங்களை பெருக்கினர். தடுப்பணைகள் மூலம் ஆற்று நீரை சேகரித்தனர். புதிதாக கைப்பற்றிய இடங்களில் விவசாயிகளது குடியேற்றங்களை ஊக்குவித்தனர்.

பேரரசு காலத்தில் மன்னரது அதிகாரங்களும், பொறுப்புகளும் அதிகரித்தன. அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமானது. கடற்படையுடன் கூடிய வலிமையான, நிலையான படை உருவாக்கப்பட்டது. பல முறைகளை இணைத்த மாநில நிர்வாக அமைப்பு ஏற்பட்டது. பேரரசு மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. மண்டலங்கள் நாடுகளாகவும், நாடுகள் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டமும் பல பேரூர்களையும் (பெரிய நகரங்கள்), ஊர்களையும் (கிராமங்கள்) நகரங்களையும் (வியாபார நகரம்), பட்டினங்களையும் (கடற்கரை நகரங்கள்) கொண்டிருந்தது.

கிராமங்களில் ஊரார், நாடுகளில், நாட்டார் எனப்படும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட உள்ளாட்சி அமைப்புகளால் நிர்வகிக்கப்பட்டன. பிராமணர்கள் குடியிருப்புகளான கிராமங்கள் (பிரம்மதேயம்) உள்ளூர் பிராமணர்களது அவைகளால் நிர்வாகம் செய்யப்பட்டன. அவை மகாசபைகள் எனப்பட்டது. மகாசபைகள் எவ்விதத்திலும் வெளியார் தலையீடுயின்றி சுதந்திரமாக செயல்பட்டதுடன் பொதுவான வரிகளிலிருந்து விலக்குகளும் பெற்றவையாக இருந்தன. சோழர்களின் காலம் மகாசபையின் பொற்காலம் என்பர். கோயில்கள் கட்டவும், பொதுப் பணிகள் செய்யவும் மக்களின் உடலுழைப்பு கட்டாயமாக்கப்பட்டது. உணவு உற்பத்தியைப் பெருக்க அணைகளும், கால்வாய்களும் அமைக்கப்பட்டன. ஏரிகளும் குளங்களும் கிணறுகளும் தோண்டப்பட்டன.

**1. முழு அதிகாரம் பெற்றாலும் மன்னர் யாருடைய ஆலோசனைகளுக்கு மதிப்பு அளித்தார்?**

- முழு அதிகாரம் பெற்றாலும் மன்னர் அமைச்சரவையின் ஆலோசனைக்கு மதிப்பளித்தார்.

**2. அரசவையில் யார் யார் இடம் பெற்றிருந்தனர்?**

- அமைச்சர்கள், படைத்தலைவர்கள், உயர் அதிகாரிகள், பட்டத்து அரசி, பட்டத்து இளவரசர், மற்ற இளவரசர்கள் இடம்பெற்றிருந்தனர்.

**3. எத்தனை வகையான படைகள் பிரிக்கப்பட்டது? அவை யாவை?**

- படைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டது. அவை காலாட்படை, குதிரைப்படை, போர் யானைகள், தேர்ப்படை ஆகும்

**4. பாண்டியர்களும் சோழர்களும் விவசாயத்தை எவ்வழிகளில் பெருக்கினர்?**

- காடுகளை அழித்து விளைநிலங்களை பெருக்கினர். தடுப்பணைகள் மூலம் ஆற்று நீரை சேகரித்தனர்.
- புதிதாகக் கைப்பற்றிய இடங்களில் விவசாயிகளது குடியேற்றங்களை ஊக்குவித்தனர்.

**5. மன்னராட்சி காலங்களில் பேரரசின் உட்பிரிவுகளை விளக்குக?**

- பேரரசு மண்டலங்களாகவும், மண்டலங்கள் நாடுகளாகவும், நாடுகள் கோட்டங்களாகவும், இக்கோட்டங்கள் பேரூர்களையும், ஊர்களையும், நகரங்களையும், பட்டினங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.

### வினா எண் 2

வேளாண்மை முக்கியத் தொழில் ஆகும். நெல் முக்கியப் பயிர். கேழ்வரகு, கரும்பு, பருத்தி, மிளகு, இஞ்சி, மஞ்சள், இலவங்கம், பல்வேறு பழ வகைகள் போன்றவையும் பயிரிடப்பட்டன. பலா, மிளகு இரண்டுக்கும் சேர நாடு புகழ் பெற்றதாகும். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் நெல் முக்கிய பயிராகும்.

சங்க காலத்தில் கைத்தொழில்கள் ஏற்றம் பெற்றிருந்தன. நெசவு, உலோகத் தொழில், தச்சுவேலை, கப்பல் கட்டுதல், மணிகள், விலையுயர்ந்த கற்கள், தந்தம் ஆகியவற்றை பயன்படுத்தி ஆபரணங்கள் செய்தல் போன்றவை ஒரு சில கைத்தொழில்களாகும். இத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவைகள் இருந்தன. ஏனென்றால் சங்க காலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பருத்தி மற்றும் பட்டு இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகள் உயர்ந்த தரமுடையதாக இருந்தன. நீராவியை விடவும், பாம்பின் தோலைவிடவும் மெலிதான துணிகள் நெய்யப்பட்டதாக சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உறையூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியாடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் தேவை காணப்பட்டது.

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வர்த்தகம் சங்க காலத்தில் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்கள், கிரேக்க – ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இது குறித்த ஏராளமான தகவல்களைத் தருகின்றன. வண்டிகளிலும் விலங்குகள் மேல் ஏற்றப்பட்ட பொதிகளின் மூலமாகவும் வணிகர்கள் பொருட்களை கொண்டுசென்று விற்பனை செய்தனர். உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையின் அடிப்படையிலேயே நடைபெற்றது.

தென்னிந்தியாவிற்கும், கிரேக்க அரசுகளுக்கும், இடையே அயல்நாட்டு வர்த்தகம் நடைபெற்றது. ரோமானியப் பேரரசு தோன்றிய பிறகு ரோமாபுரியுடனான வாணிபம் சிறப்படைந்தது. துறைமுகப்பட்டினமான புகார் அயல்நாட்டு வணிகர்களின் வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. விலை மதிப்பு மிக்க பொருட்களை ஏற்றிவந்த பெரிய கப்பல்கள் இந்த துறைமுகத்திற்கு வந்து சென்றன. தொண்டி, முசிறி, கொற்கை, அரிக்கமேடு, மரக்காணம் போன்றவை பிற சுறுசுறுப்பான துறைமுகங்களாகும். அயல்நாட்டு வாணிபம் குறித்து பெரிப்புளூஸ் நூலின் ஆசிரியர் பல அரிய தகவல்களைக் கூறியுள்ளார். அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ போன்ற ரோமானியப் பேரரசர்கள் வெளியிட்ட தங்கம் மற்றும் வெள்ளியாலான நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. சங்க காலத்தில் நடைபெற்ற வாணிகத்தின் அளவு மற்றும் தமிழ்நாட்டில் ரோமானிய வணிகர்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை இவை வெளிப்படுத்துவதாக உள்ளன. பருத்தியாடைகள், மிளகு, இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், மஞ்சள் போன்ற நறுமணப் பொருட்கள், தந்த வேலைப்பாடு நிறைந்த பொருட்கள், முத்துக்கள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் போன்றவை சங்க காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களாகும். தங்கம், குதிரைகள், இனிப்பான மதுவகைகள் ஆகியன முக்கிய இறக்குமதிகளாகும்.

**1. சேரநாடு எப்பொருளுக்கு புகழ்பெற்றதாகும்?**

– சேரநாடு பலா மற்றும் மிளகுக்கு புகழ்பெற்றதாகும்.

**2. சங்க காலங்களில் நெய்யப்பட்ட துணிகளை இலக்கியப் பாடல்கள் எவ்வாறு சித்தரிக்கின்றன?**

– சங்ககாலத்தில் நெய்யப்பட்ட துணிகள் நீராவியை விடவும் பாம்பின் தோலை விடவும் மெலிதான துணிகள் நெய்யப்பட்டதாக சங்க இலக்கியப் பாடல்கள் சித்தரிக்கின்றன.

**3. எங்கு உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ஆடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் வரவேற்பு இருந்தது?**

– உறையூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ஆடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் வரவேற்பு இருந்தது.

**4. சங்ககால வணிகங்கள் குறித்து தகவல்களை தருகின்ற நூல்கள் யாவை?**

– சங்க இலக்கியங்கள், கிரேக்க ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் ஆகியவை வணிகங்கள் குறித்த தகவல் தருகின்றன.

**5. சங்க காலத்தில் புகழ்பெற்ற துறைமுகங்களாக விளக்கப்படுவன யாவை?**

– தொண்டி, முசிறி, கொற்கை, அரிக்கமேடு ஆகியவை சங்க காலத்தில் புகழ்பெற்ற துறைமுகங்களாக விளக்கப்படுவன ஆகும்.

### வினா எண் 3

முத்தமிழின் மூன்றாம் பகுதியான நாடகத் தமிழ் சிறப்பு மிக்கது. இது இயற்றமிழையும், இசைத்தமிழையும் தன்னுள் கொண்டு உள்ளதால் மக்களிடத்தில் இதன் தாக்கம் அதிகம் காணப்படுகிறது. மக்களின் அக, புற இயல்புகளை நடிப்பின் மூலம் மேடையில் வெளிப்படுத்துவது நாடகம். வாழ்வின், நல்ல தீய கூறுகளை எடுத்துக்காட்டி, அதனால் விளையும் பலன்களையும் சித்தரிப்பது நாடகம். நற்பண்புகளைக் கடைபிடித்து ஒழுகுவதன் சிறப்பை விளக்குவது நாடகம்.

தமிழிசை போல், தொன்மையான தமிழ் நாடக நூல்களும், நாடகக் கலை நுணுக்க நூல்களும் அழிந்து போயின. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல், நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், சினம், உவகை என்றும் எட்டு மெய்ப்பாடுகளையும், அவை தோன்றுவதற்கு வேண்டும் நிலைக்களன்களையும் குறிப்பிட்டுள்ளது.

SURESH'

முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், செயன்முறை, மதிவாணனார் நாடகத்தமிழ் என்னும் நூல்கள் முறையே அடியார்க்கு நல்லார், யாப்பருங்கல உரையாசிரியர், இறையனார் களவியலுரை ஆசிரியர் ஆகியோரால் குறிப்பிடப்பட்டுள்ளன.

கூத்தும், நாடகமும் நடக்கின்ற ஆடுகளம் பற்றி விரிவான செய்திகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

இடைக்காலத்தில் தோன்றிய இராசராச விஜயம், பூம்புலியர், குலோத்துங்க சோழ சரிதை போன்ற நாடகங்கள் இருந்தமை பிற்காலச் சோழர் காலத்தில் நாடகக் கலை சிறந்திருந்ததைக் காட்டுகிறது.

18ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம சரித நாடகமும், கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்ற நாடகமும் புகழ் பெற்றனவாகும்.

19ஆம் நூற்றாண்டில் நாடகம் மேன்மேலும் நன்கு வளரத் தொடங்கியது. பரிதிமாற் கலைஞரின் கலாவதி, ரூபாவதி, மானவிசயம் என்னும் நாடகங்களும் நாடகவியல் என்னும் நாடக இலக்கணம் பற்றிய நூலும் பெருமைப்படத்தக்கனவாகும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம் நாடக நூலும், அவரைப் பின்பற்றி அண்மையில் புலவர் ஆ.யூனி எழுதிய அனிச்ச அடி நாடக நூலும் நல்ல கவனிப்பைப் பெற்றன.

நாடகத்தின் தந்தை என போற்றப்பட்ட பம்மல் சம்பந்த முதலியாரின் மனோகரா, லீலாவதி, வேதாள உலகம், சபாபதி போன்ற பல்வேறு நாடகங்கள் சிறப்பாக அமைந்து அனைவரது பாராட்டையும் பெற்றன.

நாடக உலகின் இமயம் எனக் கருதப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகள் பவளக்கொடி, சதி அநுசுயா, வள்ளி திருமணம் சத்தியவான் சாவித்திரி, என்னும் புராண நாடகங்ளையும் ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப்பட்ட தமிழ் நாடகங்களையும் இயற்றினார்.

நவாப் இராசமாணிக்கம் பிள்ளை, எம்.கந்தசாமி முதலியார் போன்ற நாடக உலக ஜாம்பவான்களை யாராலும் மறக்க முடியாது. மாரியப்ப சுவாமிகள், கிட்டப்பா, கே.பி.சுந்தரம்பாள் ஆகியோர் நடிப்பாற்றலும் குரல் வளமும் கொண்ட கலைஞர்களாகத் திகழ்ந்தனர்.

1. **மக்களிடத்தில் நாடகத் தமிழின் தாக்கம் அதிகம் காணப்படுவது ஏன்?**

   - இயற்றமிழையும், இசைத்தமிழையும் தன்னுள் கொண்டுள்ளதால் நாடகத்தமிழின் தாக்கம் மக்களிடத்தில் அதிகம் காணப்படுகிறது.

2. **தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் வாயிலாக நாம் அறிவது யாவை?**

   - தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் வாயிலாக நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், சினம், உவகை என்ற 8 மெய்ப்பாடுகளையும் அறியலாம்.

3. **பிற்காலச் சோழர்களின் காலத்தில் நாடகக் கலை சிறந்திருந்ததை எதன் மூலம் அறியலாம்?**

   - இடைக்காலத்தில் தோன்றிய இராசராச விஜயம், பூம்புலியர், குலோத்துங்கச் சோழ சரிதை போன்ற நாடகங்கள் வாயிலாக பிற்காலச் சோழர்களின் காலத்தில் நாடகக் கலை சிறந்திருந்ததை அறிய முடிகிறது.

4. **18ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற நாடகங்கள் யாவை?**

   - அருணாச்சலக் கவிராயரின் இராமசரிதமும், கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும் 18ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற நாடகங்கள் ஆகும்.

5. **பம்பல் சம்பந்த முதலியாரின் சிறப்புப் பெயரும் அவரது படைப்புகளும் யாவை?**

   - பம்பல் சம்பந்த முதலியார் நாடகத்தின் தந்தை எனப் போற்றப்பட்டார்.
   - மனோகரா, லீலாவதி, வேதாள உலகம், சபாபதி போன்றவை அவரது படைப்புகள் ஆகும்.

**வினா எண் 4**

தொல்லியல் அகழாய்வுப் பணி என்பது பண்டைக்கால சமூகத்தின் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ளும் நோக்கில் முறைப்படி ஓர் இடத்தை அகழ்ந்து, சான்றுகளாகக் கிடைத்த பொருள்களை முறையாகத் திரட்டி ஆராய்வதாகும்.

வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வழியாகச் சங்க கால மக்களின் வாழ்க்கை முறை குறித்த சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டின் அரிக்கமேடு, அழகன் குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவசமுத்திரம் ஆகிய இடங்களிலும், கேரளத்தின் பட்டணம் என்ற இடத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிட்டியுள்ளன.

புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேடு என்ற இடம் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் அகழாய்வு செய்த சங்க காலத் துறைமுகப்பட்டினம் ஆகும். பிரிட்டனைச் சேர்ந்த சர் இராபர்ட் எரிக் மாட்டிமர் வீலர், பிரான்சைச் சேர்ந்த ஜே.எம்.கசால், நம் நாட்டின் ஏ.கோஷ், கிருஷ்ணா தேவா ஆகிய தொல்லியல் அறிஞர்கள் இங்கே அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டனர். சரக்குக் கிடங்கு, தொட்டிகள், உறைகிணறுகள், தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரம் அங்கே இருந்தமையை அவர்கள் கண்டறிந்து வெளிப்படுத்தினர்.

பழங்கால மக்கள் வாழ்ந்த இடங்களையும் கட்டுமானங்களையும் நினைவுச் சின்னங்களையும் நிர்வாகம் செய்யும் அமைப்பு இந்தியத் தொல்லியல் துறை ஆகும். இது மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. தமிழக அரசின் கீழ் தமிழ்நாடு தொல்லியல் துறை இயங்குகிறது. இந்தியாவில் உள்ள தொல்லியல் பொருட்களைப் பாதுகாப்பதற்கு இந்தியக் கருவூலம் மற்றும் புதையல் சட்டம் (1878), பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம் (1972), பழமைவாய்ந்த நினைவுச் சின்னங்கள், தொல்லியல் ஆய்வுக் களங்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் சட்டம் (1958) ஆகியவை வகுக்கப்பட்டுள்ளன.

பண்பாட்டுப் பொருள்கள், செங்கற் கட்டுமானங்கள், மணிகள், சங்கு வளையல்கள், அணி புடைப்பு மணிகள், செதுக்கு வேலைப்பாடுகள் கொண்ட பொருள்கள் போன்றவற்றைத் தொல்லியலாளர்கள், அகழாய்வு மேற்கொண்ட இடங்களில் கண்டறிந்தனர். தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்ட சுடுமண்பாண்ட ஓடுகளும், பல வகை நாணயங்களும் அங்கே கிடைத்துள்ளன. இத்தொல்பொருள்கள், அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள், கலைகள், கைவினைத்திறன், தொழிலகங்கள் ஆகியவை குறித்து அறிந்துகொள்ள உதவுகின்றன.

அணி புடைப்புமணிகள் என்பவை, விலையுயர்ந்த நவமணிகளின் மேற்புறத்தில் வேலைப்பாடுமிக்க உருவங்கள் செதுக்கப்பட்டவையாகும்.

செதுக்கு வேலைப்பாடுடைய பொருள்களில் உருவங்கள், உட்குழிவாகச் செதுக்கப்பட்டிருக்கும்.

**1. தமிழகத்தில் அகழாய்வு மேற்கொண்ட இடங்கள் யாவை?**

- அரிக்கமேடு, அழகன் குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவ சமுத்திரம் ஆகிய பகுதிகளில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**2. இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை அகழாய்வு செய்த சங்ககால துறைமுகம் எது?**

- புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு என்ற பகுதியே இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை அகழாய்வு செய்த சங்க கால துறைமுகம் ஆகும்.

**3. தொல்லியல் பொருட்கள் பாதுகாப்பிற்காக பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் யாவை?**

- இந்திய கருவூலம் மற்றும் புதையல் சட்டம், 1878
- பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைக்கருவூலங்கள் சட்டம், 1972
- தொல்லியல் ஆய்வுக்களங்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் சட்டம், 1958

**4. சுடுமண்பாண்ட ஓடுகளில் எவ்வகையான எழுத்துக்கள் காணப்பட்டன?**

- சுடுமண்பாண்ட ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துக்கள் காணப்பட்டன.

**5. அகழாய்வு மூலம் நாம் அறிவன யாவை?**

- அகழாய்வு மூலம் சங்க கால மக்களின் வாழ்க்கை முறைகள், கலைகள், கைவினைத்திறன், தொழிலகங்கள் ஆகியவை குறித்து அறிந்து கொள்ள முடியும்.

## வினா எண் 5

கட்டடக்கலையும் சிற்பக்கலையும் போன்றே ஓவியக்கலையும் கண்ணால் கண்டு மகிழத்தகுந்த கலையாகும். அழகினைப் பாராட்ட, புலவர்கள் ஓவியத்தை உவமையாகக் கூறுவர். ஓவியக்கலை தொன்மையான வரலாற்றினை உடையது. இயற்கையோடு கலந்து வாழ்ந்த மக்கள், தாங்கள் கண்ட காட்சியினையும் வேட்டைக் காட்சிகளையும் வரைந்து மகிழ்ந்தனர். தொல்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களின் மேல், எழுத்துக்களும் பல உருவங்களும் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் ஓவிய எழுத்துக்களே வழக்கில் இருந்தன.

ஒவ்வு என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதே ஓவியம். ஒவ்வு என்பதற்கு ஒன்றைப் பற்றி அல்லாத ஒன்றைப் போலவே இருத்தல் என்று பொருள். இச்சொல்லிலிருந்து தோன்றிய ஓவு, ஒவ்வு போன்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கின்றன. தான்கண்ட காட்சியை அப்படியே வரைவது காட்சி ஓவியம், மனத்தில் கற்பனை செய்ததை வரைதல் கற்பனை ஓவியம் ஆகும். தொல் பழங்கால மனிதர் சொற்களை அறியும் முன்பே தம் எண்ணங்களைக் காட்சிகளாக உணர்த்தக் கற்றுக் கொண்டனர். தமக்கு மகிழ்வளித்த வேட்டைக் காட்சிகளையும் பிறவற்றையும் ஓவியங்களாகக் குகைகளில் தீட்டியுள்ளனர். பச்சிலைச்சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகியனவற்றைக் கொண்டு அவ்வோவியங்களுக்கு வண்ணம் தீட்டினர்.

ஓவியத்தை வட்டிகைச் செய்தி, சித்திரச் செய்தி என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பழங்காலத்தில் சுவர் ஓவியங்களே பெரிதும் காணப்பட்டன. அதனால்தான், சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை, சுவரை வைத்தல்லவா சித்திரம் வரைய வேண்டும் என்ற பழமொழிகள் தோன்றின. வளைந்தகோடு, கோணக்கோடு, நேர்கோடு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்கள் எழுதப்பட்டன. இவ்வாறான கோட்டோவியங்களுக்குப் புனையா ஓவியம் என்று பெயர். இதனை வரி வடிவ ஓவியம் என்றும் அழைப்பர். மடலேறுதலின் பொழுது பனை ஓலையில் வரைந்த கோடுகளால் ஆன ஓவியம் வரிவடி ஓவியமாகும். நெடுநல்வாடையில் முதன்முதலாக வரிவடிவம் பற்றிய செய்தி கிடைக்கின்றது. புனையா ஓவியத்தில் பலவித

வண்ணங்களைப் புனைந்து அமைக்கும் ஓவியம், முழுஓவியம் எனப்படும். ஓவியம் வரைவோரை ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவியவல்லோன், ஓவியப்புலவன் என்றும் அழைப்பர்.

காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலியப் பகுதிகளில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் புடைப்பு ஓவியங்களைக் கொண்டு தொன்மைக்கால மக்களின் ஓவியத்திறனை உணரலாம். கீழடியில் நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன.

மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் பிரதிமை என அழைக்கப்படுகின்றன. தெய்வம் வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் படிமை எனப்படுகின்றன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், பெரிய வீடுகள் போன்றவற்றின் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டன. மேலும் வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கருப்பு வண்ணத்தால் கோட்டோவியங்கள் வரையப்பட்டன. இவற்றின் மேல் பல வண்ணங்கள் தீட்டும் வழக்கம் இருந்தது. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டது. நடுகல்லில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கும் முன்பே ஓவியமாக வரைந்து கொள்வர். அவ்வோவியத்தைப் பார்த்துக் கல்லில் செதுக்குவர். எழுத்து என்ற சொல்லுக்கு ஓவியம் என்றே பொருள் கொள்வர்.

பண்டைய தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காகத் தங்கள் அரண்மனைகளிலும் கோயில்களிலும் ஓவியமாடம் என்ற தனிப்பகுதியை அமைத்தனர். இச்செய்தியினை இலக்கியங்கள் மூலம் அறியலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார். சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் கலைகள் தழைத்து ஓங்கின. பனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்கள் பல்லவர் காலக் கலைத் திறனைக் காட்டுவனாக அமைந்துள்ளன. தஞ்சையில் வரையப்பட்டுள்ள சிவபெருமான், நாட்டியமாடும் பெண்கள், சேரமான் பெருமாள் நாயனார், இராஜராஜன், கருவூர்த்தேவர் ஓவியங்கள் சோழர் காலத்தவை ஆகும். விஜயநகர நாயக்கர் காலத்து ஓவியங்களைத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணமுடிகின்றது.

**1. ஓவியங்களுக்கு எவ்வகையான பொருட்கள் கொண்டு வண்ணம் தீட்டினர்?**

- பச்சிலைச்சாறு, செம்மண், விலங்கினங்களின் கொழுப்பு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்களுக்கு வண்ணம் தீட்டினர்.

**2. ஓவியர்களுக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் யாவை?**

- ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவிய வல்லோன், ஓவியப் புலவன் ஆகியவை ஓவியர்களுக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் ஆகும்.

**3. மக்கள் கூட்டத்தையும் தெய்வ வடிவங்களையும் வெளிப்படுத்தும் ஓவியங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

- மக்கள் கூட்டத்தை வெளிப்படுத்தும் ஓவியம் பிரதிமை என்றும், தெய்வ வடிவங்களை வெளிப்படுத்தும் ஓவியம் படிமை என்றும் அழைக்கப்பட்டன.

**4. பண்டைய மன்னர்கள் ஓவியத்திற்கு வழங்கிய அங்கீகாரத்தை விளக்குக.**

- பண்டைய மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காக அரண்மனைகளிலும் கோவில்களிலும் ஓவிய மாடம் அமைத்தனர்.
- பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

**5. பல்லவர் கால ஓவியத்திறனுக்காக சான்றுகள் யாவை?**

- பனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்கள் பல்லவர்கால ஓவியத்திறனுக்கான சான்றுகள் ஆகும்.

## சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல்

### வினா எண் 1

**வேளாண்மை – பழ வகை – கைத்தொழில் – விலையுயர்ந்த கற்கள் – அயல்நாட்டு வணிகம் – உறையூர் – பருத்தி ஆடை – தொல்லியல் சான்றுகள் – வணிகர்கள் – பண்டமாற்று முறை**

வேளாண்மை முக்கியத் தொழில் ஆகும். நெல் முக்கியப் பயிர். கேழ்வரகு, கரும்பு, பருத்தி, மிளகு, இஞ்சி, மஞ்சள், இலவங்கம், பல்வேறு பழவகைகள் போன்றவையும் பயிரிடப்பட்டன. பலா, மிளகு இரண்டுக்கும் சேர நாடு புகழ் பெற்றதாகும். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் நெல் முக்கிய பயிராகும்.

சங்க காலத்தில் கைத்தொழில்கள் ஏற்றம் பெற்றிருந்தன. நெசவு, உலோகத் தொழில், தச்சுவேலை, கப்பல் கட்டுதல், மணிகள், விலையுயர்ந்த கற்கள், தந்தம் ஆகியவற்றை பயன்படுத்தி ஆபரணங்கள் செய்தல் போன்றவை ஒருசில கைத்தொழில்களாகும். இத்தகைய பொருட்களுக்கு நல்ல தேவைகள் இருந்தன. ஏனென்றால் சங்க காலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பருத்தி மற்றும் பட்டு இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகள் உயர்ந்த தரமுடையதாக இருந்தன. நீராவியை விடவும், பாம்பின் தோலைவிடவும் மெலிதான துணிகள் நெய்யப்பட்டதாக சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உறையூரில் உற்பத்தி

செய்யப்பட்ட பருத்தியாடைகளுக்கு மேலை நாடுகளில் பெரும் தேவை காணப்பட்டது.

உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வர்த்தகம் சங்க காலத்தில் நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்கள், கிரேக்க – ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இது குறித்த ஏராளமான தகவல்களைத் தருகின்றன. வண்டிகளிலும் விலங்குகள் மேல் ஏற்றப்பட்ட பொதிகளின் மூலமாகவும், வணிகர்கள் பொருட்களை கொண்டுசென்று விற்பனை செய்தனர். உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையின் அடிப்படையிலேயே நடைபெற்றது.

### வினா எண் 2

**கோயில்கள் – சொற்பொழிவுகள் – பண்பாட்டு மையங்கள் – ஆகமங்கள் – ஆன்மா – கலைகள் – திருமுறை – நுண்கலைகள் – புகலிடம் – ஊர்ப்பணி மன்றங்கள் – பழமொழி – மனிதநேயம்**

கோயில்கள் மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தி மனித நிலைக்கு மேலும் தெய்வ நிலைக்கும் உயர்த்தப் பல அரிய கருத்துக்களை கேட்டு பயன்பெற சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டை விளக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்று கோயில்கள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தன.

மக்கள் தன் நிலையில் உயர மக்கள் பணி செய்ய, தியாக உணர்வு பெற பக்தியும், அன்பும் அவசியம் என உணர்ந்தனர். சிறந்த வழிபாட்டு முறை, ஆகமங்களின் சாரமான மந்திரவழிபாடு கொண்ட கோயில்கள் பக்தியின் பிறப்பிடமாகத் திகழ்ந்தன.

கடவுள் இருக்குமிடத்தை மோட்சம், வைகுண்டம், சிவலோகம், வீடுபேறு எனும் வார்த்தைகளால் உணர்த்தினர். சங்கத்தமிழ் அன்புள்ளம் கொண்டவர் உள்ளம், ஏழையின் சிறப்பு இவற்றில் இறைவன் இருப்பதாக எண்ணி வாழ்ந்தனர். அவ்விடத்தை கோயிலாகக் கொண்டு சிறப்பித்தனர்.

வயது என்பது உயிரோடு கூடிய உடலுக்கு உண்டு என்றும் ஆன்மாவிற்கு இல்லை. ஆன்மா தான் எதிலிருந்து வந்ததோ அதிலே சேர முயன்று வருதலை லயமாகுதல் என்பர். இவ்விடங்கள் பெரும்பாலும் கோயிலாகவே இருந்தன. ஆதலால் கோயில்கள், ஆன்மா லயமாகுமிடங்களாக இருந்தன. எனவே கோயில்களை ஆலயங்கள் எனவும் அழைத்தனர்.

கோயில்களில் கலைகள் வளர்ந்து சிறந்தாலும் மக்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்தாலும் கோயில்கள் நுண்கலைகள் வளருகின்ற இடமாகத் திகழ்கின்றன.

தேவார, திருவாசகப் பாடல்கள், சிவன் கோயில்களில் பாடப்பெற்றன. பெரியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் போதிக்கப்பட்டன. கோயில்கள் திருமுறை வளருமிடமாக இருந்தன.

மழை, புயல், வெள்ளம் போன்ற காலங்களில் மக்களுக்குப் புகலிடமாகத் திகழ்ந்தவை திருக்கோயில்களாகும். மேலும் திருமணம், விழாக்கள் போன்றவை கோயில்களின் மண்டபங்களில் நடைபெற்று இருந்தன. எனவே கோயில்கள் சமுதாய புகலிடமாகவும், ஊர்ப்பணி மன்றங்களாகவும் இருந்தன என அறியமுடிகிறது.

தமிழர் வாழ்வு கோயிலோடு இணைந்ததாகவே அமைந்தது. ஔவையாரும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றார். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. இக்கோயில்கள் மூலம் ஆன்மீகம் வளர்ந்தது. மக்களிடையே ஒற்றுமை ஓங்கி மனித நேயம் மலருமிடமாகத் திருக்கோயில்கள் திகழ்ந்தன என்பதை அறிகிறோம்.

### வினா எண் 3

**நடுகற்கள் – வீரமரணம் – நினைவுக்கல் – தொல்காப்பியர் – களிமண் – படிம உருவங்கள் – அகழாய்வுகள் – சுதைச் சிற்பங்கள் – இந்திர விழா – மணிமேகலை – சமண சமயம் – தீர்த்தங்கரர்கள்**

நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நடுகல் என்பது போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயரும் பெருமையும் உழுது நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும். இது வீரக்கல் அல்லது நினைவுக்கல் என்றும் அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் முறையாக வளர்ந்தது. தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது. விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது கதிரை எடுப்பு, உருவாரம் எனப்படும். கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் என்றும் அழைக்கப்படும்.

சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பரிபாடல் மூலம் அறியலாம். கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமண் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சுதைச் சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது. சிற்பக் கலைஞர்களை மண்ணீட்டாளர் என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேகலையின் மூலம் அறியலாம். பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன. தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிகை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர். பின்னரே புத்தர் திரு

உருவங்களை வணங்கும் முறை தோன்றியது. சமண சமயத்தில் அருகப் பெருமானின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

### வினா எண் 4

**மனிதர்கள் – பணம் – வேட்டையாடுபவர்கள் – கருவிகள் – சேகரிப்பு – நெருப்பின் பயன் – மண்பாண்டங்கள் – உணவுப் பொருட்கள் – உபரி – விளைபொருள் – முதல் வடிவம் – பண்டமாற்றம்**

மனிதர்கள் எப்போதுமே பணத்தினைப் பயன்படுத்தி வந்தார்களா என்று கேட்டால், இல்லை என்பதே பதில் ஆகும். அப்படியானால் மனித வாழ்வில் பணம் எப்போது எந்த வடிவில் அறிமுகமானது? அது எவ்வாறு காலப்போக்கில் புதிய வடிவங்கள் பெற்றது? என்பன குறித்து இப்பாடத்தில் அறிந்து கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில் மனிதர்கள் வேட்டையாடுபவர்களாகவும் உணவு சேகரிப்பவர்களாகவும் தமக்கான உணவைப் பெற்றனர். அவர்கள் குகைகள், காடுகளில் வாழ்ந்தனர். படிப்படியாக வேட்டையாடுவதற்காகவும் உணவு சேகரிப்பதற்காகவும் கருவிகளைக் கண்டுபிடித்தனர். தொடர்ந்து நெருப்பின் பயனையும் வேளாண்மை செய்யவும் கற்றுக் கொண்டனர். மண்ணைப் பயன்படுத்தி தமக்கான வீடுகளைக் கட்டிக்கொண்டு, ஒரே இடத்தில் வாழத் தொடங்கினர். மேலும் மண்ணைப் பயன்படுத்தி மட்பாண்டங்களையும் தயாரித்தனர்.

வேளாண்மை மூலம் உற்பத்தி அதிகரித்ததால் கைவினைப் பொருள் தயாரிப்பதிலும் ஈடுபட்டனர். இவ்வாறு உபரியாக மீதமாகும் உணவுப் பொருள்களையும் தாங்கள் தயாரித்த மண்பாண்டம் போன்ற பொருள்களையும் அவை தேவைப்படும் மனிதர்களுக்குப் பரிமாற்றம் செய்தனர். எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயத்திடம் அதிக உணவுப் பொருட்கள் இருந்தால் அவற்றை மண்பாண்டங்கள் உபரியாக வைத்திருப்பவர்களிடம் பண்ட மாற்றம் செய்தனர். அதேபோல், ஒரு பகுதியில் அதிகம் உற்பத்தியாகும் தானியம் இன்னொருப் பகுதியில் அதிகம் காணப்படும் விளைபொருளுக்குப் பண்டமாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு பண்டமாற்றம் செய்யப்பட்ட பொருள்களே வணிகத்தின் முதல் வடிவம் என்று கூறலாம்.

### வினா எண் 5

**தொல்காப்பிய நூற்பா – வீடு தேடி வருவோர் – விருந்தோம்பல் – சங்க இலக்கியங்கள் – உணவின்றி பயணம் – முகமலர்ச்சி – விண்மீன்கள் – ஒளிவீசும் கிண்ணங்கள் – இன்முகம் – மூங்கில் – மடைநூல்**

விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள விருந்து என்னும் சொல் புதியது என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தோன்றிய விருந்தினர் என்ற சொல்லும் அறிந்தவர், தெரிந்தவராகிய சுற்றத்தார் அல்லது முன்பின் அறியாதவர்கள், வீடு தேடி வருவோரையும் குறிப்பதாகும். இவர்களை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பலாகும். பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு, நம் தமிழர்களையே சாரும். தொல்காப்பியக் காலம் முதல் இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வருகிறது.

விருந்தோம்பும் பண்பு கணவன், மனைவியின் தலையாய கடமை எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெடும்பயணம் மேற்கொள்பவர்களால் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடன்கொண்டு செல்வது என்பது இயலாத செயல். அவ்வாறு உணவின்றிப் பயணம் மேற்கொண்டு வருபவர்களுக்கு வழியிலுள்ள வீடுகளில் உள்ளோர் உணவளிப்பர். சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன், விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர், அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவளிப்பர் என்பதை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

விருந்தினர் இரவில் காலம் காத்து வரினும் மனம் மகிழ்ந்து விருந்தோம்பினர். இரவில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நெய் கலந்த இறைச்சியைச் சமைத்துக் கொடுப்பது அன்றைய வழக்கமாகும். பசி என்று வந்தவர்களை வெளியே நிற்க வைத்துவிட்டுத் தாம் மட்டும் உணவு உண்பதை விரும்ப மாட்டார்கள். இதனையே, விருந்தோம்பல் முறை என்று தமிழர்கள் வகுத்திருந்தனர். விருந்தினரிடம் முகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தமக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசுவைப் போல அன்புகாட்டி நெகிழச் செய்வர். விருந்தினர் மனம் மகிழும்படி விண்மீன்கள் போன்ற ஒளிவீசும் கிண்ணங்களில் பல வகையான உணவினைப் படைப்பர்.

தமிழர்கள், தமது வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்த பிறகே, தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஒருநாள் சென்றாலும். இருநாள் சென்றாலும் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போன்றே இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பினர் என்பதை ஔவையார் பாடல் மூலம் அறியலாம். ஆயர்கள், மாடு மேய்க்கப் புறப்படும்போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு, மாட்டின் கழுத்தில் கட்டுவர். காட்டு வழியே செல்லும்போது, அவ்வழியாகப் பசியோடு வருபவர்களுக்குத் தாம் வைத்திருக்கும் உணவினைப் பகிர்ந்து கொடுப்பர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை மடைநூல் குறிப்பிடுகிறது. உணவு பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை அந்நூல்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

TEST 7
வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

## கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது)

**1. திருவாரூர் கோவில் தேரோட்டத்தை கருத்தில் கொண்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கும் விதமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பிறப்பிக்கப்படும் வகையில் அறிக்கை ஒன்றை எழுதிடுக.**

ந.க.எண் அ 1 / 431 / 2023

காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருவாரூர்

நாள் : 25 / 02 / 2023

**பொருள் :** திருவாரூர் கோவில் தேரோட்டத்தின்போது காவல்துறை பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து

**பார்வை :** மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து அறிவுறுத்தல் கடிதம்

1. அனைத்து காவல்நிலையங்களில் வாகனங்கள் தயார்நிலையில் நிறுத்தப்பட வேண்டும்.
2. காவல் நிலைய ஆய்வாளர்களை அனைவரும் அனுமதியின்றி விடுப்பு ஏதும் எடுக்கக் கூடாது.
3. ஒவ்வொரு பணிக்கும் பிரத்யேகமாக ஒரு அணியினர் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. அவரச உதவி எண் எவ்வித தடையுமின்றி தனது சேவையை வழங்குவதை உறுதி செய்திடல் வேண்டும்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
திருவாரூர்

பெறுநர்
அனைத்து காவல் நிலையங்கள்

**2. எவ்வித முன்னறிவிப்புமின்றி தொடர் விடுப்பில் இருக்கும் கிராம நிர்வாக அலுவலரால், அலுவலக நடவடிக்கைகளில் தொய்வு ஏற்படுகிறது. அவருக்கான மாற்று அதிகாரியை நியமிக்கக் கோரி பெறப்பட்ட கோரிக்கையை அடுத்து வருவாய் கோட்டாட்சியருக்கு வருவாய் வட்டாட்சியர் எழுதும் விதமாக கடிதம் வரைக.**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.மா.சரவணன் | வருவாய் கோட்டாட்சியர் |
| வருவாய் வட்டாட்சியர் | தூத்துக்குடி. |
| தூத்துக்குடி | |

ந.க.எண் அ4 / 5100 / 2023
நாள் : 25 / 02 / 2023
விகாரி ஆண்டு, மாசித்திங்கள் 25ஆம் நாள்

ஐயா,

**பொருள் :** பணியமைப்பு தூத்துக்குடி மாவட்டம்

உட்கோட்டம் : தூத்துக்குடி

வட்டம் : தூத்துக்குடி கிராமம் : தூத்துக்குடி

திரு.ராஜா

கிராம நிர்வாக அலுவலர் – பணிக்கு வராமல் தன்னிச்சையாக விடுப்பு துய்த்தல் – மாற்று அலுவலர் நியமனம் கோருதல்

**பார்வை**

1. இவ்வலுவலக கடிதங்கள் எண் – க – 2 / 2019
   நாள் : 25 / 02 / 2025 மற்றும் நினைவூட்டுகள்
2. எனது முன்னவரது நேர்முகக் கடிதங்கள்

இவ்வட்ட எல்லைக்குட்பட்ட குளத்தூர் கிராமத்தில், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவரும் திரு ரவி என்பவர், அவ்வப்போது தன்னிச்சையாக பணிக்கு வருகை புரியாமல் இருந்துள்ளார். மேலும், தனியர் இம்மாதம் முதல் தேதியிலிருந்து எவ்வித தகவலுமின்றி பணிக்கு வருகைபுரியாமல் உள்ளார். இவரது மேற்படி செய்கையினால் அலுவலக பணியில் பெரிதும் குந்தகமாகவும், பொதுமக்களுக்கு இடராகவும் உள்ளது. எனவே, மேற்படி தனியருக்கு பதிலாக மாற்று நபரை உடனடியாக நியமனம் மேற்கொள்ள கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் தனியாருக்கு மாற்று பணியிடம் வழங்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய
வருவாய் வட்டாட்சியர்

SURESH'

நகல்
மாவட்ட வருவாய் அலுவலர்
தூத்துக்குடி மாவட்டம் – தகவலுக்காக
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**3. மக்கள் தொடர்பு திட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுத்து அதற்கான அறிக்கையினை அளிக்கும்படி மாவட்ட ஆட்சித்தலைவர் வருவாய் கோட்டாட்சியருக்கு எழுதும் விதமாக ஒரு நேர்முகக் கடிதம் வரைக.**

அபிநயா மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி மாவட்டம்,

நே.மு.க. எண் எம் 2 / / 2023

நாள்: / / 2019

எனதன்பார்ந்த திரு. ராமமூர்த்தி,

பொருள் : மக்கள் தொடர்பு திட்டம் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி

உட்கோட்டம் தூத்துக்குடி வட்டம் – மடத்தூர் கிராமத்தில்

நடத்தப்பட்டது பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை

விவரம் – கோருதல்.

**பார்வை:**

1. இவ்வலுவலக கடிதம் எண் எம்2 / 2019
நாள்: . 04. 2019 மற்றும் பல.
2. தங்களது கடித எண் ஆ2 / 2019,
நாள்: 04 / 2019
3. தங்கள் முன்னவர் நேர்முகக் கடிதம் எண் ஆ-2 / 2019,
நாள்: 28-05-2019

பார்வையில் காணும் கடிதங்கள் மீது தங்களது உடனடி கவனம் ஈர்க்கப்படுகிறது.

வட்டம், மடத்தூர் கிராமத்தில் கடந்த 03-04-2019 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் குறித்த பட்டியலினை அனுப்பி வைக்கக் கோரி பல கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டும், தங்களிடமிருந்து முடிவான பதில் பெறப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுவதுடன், இப்பொருள் தொடர்பான விரிவான அறிக்கையினை வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதில் காலதாமதமாகிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே, இந்நேர்வில் தாங்கள் நேரடி தனி கவனம் செலுத்தி, உரிய படிவ அறிக்கையினை வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெற்று தங்களது குறிப்புரையுடன் இம்மாத இறுதிக்குள் இவ்வலுவலகத்திற்கு தனிநபர் மூலமாக சேர்ப்பிக்க அறிவுறுத்துகின்றேன். இந்நேர்வில் மேலும் காலதாமதம் கூடாது என்பதை கண்டிப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அபிநயா

பெறுநர்
வருவாய் கோட்டாட்சியர்
தூத்துக்குடி உட்கோட்டம்
நகல்:
வருவாய் வட்டாட்சியர்
தூத்துககுடி வட்டம்
உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

**4. தென்காசி மாவட்டத்தில் ஒரு நபரின் நிலத்திற்கு பட்டா வழங்கக்கோரி வருவாய் கோட்டாட்சியருக்கு அம்மாவட்ட ஆட்சித்தலைவர் வரையும் விதமாக ஒரு அலுவலகக் கடிதத்தை வரைக.**

அனுப்புநர் பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய் கோட்டாட்சியர்
தென்காசி மாவட்டம் தென்காசி உட்கோட்டம்
ந.க.எண்: இ-3 /5002/ 2022, நாள்: 25/ 03 / 2022

விகாரி ஆண்டு, ஆனித் திங்கள் 6 ஆம் நாள்

அய்யா,

**பொருள்** : நிலம் தென்காசி மாவட்டம் : தென்காசி உட்கோட்டம் கரிசல்குளம் கிராமம் : 410 புல எண்

வினிதா பட்டா வழங்கக் கோரியது – குறித்து.

பார்வை : திரு சரவணன்

கடிதம் நாள்: 25 / 03 / 2022

பார்வையில் காணும் கடிதத்தின் நகல் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. வினிதா என்பவரது கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தக்க பதிலினை தனியருக்கு 30 தினங்களுக்குள் நேரடியாக தெரிவித்து, அவ்விவரத்தினை இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

மாவட்ட ஆட்சியருக்காக
இணைப்பு : ஒன்று
நகல் : வினிதா
62 / சாமிநகர்
தென்காசி.

**5. கொரோனா தொற்றை ஒழிக்கும் பொருட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறைகளின் செயல்பாட்டினை முடுக்கிவிடும்படியான ஒரு அறிவுறுத்தல் அறிக்கையை மாவட்ட ஆட்சியர் அனைத்துத் துறைகளுக்கும் வெளியிடும்படியான ஒரு கடிதம் வரைக.**

ந.க.எண் அ 7 / 253 / 2023
மாவட்ட ஆட்சியர் அலுவலனம்
சேலம்

நாள் : 25 / 02 / 2023

**பொருள் :** கோவிட் - 19 தடுப்பு குறித்து அனைத்துத் துறைகளுக்குமான அறிவுறுத்தல்கள்

**பார்வை :** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து அறிவுறுத்தல் கடிதம்

1. பொது இடங்களில் சமூக இடைவெளியை மக்கள் பின்பற்றுவதை சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.
2. தொற்று அதிகம் உள்ள பகுதியைச் சார்ந்த அரசுத் துறைகள் எவ்வித விடுப்புமின்றி செயலாற்ற வேண்டும்.
3. முகக்கவசம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதை கண்காணிக்க வேண்டும்.
4. தொற்று பாதிப்பு அதிகம் ஏற்படாதவண்ணம் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்
சேலம்

பெறுநர்
மாவட்ட அனைத்துத் துறைகள்

**6. அரசுப் பணியாளர் சங்கங்கள் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பங்களுக்காக அத்தனை அரசுப் பணியாளர்களும் தங்களது ஒரு நாள் ஊதியத்தை அவர்களுக்கு உதவித்தொகையாக வழங்குவதற்காக அரசுத் தலைமைச் செயலாளருக்கு அனுமதி வேண்டி எழுதுவதாக ஒரு கடிதம் வரைக.**

நாள் : 27.06.2022
பிலவ வருடம், ஆனி - 13
திருவள்ளுவர் ஆண்டு -2052

அனுப்புநர்
அரசு பணியாளர் சங்கங்கள்,
தமிழ்நாடு.

பெறுநர்
அரசு தலைமைச் செயலாளர்,
தமிழ்நாடு.

ஐயா

பொருள் : தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒருநாள் ஊதியத்தை வழங்குதல் தொடர்பாக...

வணக்கம்,

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து தமிழக மக்களைப் பாதுகாக்க எடுக்கப்படும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு நாள் ஊதியத்தினை தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்குவதற்கு அரசுப் பணியாளர் சங்கங்கள் அனைத்தும் ஒரு மனதாக முடிவெடுத்துள்ளன. இதற்கு அனுமதியளித்த அரசு ஆணைப் பிறப்பிக்க வேண்டுகிறோம்.

அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் சொந்த விருப்பத்தின் பேரிலேயே ஒருநாள் ஊதியத்தை வழங்க முடிவெடுத்துள்ளோம் என்று உறுதியளிக்கின்றோம்.

நன்றி

(கையொப்பம்)
பிரதிநிதிகள், அரசுப் பணியாளர் சங்கங்களின் சார்பாக.

இடம் : சென்னை
நாள் : 27.05.2022

TNPSC TARGETING
வெற்றியின் முகவரி
SINCE 2006
SURESH' IAS ACADEMY
BANK | TNPSC | SSC | RAILWAY | POLICE | TET

TEST 8
வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key

## சொற்களைப் பயன்படுத்தி சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுதல்

1. விருந்தோம்பல்
   - தமிழர்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்தவர்களாக விளங்கியதாக சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.
2. இறையாண்மை
   - இந்தியா இறையாண்மைமிக்க நாடு ஆகும்.
3. தொன்மை
   - அகழாய்வுகள் மூலம் தொன்மையான வரலாற்றினை அறிய முடிகிறது.
4. பெருமிதம்
   - தொழில்நுட்பத் துறையில் இளைஞர்களின் வளர்ச்சியைக் கண்டு இந்தியா பெருமிதம் கொள்கிறது.
5. பேராசை
   - பேராசை என்பது மனிதனை அழிக்கக்கூடிய ஒன்றாகும்.
6. அதிநவீனம்
   - அதிநவீன கண்டுபிடிப்புகள் மனித வாழ்வியலை பெரிதும் பாதிக்கிறது.
7. கூட்டுமுயற்சி
   - கடுமையான செயல்களையும் கூட்டுமுயற்சி இருந்தால் சாத்தியம் ஆக்கலாம்.
8. அசாதாரணம்
   - சிறந்த எண்ணங்களை உடையவர்கள் அசாதாரணமான செயல்களை எளிதில் செய்து முடிக்க முடியும்.
9. பிராந்தியம்
   - நிர்வாகக் காரணங்களுக்காக பெரிய நிலப்பரப்புக்கள் பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டன.
10. கல்விமுறை
    - ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் கல்விமுறை அடிப்படையிலேயே நிகழ்கிறது.
11. பழக்கவழக்கம்
    - வளரும் தலைமுறைக்கு சிறந்த பழக்கவழக்கங்களை அறிமுகம் செய்திடல் வேண்டும்.
12. சீர்திருத்தம்
    - முற்போக்குச் சிந்தனையுடையவர்களால் பல்வேறு சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டன.
13. பரவலாக்கம்
    - அரசுத் திட்டங்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் பரவலாக்கம் செய்யப்படுகிறது.
14. பகுத்தறிவு
    - பகுத்தறிவு மூடநம்பிக்கைகளை கடந்து வருவதற்கான ஒரு முக்கியப் பண்பாகும்.
15. உரிமைமீறல்
    - அதிகார வர்க்கத்தின் உரிமைமீறல் ஒரு கண்டிக்கத்தக்க குற்றமாகும்.
16. பசுமைப்புரட்சி
    - பசுமைப்புரட்சி இந்திய அளவில் பெரிய அளவிலான மாற்றத்தை ஏற்படுத்தியது.
17. வம்சாவளி
    - இந்திய வம்சாவளியினர் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் வெளிநாடுகளில் உள்ளனர்.
18. பிரகடனம்
    - இந்தியர்களுக்கு எதிரான சட்டங்கள் ஆங்கிலேயர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது.
19. ஆட்சிமுறை
    - மன்னர் ஆட்சிமுறையில் போர் அதிகமாக நிகழ்ந்தன.
20. கிராமங்கள்
    - கிராமங்கள் இந்தியாவின் முதுகெலும்புகள் ஆகும்.

## இணைச்சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைத்தல்

1. வேலை - வேளை
   வேலைவாய்ப்பின்மை காரணமாக பெரும்பாலானோர் ஒருவேளை மட்டுமே உணவு உண்கின்றனர்.
2. ஒலி - ஒளி
   அதிக ஒலி எழுப்பும் வாகனங்களும் ஒளியினைக் கொண்ட விளக்குகளும் நகரப் பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளன.
3. தழை - தலை
   ஆதிவாசிகள் தழைகளைக் கொண்டு தங்களது தலைமுடிக்கான மூலிகைகளை உற்பத்தி செய்தனர்.
4. வளம் - வலம்
   வளமானப் பகுதிகளை வலம்வருவது மனதிற்கு இதமாக உள்ளது.
5. இரத்தல் - இறத்தல்
   மருத்துவத்திற்கான இரந்து பெற்ற பணம் பயனளிக்காமல் இறந்து போனான்.
6. இரை - இறை
   ஒவ்வொரு ஜீவராசிகளும் மற்றொரு உயிரினத்திற்கு இரையாக அமைவது இறைவன் வகுத்ததாகும்.
7. உறவு - உரவு
   உறவுகளால் சூழப்பட்ட ஒருவன் உரமிகுந்த வாழ்வினை எதிர்கொள்கிறான்.
8. உரை - உறை
   அறிஞர் பெருமக்களின் உரை பார்வையாளர்களின் வாழ்விற்கான உறையாக அமைகிறது.
9. பரவை - பறவை
   பரவையைக் கடந்து பறக்கும் திறன் பெற்ற பறவைகள் உள்ளன.

SURESH

10. விரல் – விறல்
தன்னுடைய பத்து விரல்களையும் நம்பி உழைப்பை அளித்தவன் விறல்களைப் பெறுகிறான்.
11. நிரை – நிறை
தற்சார்பு பொருளாதாரத்தில் எண்ணிலடங்கா நிரைகளைக் கொண்டவன் நிறைவான வாழ்வை வாழ்கிறான்.
12. வறுத்தல் – வருத்தல்
மீனை வறுக்கும்பொழுது ஒரு உயிர் வருத்தப்படுவதாக உணர்கிறேன்.
13. அறை – அரை
வீட்டின் ஒரு அறையில் அரைப்பகுதி புத்தகங்களால் நிறைக்கப்பட வேண்டும்.
14. கரை – கறை
கிராமங்களில் துணிகளை கரைகளில் வைத்து கறைபோக துவைத்தனர்.
15. பரி – பறி
காட்டுப்பகுதியில் கொள்ளையர்கள் பரியில் வந்து பொருட்களை பறித்துச் சென்றனர்.
16. கணை – கனை
போரில் கணை பாய்ந்ததால் குதிரை வலியில் கனைத்தது.
17. காண் – கான்
கண்களால் காண்பதற்கு மிகவும் அழகானது கான் ஆகும்.
18. வண்மை – வன்மை
வண்மை குணம் உள்ளோர்க்கு தங்களது சுற்றத்தாரே வன்மை ஆவர்.
19. தனி – தணி
தகவல் தொழிநுட்பம் தனித்து செயல்பட்டு பேரிடர் தாக்கத்தை தணித்தது.
20. திண்மை – தின்மை
திண்மையுடையோர் தின்மை செய்வதில்லை.

## பிரித்தெழுதுதல்

1. திருவாரூர்நான்மணிமாலை
திருவாரூர் + நான்கு + மணிமாலை
2. அணிவதாலல்லவோ
அணிவதால் + அல்லவோ
3. குற்றியலுகரம்
குறுமை + இயல் + உகரம்
4. கண்டபோதெல்லாம்
கண்ட + போது + எல்லாம்
5. தாய்மையன்பிதனை
தாய்மை + அன்பின் + இதனை
6. வெவ்விருப்பாணி
வெம்மை + இரும்பு + ஆணி
7. விதிப்புற்றஞ்சி
விதிர்ப்பு + உற்று + அஞ்சி
8. மாதிரத்துறை
மாதிரத்து + உறை
9. கண்டெடுக்கப்பட்டுள்ளன
கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன
10. தண்டளிர்ப்பதம்
தண்மை + தளிர் + பதம்
11. செழுங்கனித்தீஞ்சுவை
செழுமை + கனி + தீம் + சுவை
12. நன்கணியர்
நன்கு + அணியர்
13. பச்சூன்
பசுமை + ஊன்
14. இன்னரும்பொழில்
இனிமை + அருமை + பொழில்
15. மனிதாபிமானம்
மனிதம் + அபிமானம்
16. இயல்பீராறு
இயல்பு + இரண்டு + ஆறு
17. ஈண்டினியான்
ஈண்டு + இனி + ஆன்
18. பிணிநோயுற்றோர்
பிணி + நோய் + உற்றோர்
19. புகுந்தீங்கு
புகுந்து + ஈங்கு
20. என்றாகடியமான
என்று + ஆகடியம் + ஆன

## எதிர்மறை வாக்கியமாக மாற்றுதல்

1. தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாட வேண்டும்.
தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாட வேண்டியதில்லை.
2. பொய்யை அகற்றும் மொழி தமிழ் மொழி அல்ல.
பொய்யை அகற்றும் மொழி தமிழ் மொழி ஆகும்.
3. செயற்கை நுண்ணறிவைக் கொண்டு மனிதர் போலச் செயல்பட முடியும்
செயற்கை நுண்ணறிவைக் கொண்டு மனிதர் போலச் செயல்பட முடியாது.
4. கலை, கட்டுரை எழுதாமல் இராள்.
கலை, கட்டுரை எழுதினாள்.
5. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அனுபவம் ஆகும்.
மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அனுபவம் அன்று.
6. நான் நேற்று தேர்வு எழுதினேன்.
நான் நேற்று தேர்வு எழுதிலேன்.
7. நாகரிகம் மனித வாழ்வின் அடிப்படை ஆகும்.
நாகரிகம் மனித வாழ்வின் அடிப்படை அன்று.
8. மக்கள்தொகை அதிகம் உள்ள பகுதிகளில் உணவுப் பஞ்சம் ஏற்படும்.
மக்கள்தொகை அதிகம் உள்ள பகுதிகளில் உணவுப் பஞ்சம் ஏற்படுவதில்லை.
9. உணர்ச்சிமிக்க பேச்சின் மூலம் மக்களிடையே எழுச்சியை விதைக்கலாம்.
உணர்ச்சிமிக்க பேச்சின் மூலம் மக்களிடையே எழுச்சியை விதைக்க முடியாது.
10. நுட்பமாகச் சிந்தித்து அறிவது நுண்ணறிவு ஆகும்.
நுட்பமாகச் சிந்தித்து அறிவது நுண்ணறிவு அல்ல.

SURESH'

11. சிறந்த புத்தகங்கள் மனதை தூய்மை செய்யும்
சிறந்த புத்தகங்கள் மனதை தூய்மை செய்யாது.
12. மீனவர்களின் அன்றாட வாழ்வு சிரமங்கள் நிறைந்தது.
மீனவர்களின் அன்றாட வாழ்வு சிரமங்கள் நிறைந்தது அல்ல.
13. கணினித் துறையில் நம் அறிவை நன்கு வளர்த்துக் கொள்ளலாம்.
கணினித் துறையில் நம் அறிவை நன்கு வளர்த்துக் கொள்ள முடியாது.
14. ஆராய்ச்சியாளர்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெறுகிறார்கள்.
ஆராய்ச்சியாளர்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெறுவதில்லை.
15. பூமியைப்போல் மற்றொரு கோள் கண்டறியப்பட்டுள்ளது.
பூமியைப்போல் மற்றொரு கோள் கண்டறியப்படவில்லை.
16. நான் அறிவியல் பாடம் நன்றாகப் படித்தேன்
நான் அறிவியல் பாடம் நன்றாகப் படித்திலன்.
17. கவிதைகள் மூலம் தேசிய சிந்தனைகளை பாரதி ஊட்டினார்.
கவிதைகள் மூலம் தேசிய சிந்தனைகளை பாரதி ஊட்டவில்லை.
18. இரவு முழுவதும் தூக்கம் இல்லாததால் வகுப்பறையில் தூங்கிவிட்டேன்.
இரவு முழுவதும் தூக்கம் இல்லாததால் வகுப்பறையில் தூங்கவில்லை.
19. வலசைப் பறவைகள் வருகை தமிழகத்தில் குறைந்துள்ளது.
வலசைப் பறவைகள் வருகை தமிழகத்தில் குறையவில்லை.
20. தன்னிச்சையான செயல்பாடு எப்போதும் சிறந்த முடிவைத் தரும்.
தன்னிச்சையான செயல்பாடு எப்போதும் சிறந்த முடிவைத் தருவதில்லை.

**பிழை நீக்கி எழுதுதல்**

1. துறைமுகங்களை வனிக நடவடிக்கைகல் அதிகமாக மேற்கொள்ளப்பட்டன.
துறைமுகங்களை வணிக நடவடிக்கைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டன.
2. மனிதரின் முகபாவணைகளை அரிந்துகொண்டு ரோபோக்கள் செயல்படுகின்றன.
மனிதரின் முகபாவனைகளை அறிந்துகொண்டு ரோபோக்கள் செயல்படுகின்றன.
3. பல்லிக்காலம் அனைவராளும் மறக்கமுடியாத ஒன்றாகும்.
பள்ளிக்காலம் அனைவராலும் மறக்கமுடியாத ஒன்றாகும்.
4. காலத்தின் பயண் அறிந்து விடாமுயர்சியை மேற்கொள்ள வேண்டும்.
காலத்தின் பயன் அறிந்து விடாமுயற்சியை மேற்கொள்ள வேண்டும்.
5. மனம் வீசும் மலரைப் போல மணம் மலர்ந்து இருக்க வேண்டும்.
மணம் வீசும் மலரைப் போல மனம் மலர்ந்து இருக்க வேண்டும்.
6. எத்தனைப் புகள் பெற்றாலும் கற்றோர் செறுக்கு இல்லாமல் வாழ்வர்.
எத்தனைப் புகழ் பெற்றாலும் கற்றோர் செருக்கு இல்லாமல் வாழ்வர்.
7. நோயற்ற வாள்வே குரைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் கூற்று.
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் கூற்று.
8. அடுத்த தழைமுறையின் நலன் கருதி தன்னீரைச் சிக்கமாக பயன்படுத்த வேண்டும்.
அடுத்த தலைமுறையின் நலன் கருதி தண்ணீரைச் சிக்கமாக பயன்படுத்த வேண்டும்.
9. தெற்காசிய நாடுகலில் பஞ்சத்தின் காறணமாக பல்வேறு நாட்டினர் குடியேறினர்.
தெற்காசிய நாடுகளில் பஞ்சத்தின் காரணமாக பல்வேறு நாட்டினர் குடியேறினர்.
10. புழம்பெயர்ந்த தொளிலாளர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்தனர்.
புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்தனர்.
11. மானவர்கள் பாடங்களை மாசற கர்க வேண்டும்.
மாணவர்கள் பாடங்களை மாசற கற்க வேண்டும்.
12. குரைக்கின்ற நாய் கடிக்காது என்பது பழமொழி
குறைக்கின்ற நாய் கடிக்காது என்பது பலமொழி
13. இயர்கை மனித வாழ்விற்கு மிகப்பெறும் வரமாகும்.
இயற்கை மனித வாழ்விற்கு மிகப்பெரும் வரமாகும்.
14. பன்டைய காலச் சிற்பங்கள் நூற்றாண்டுகள் கடந்து பொழிவுடன் திகழ்கின்றது.
பண்டைய காலச் சிற்பங்கள் நூற்றாண்டுகள் கடந்து பொலிவுடன் திகழ்கின்றது.
15. திசைகலை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் கடற்பயனம் மேற்கொண்டனர்.
திசைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் கடற்பயணம் மேற்கொண்டனர்.
16. சங்க இலக்கியங்கல் மனித வாழ்வியலை அரிவதற்கான கருவூலங்களாகத் திகழ்கின்றனர்.
சங்க இலக்கியங்கள் மனித வாழ்வியலை அறிவதற்கான கருவூலங்களாகத் திகழ்கின்றனர்.
17. விவசாயம் பெறும்பாலான மக்கலின் வாழ்வாதாரமாகத் திகழ்கிறது.
விவசாயம் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கிறது.
18. தமிழக அரசின் இளவச சத்துணவுத் திட்டம் மாணவர்களின் ஊட்டச்சத்து மேம்பாட்டை உருதி செய்தது.
தமிழக அரசின் இலவச சத்துணவுத் திட்டம் மாணவர்களின் ஊட்டச்சத்து மேம்பாட்டை உறுதி செய்தது.
19. நாடும் மொழியும் நமதிறு கண்கள் என்ரு பாரதியார் கூறினார்.
நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று பாரதியார் கூறினார்.
20. விழிகலை இழக்க நேரிட்டால்கூட தாய்த்தமிளினை இழந்து விடக்கூடாது.
விழிகளை இழக்க நேரிட்டால்கூட தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது.

SURESH